கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '86 ரூ 2.



வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

B84. GLC. 120 Tm



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்

1986 ஆகஸ்ட் இதழ்
மலர் 4 இதழ் 7
தனிப் பிரதி ரூ 2/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஆண்டு முழுவதும் சில பள்ளிப் பாட நூல்களையே படித்துப் படித்து அலுத்துப் போகும் உங்களுக்கு, நல்ல நல்ல கதைப் புத்தகங்களையும் கவிதைப் புத்தகங்களையும், அறிவியல் நூல்களையும் பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. சிறு வயதிலே நல்ல புத்தகங்களைப் படிக்கின்ற பழக்கம் ஏற்பட்டுவிட்டால், பிற் காலத்தில் சிறந்த நூல்களையெல்லாம் தேடிப் பிடித்துப் படிக்கத் தொடங்கி விடுவீர்கள். இதன் மூலம் நல்ல பண்புகளையும், உயர்ந்த அறிவையும் பெறு வீர்கள்.

உங்களுக்காக வெளிவந்துள்ள புத்தகங்கள் ஒவ்வொரு பள்ளியிலும் இருக்க வேண்டும். அத்துடன் உங்களுக்கான நூல் நிலையம் ஒவ்வொரு ஊரின் மையமான இடத்திலும் இருக்க வேண்டும்.

காரைக்குடியில் கவிஞர் கண்ணதாசனின் நினைவாக ஒரு மண்டபம் கட்டப்படுகிறது. அங்கே குழந்தைகளுக்கான ஒரு நூலகத்தையும் அமைக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், காரைக்குடி யில் மட்டும் குழந்தை நூலகம் இருந்தால் போதுமா? ஒவ்வோர் ஊரிலும் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒவ்வொரு நகரத்திலுமாவது இருக்க வேண்டும்.

சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் நகராட்சித் தலைவர்களும் ஊராட்சித் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அவரவர் ஊருக்குப் பல வகையிலும் நன்மைகள் செய்ய முயற்சி எடுத்து வருகிறார்கள். அவற்றுடன் 'குழந்தைகள் நூலகம்' அமைப்பதையும் ஒரு சிறந்த திட்டமாகக் கொண்டு, முயற்சி எடுக்க வேண்டுமென்பதே நமது ஆசை. இதற்கு ஆகும் செலவு மிகக் குறைவாகவே இருக்கும்.

தமிழில் சுமார் 2000 குழந்தைப் புத்தகங்களே தற்போது கிடைக் கின்றன. அவற்றை வைக்க ஓர் அறை இருந்தால் கூடப் போதும். அந்த அறையிலே உட்கார்ந்து படிக்க வசதி இருந்தால் நல்லது. அல்லது, எதிரிலோ பக்கத்திலோ ஒரு கூரைக் கொட்டகை அமைத்து அங்கு உட்கார்ந்து படிக்க வசதி செய்து தரலாம்.

இந்தப் பக்கத்தை உங்கள் நகர மன்றத் தலைவரிடமோ ஊராட்சித் தலைவரிடமோ காட்டுங்கள். நிச்சயம் பயன் கிடைக்கும்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



எம். பி. ராஜசேகர்


ஆர். ஆனந்த்


புதுக்கோட்டை ராமமூர்த்தி


பிருந்தாவனக் கவிஞர்கள்


எம். சார்லஸ் டேனி


ஸாஜித் இக்பால்



சு. தேவசேனா


பி. மைத்ரேயி கவிதா


ஆர். செழியன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


பொன் அன்புமலர்


எம்.எஸ். சுரேஷ்

அட்டை வண்ணப்படம்: ஸையத் இப்ராஹீம்

மின்மினிக் கதைகள்

இரண்டு நரிகள்

இரவு நேரம். காட்டிலிருந்து புறப்பட்ட இரண்டு நரிகள் ஊருக்குள் வந்தன. அவற்றில் ஒன்று வயதான நரி; இன்னொன்று வாலிப நரி. ஓரிடத்திற்கு வந்ததும் வயதான நரி, வாலிப நரியைப் பார்த்து, ''கோழிகள் கத்தும் சத்தம் கேட்கிறதே! இங்கு கோழிப் பண்ணை இருக்க வேண்டும்'' என்றது.

உடனே வாலிப நரி நான்குபுறமும் பார்த்துவிட்டு, ''சுற்றிலும் சுவர் இருக்கிறதே! எப்படி உள்ளே போவது?'' என்று கேட்டது.


இரண்டும் நான்குபுறமும் கவனமாகப் பார்த்தன. ஓரிடத்தில் தண்ணீர் வெளியில் வருவதற்காக ஒரு துவாரம் இருந்தது. உடனே இரண்டும் சிறிது சிரமப்பட்டு அந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே புகுந்தன.

உள்ளே ஏராளமான கோழிகள் இருப்பதைப் பார்த்ததும் இரண்டிற்கும் ஒரே குஷி. அங்கு யாரும் காவல் இல்லாதது அவைகளுக்கு வசதியாகப் போய்விட்டது. முதலில் ஒவ்வொன்றும் ஒரு கோழியைப் பிடித்து அடித்துத் தின்றது. ஆசை அடங்கவில்லை. திரும்பவும், அவை ஒவ்வொன்றும் இரண்டாவதாக ஒரு கோழியைக் கொன்று தின்றன.

''அப்பாடா, என் வயிறு நிறைந்துவிட்டது. இனி இடமில்லை. நாளைக்கும் இது போல் வரலாம்'' என்றது வயதான நரி.

''இத்தனை கோழிகள் இருக்கும்போது இரண்டுடன் நிறுத்துவதா?'' என்று கூறிக் கொண்டே மேலும் இரண்டு கோழிகளை வயிறு முட்டத் தின்றது வாலிப நரி.

பிறகு இரண்டும் பண்ணையை விட்டுப் புறப்படுவதற்காக முன்பு உள்ளே வந்த துவாரத்தின் அருகில் சென்றன. வயதான நரி துவாரத்தின் வழியாக முண்டியடித்து வெளியில் வந்துவிட்டது. ஆனால் வாலிப நரியால் வரமுடியவில்லை. வயிறு நன்கு பருத்திருந்ததால் நன்றாக மாட்டிக் கொண்டது!




வயதான நரி காட்டுக்குப் போய்விட்டது. வாலிப நரி உள்ளே அகப்பட்டுக்கொண்டது! மறுநாள் காலையில் கோழிப் பண்ணைக்காரரின் கண்ணிலே அது பட்டதால், உடனே அதைத் தடியால் அடித்துக் கொன்றுவிட்டார். அத்துடன் இரவிலே காவலுக்கு ஓர் ஆளையும் நியமித்தார்.

அன்று இரவு ஏற்கெனவே ருசி கண்ட வயதான நரி மெதுவாக வந்து துவாரத்தின் வழியாகப் பண்ணைக்குள் நுழைந்தது. அதைக் கண்ட கோழிகள் கத்தின. உடனே காவல்காரர் ஓடி வந்தார். அப்புறம் என்ன? வாலிப நரிக்கு ஏற்பட்ட கதி அந்த வயதான நரிக்கும் ஏற்பட்டுவிட்டது!

காய்கறித் தோட்டம்

அந்தக் காய்கறித் தோட்டத்தில் நிறையக் காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்தன. கண்ணும் கருத்துமாக, அத்தோட்டத்தைக் காத்து வந்தான் காவல்காரன்.

ஒருநாள் காலையில், தோட்டத்தில் வளர்ந்திருந்த சில காய்கறிகளை ஏதோ ஒரு பிராணி தின்றுவிட்டதைக் கண்டான் காவல்காரன். அன்று



இரவு எப்படியாவது அந்தப் பிராணியைப் பிடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான். இரவு முழுவதும் விழித்திருந்தான். அப்போது சில முட்டைக் கோஸ்களைத் தின்றுவிட்டு ஒரு முயல் ஓடுவதை அவன் கண்டான். உடனே அதைத் துரத்திப் பிடிக்க முயன்றான். அது தந்திரமாகத் தப்பி ஓடிவிட்டது!

தினமும் அது மெல்ல வருவதும், செடிகளுக்குள் புகுந்து புகுந்து காய்கறிகளைத் தின்றுவிட்டுக் காவல்காரனை ஏமாற்றிவிட்டு ஓடுவதும் வழக்கமாகிவிட்டது. இதனால் மனம் உடைந்த காவல்காரன், தோட்டத்தின் சொந்தக்காரரிடம் முறையிட்டான். "அந்த முயல் சாதாரண முயலாகத் தோன்றவில்லை. மந்திர சக்தி படைத்த முயலாகத் தோன்றுகிறது. இல்லாத போனால் என்னிடமிருந்து தப்ப முடியுமா?" என்றான்.


"நீ கவலைப்படாதே! இன்று இரவு ஐந்தாறு ஆட்களையும், நாலு வேட்டை நாய்களையும் அனுப்புகிறேன்" என்றார். அவ்வாறே அனுப்பினார்.

"அதோ, அங்கே தெரிகிறது முயல்!"

"இதோ, இங்கே தெரிகிறது முயல்!" என்று கூறி, அவர்களும் வேட்டை நாய்களும் தோட்டத்தின் குறுக்கிலும் நெடுக்கிலுமாக ஓடினார்கள். ஆனாலும் முயல் அவர்களிடம் அகப்படாமல், ஓடி ஓடி ஒளிந்து கொண்டது. வெகு நேரமாக அவர்கள் முயலைப் பிடிக்க எடுத்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை. அசந்து போய் அவர்கள் உட்கார்ந்துவிட்டனர்.

காலையில் தோட்டத்தின் சொந்தக்காரர் வந்தார். முயல் அகப்படவில்லை என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. தன்னுடைய ஆட்களும் நாய்களும் குறுக்கிலும் நெடுக்கிலுமாக ஓடி ஓடி எல்லாக் காய்கறிகளையும் மிதித்து நாசமாக்கியதைக் கண்டு, ''ஐயோ! அந்த முயல் ஆண்டு முழுவதும் இன்றிருந்தால்கூட இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்காதே! முன் யோசனை இல்லாமல் செய்தால், இப்படித்தான் நாசமாகும்'' என்று தலையில் அடித்துக் கொண்டார்.

அலட்சிய புத்தி



குதிரைப் படையிலே ஒரு வீரன் இருந்தான். அவனுடைய குதிரை போரிலே மிக நன்றாக அவனுக்கு உதவும். ஆனாலும், அவன் அந்தக் குதிரையைச் சரியாகக் கவனிப்பதில்லை.

ஒருநாள் அந்தக் குதிரையின் ஒரு லாடத்திலிருந்த ஓர் ஆணி கழன்று விட்டது. அது அவனுக்குத் தெரிந்திருந்தும், அலட்சியமாக இருந்துவிட்டான்.

ஒருநாள் திடீரென்று போர் முரசு முழங்கியது. சங்குகள் ஒலித்தன. வீரர்களெல்லாரும் யுத்த களத்தை நோக்கிச் செல்ல வேண்டுமெனத் தளபதி ஆணையிட்டார்.

இந்தக் குதிரை வீரனும், தன் குதிரையில் ஏறிப் புறப்பட்டான். எதிரிகளுடன் வீரமாகச் சண்டை போட்டான். எதிரிகளில் சிலரை வெட்டி வீழ்த்தினான். பலரைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தான்.

எதிரிகளில் சிலரை இவன் துரத்திச் செல்லும்போது, குதிரையின் லாடம் கழன்றுவிட்டது. அதனால் காலில் வலி ஏற்பட்டது. அதையும் பொருட்படுத்தாமல் அது ஓடியது. குதிரையின் கால் புண்ணானது. மேலும் அதனால் ஓட முடியாமல் சுருண்டு விழுந்தது. குதிரை மீதிருந்த வீரனும் விழுந்தான். உடனே எதிரிகளில் ஒருவன், அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டான்.

சாகும் சமயத்தில், ''ஓர் ஆணி கழன்றபோதே கவனிக்காமல் போனேனே! என் அலட்சிய புத்தியால் என் ஆயுளே முடிந்துவிட்டதே!'' என வருந்தினான்.

கருத்து: **ஈசாப்**

கார், துபாஸ்

இன்னொரு வேண்டுகோள் விடலாமா?

* இன்று காலை (23.6.86) வானொலியில், தமிழக முதல்வருக்கு நாங்கள் அனுப்பிய வேண்டுகோள் பற்றிய செய்தியை அறிவித்த போது, நாங்கள், மேல் வகுப்பிற்குத் தேர்ச்சி பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை அடைந்தோம். நாங்களே நேரடியாக வேண்டுகோள் அனுப்ப வாய்ப்பளித்த, வழி சொல்லிக் கொடுத்த 'கோகுலம்' ஆசிரியருக்கு நன்றி. கூடிய விரைவில், எங்கள் ஆசை நிறைவேறும் என எதிர்பார்க்கிறோம்.

— வி. ஸ்ரீராம் (9239), திருச்சி — 16.

* அருமையான படைப்புக்களை அளிப்பதோடு, தம்பி தங்கைகளின் நலன் கருதி தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கச் சொல்லிய கோகுலம், பயன் எதிர் பாராமல் பணி செய்யும் ஒரு தலைசிறந்த பத்திரிகை.

— மு. உஸ்மான் (7827), லால்பேட்டை.

* 'பெ. நா. அப்புஸ்வாமி அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட இன்னும் ஐந்து ஆண்டுகளே இருக்கின்றன' என்று பதில் அளித்திருந்தீர்கள். விஞ்ஞான விஷயங்களை விவரம் தெரியாதவர்கள் கூட சுலபமாகப் புரிந்து கொள்ளும்படி எழுதி வந்த அவர் இன்று நம்மிடையே இல்லாதது ஒரு பெருங் குறைதான்.

— எஸ் கண்ணன், வடுவூர்.

* திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் மனத்தை நெகிழ வைத்தன. தகப்பனாரும், தாத்தாவும் சிறையில் இருந்தபோது, பாவம், சிறுமியாயிருந்த அவரது உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்று எண்ணிய போது கண்ணீர் பெருக்கெடுத்தது.

— ஆழ்வை. அ. பட்சிராஜன், நாங்குனேரி

* 'தனக்கு வரும்போது' சிறுகதை என் நண்பனைத் திருத்தியது. அதிக சத்தத்துடன் ரேடியோவை ஒலிக்கவிடும் அவன், இக்கதையைப் படித்த பிறகு, ஒலியைத் தேவையான அளவுக்கே வைக்கிறான்.

— ஜி. முருகேசன் (11,021) நம்பிப்பட்டி.

* ஒருவரிடம் ஒருவர் எப்படி மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகிறது 'மதிப்பும் மரியாதையும்.'

— பி. கோவிந்தசாமி (5703), டி. புதூர்.

* என்ன ஏமாற்றம்! குழந்தைக் கவிஞரின் 'பழைய கதை; புதிய பாடல்' ஏன் வருவதில்லை? இனியாவது தொடர்ந்து வருமா?

— ஆர். எஸ். சேகர், ஆத்தூர்.

* இரண்டு பக்கப் படக்கதை பரவாயில்லை. படங்கள் நன்றாயிருக்கின்றன. இன்னும் கூட நல்ல கருத்துடன் வெளிவந்தால் சிறப்பாயிருக்கும்.

— பி. கோவிந்தன், மதுரை — 20.

* கோகுலம் இதழில் சிறுவர்களுக்கான திரைப்படங்கள், புத்தகங்கள் குறித்துமாண்புமிகு முதல்வருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்த மாதிரி, கேரளத்திலுள்ள ஜவகர் பாலபவன் போலத் தமிழகத்திலும் பாலபவனம் ஒன்றை நிறுவுமாறு முதல்வருக்கு வேண்டுகோள் கொடுத்தால் என்ன?

—எஸ். சுரேஷ் (9484), சிதம்பரம்.

* 'எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய மனமிருக்கு?' என்பதை நெல்லை வடிவு அவர்களின் 'நல்ல புத்தி' கதை நன்கு விளக்கியதுடன், தியாகுவின் தொழில் சிறிதாயினும், அவனுடைய நேர்மை பெரிது எனவும் விளக்கியது.

— ஜி. லட்சுமணன் (12,858), சென்னை — 19.

* 'விரலே... நீ வாழ்க!' என்ற தலைப்பில் விரலைப் பற்றி வியக்க வைக்கும் செய்திகளை அள்ளி வழங்கிய பேரளம் புகழ்மதியே, நீங்கள் வாழ்க!


— எம். எஸ். சுரேஷ் (7005), சென்னை—7

* செய்குத் தம்பிப் பாவலரைப் பற்றி என்னைப் போன்ற பலருக்குத் தெரியாமலே இருந்தது. 'கோகுலம்' அவர் படத்தையும் வெளியிட்டு அவரைப் பற்றிய செய்தியையும் நன்றாக வெளியிட்டதற்கு என் நன்றி.

— என். உசேன், காரைக்கால்.

* இலவசமாக எங்களுக்குத் தந்த கோகுலம் 'லேபிள்கள்' மிக அழகாகவும் நன்றாகவும் இருந்தன. ரொம்ப நன்றி.

— எஸ். கோகுலகிருஷ்ணன் (7755), புதுக்கோட்டை — 2.



என் குழந்தைப் பருவம்

பெ. தூரன்

ம. ப. பெரியசாமித் தூரன் என்னும் தூரன் அவர்கள் ஒரு சிறந்த கவிஞர்; கதாசிரியர்; நாடக ஆசிரியர்; கட்டுரையாளர்; குழந்தை எழுத்தாளர்; மனோதத்துவ அறிஞர்; இசைப் பாடல் ஆசிரியர்; மொழி பெயர்ப்பாளர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவர் ஒரு பெரும் சாதனையைச் செய்திருக்கிறார்.

'அரிய பொக்கிஷம்' என்று அனைவரும் போற்றக் கூடிய வகையில் தமிழிலே பெரியவர்களுக்கான கலைக்களஞ்சியம் — பத்துத் தொகுதிகளுக்கும், சிறுவர்களுக்கான கலைக்களஞ்சியம் — பத்துத் தொகுதிகளுக்கும் தலைமைப் பதிப்பாசிரியராக இருந்து, மிகச் சிறந்த முறையில் அவை வெளிவர உதவியிருக்கிறார். மகாகவி பாரதியாரின் மறைந்து கிடந்த ஏராளமான கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகளையெல்லாம் தேடிப் பிடித்து 'பாரதி தமிழ்' என்ற ஒரு பெரிய நூலை வெளியிட்டிருக்கிறார்.

'பத்ம பூஷண்', 'கலைமாமணி,' 'இசைப் பேரறிஞர்,' 'தமிழ்ச் செம்மல்' எனப் பல சிறப்புப் பட்டங்கள் பெற்றவர். பாரதியார் சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கம் முதலிய நிறுவனங்கள் இவருக்குக் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன.


இவர் எழுதிய 60 க்கு மேற்பட்ட புத்தகங்களில் பல மத்திய, மாநிலப் பரிசுகள் பெற்றுள்ளன.

மஞ்சக்காட்டு வலசு என்ற கிராமத்தில் நான் பிறந்தேன். அது ஈரோட்டிலிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது.

என் அப்பா பெயர் பழனிவேலப்பக் கவுண்டர். அம்மா பெயர் பாவாத்தாள். பாவை என்று அழைப்பார்கள்.

நான் என் இரண்டு வயதிலே என் அருமை அம்மாவை இழந்தேன். என் அம்மா இறந்ததே ஒரு சோகக் கதை. நோயினால் அவர்கள் இறக்கவில்லை. என் அப்பா மிகவும் முன்கோபக்காரர். என் அம்மாவை அவர் அடிக்கடி கோபித்துக் கொள்வார். ஒருநாள், அவர் என் அம்மாவைக் கோபத்தில் அடித்துவிட்டார். அதனால் மிகவும் வேதனையடைந்த என் அம்மா, யாரும் பார்க்காத சமயம் எங்களுக்குச் சொந்தமான நெடுங்காடு வயலிலுள்ள அகலமான கிணற்றை நோக்கிச் சென்றார்கள். அவர்களுக்கு நன்றாக நீந்தத் தெரியும். அந்தக் கிணற்றிலேதான் தினமும் குளிப்பார்கள். கிணற்றின் கரையை அடைந்ததும், இரண்டு கால்களின் பெருவிரல்களையும் ஒன்றுடன் ஒன்றாக இணைத்துக் கட்டிக் கொண்டு, கிணற்றிலே குதித்து விட்டார்கள். கால் விரல்களைக் கட்டாமல் விழுந்தால், சிறிது நேரத்தில் மனம் மாறி நீச்சல் அடித்துத்





தப்பி விடலாமென்ற எண்ணம் தோன்றலாம். அதற்கு வழியில்லாமல் செய்து கொண்டு, நீரிலே மூழ்கி ஆவியை விட்டார்கள். அப்போது என் தங்கை கைக்குழந்தை. பிறந்து சில நாட்களே ஆகியிருந்தன.

இன்றும் அந்தக் கிணற்றுப் பக்கம் சென்றால், எனக்கு என் அம்மாவின் நினைவு வந்துவிடும். துக்கம் தொண்டையை அடைக்கும்; கண்கள் கலங்கும்.

அடியினால் ஏற்படக் கூடிய ஆபத்தைநான் சிறியவயதிலேஉணர்ந்தேன். அதனால்தானோ என்னவோ, நான் என் குழந்தைகளை எக்காரணம் கொண்டும் அடித்ததில்லை. கோபித்துக் கொள்வேன்; சில சமயங்களில் மிரட்டுவேன். நல்ல வார்த்தைகள் சொல்லி, அவர்களைத் திருத்தவே முயற்சி செய்வேன்.

சிறு வயதிலே தாயை இழந்த நான், செம்மாண்டம்பாளையம் என்ற கிராமத்திலுள்ள என் பாட்டி வீட்டிலே வளர்ந்தேன். பாட்டி எனக்கும், அக்கம் பக்கத்து வீட்டுப்பிள்ளைகளுக்கும் அருமையாகக் கதைகள் சொல்லுவாள்.

இரவு நேரம் வந்ததும், பாட்டியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும் கதை கேட்போம். நாங்கள் தரையிலோ பாயிலோ இருந்து கேட்க மாட்டோம். கயிற்றுக் கட்டிலைத் தலைகீழாகத் திருப்பிப் போட்டு அதில் அமர்ந்து கொண்டு தான் கேட்போம். கட்டிலை நிற்க வைத்து நாங்கள் எல்லோரும் அதில் ஏறினால் அது தாங்குமா? அதனால் தான் அதைத் திருப்பிப் போடுவோம்!

மகாபாரதம், இராமாயணக் கதைகளுடன், 'தஞ்சாவூர் தகக்கன்; மதுரை எத்தன்,' 'அண்டப் புளுகனும் ஆகாயப் புளுகனும்' போன்ற வேடிக்கைக் கதைகளையும் பாட்டி மிகவும் சுவையாகச் சொல்லுவாள். பிற்காலத்தில் நான் எழுதிய 'சூரப்புலி,' 'மாயக் கள்ளன்,' 'நிலாப் பாட்டி,' 'கடக்கட்டி, முடக்கட்டி' போன்ற கதைகளுக்கெல்லாம் அன்று பாட்டி போட்ட அஸ்திவாரம்தான் காரணம் எனக் கருதுகிறேன்.

என் ஊரிலிருந்து மொடக்குறிச்சி என்ற கிராமம் இரண்டு பர்லாங்தூரத்தில் இருக்கிறது. அங்குள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் என்னைச் சேர்த்தார்கள். மண்ணிலேதான் நாங்கள் எழுதப் பழகினோம். 'ஹரி நமோ' என்று தொடங்கி, அ, ஆ சொல்லிக் கொடுத்தார்கள். பிறகு, ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை முதலியவற்றைக் கற்றோம்., இக்காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்றவாறு பல கவிஞர்கள் பாடல்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றைப் பல ஆரம்பப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால், அப்போது எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த செய்யுள்கள் மிகக் கடினமாக இருக்கும். பொருள் புரியாது. அறப்பளீஸ்வரர் சதகம், வெங்கடேஸ்வரர் சதகம் எல்லாம் மனப்பாடம் செய்து ஒப்புவிக்க வேண்டும். அப்போது படித்த அந்தக்

கடினமான பாடல்கள், இன்றும் என் நினைவில் நிற்கின்றன.

பஞ்சாங்கய்யர் என்பவர்தான் எங்கள் ஆசிரியர். பாடங்களை நன்றாகச் சொல்லிக் கொடுப்பார். அவர் வீட்டில் திவசம் என்றால், மாணவர்களாகிய நாங்கள் எல்லோரும் காய்கறிகளைக் கொண்டு வந்து அவர் வீட்டில் குவித்து விடுவோம்., ஆசிரியருக்கு மிகவும் மரியாதை செலுத்துவோம். அவருக்கு வேண்டிய சிறுசிறு உதவிகளைச் செய்வோம்.

நான் ஏழு வயதுச் சிறுவனாக இருக்கும் போதே என் சித்தப்பா அருணாசலக் கவுண்டர் எனக்கு வில்லிபுத்தூரார் எழுதிய பாரதத்தைச் சொல்லிக் கொடுப்பார். நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளை மிக அழகாகப் பாடுவார். இன்னொரு அருணாசலக் கவுண்டரும் இருந்தார். அவர் எங்கள் பங்காளி. 'தெற்கு வளவு அருணாசலக் கவுண்டர்' என்போம். அவர் மிக இனிமையாக இசையோடு பாடுவார். எனக்குப் பாட்டு எழுதும் ஆசையைத் தூண்டி விட்டார் என் சித்தப்பா அருணாசலக் கவுண்டர்; நான் இசைப் பாடல்கள் எழுத வழிகாட்டியவர் தெற்கு வளவு அருணாசலக் கவுண்டர்.

நான் 6-வது வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. முடியப் படித்தது ஈரோட்டிலுள்ள மகாஜன சபை உயர்நிலைப் பள்ளியில்தான்.

ஈரோட்டில், ஒரு கன்னடிய நாயக்கர் வீட்டில் நான் தங்கி, அங்கேயே சாப்பிட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போய்ப் படித்து வந்தேன். அங்கே நான் தங்குவதற்கும், உணவுக்கும் என்ன கட்டணம் தெரியுமா? வருடத்திற்கு மூன்று பொதி நெல்தான். வேறு ரூபாய் எதுவும் கொடுக்க வேண்டாம்.

ஒல்லியாக இருந்த என்னைப் பார்த்து, "ஏண்டா, நீ மூணு பொதி நெல்லையும் சாப்பிட்டு விடுவியா?" என்று கேட்டார்கள். அந்தக் கன்னடியர் வீட்டில் நான் தங்கியதால், எனக்குக் கன்னடமும் ஓரளவு தெரியும்!

ஈரோட்டில் நான் படிக்கும் போது அடிக்கடி பிளேக் நோய் வரும். அதனால், பக்கத்து ஊர்களுக்குப் போய், சொந்தக்காரர் வீட்டில் அப்போதெல்லாம் தங்குவேன்.

என் பாட்டனாருக்கு சோதிடம் நன்றாகத் தெரியும். அவர் என்னிடம், 'உங்கள் பள்ளியில் சோதிடப் பாடம் உண்டா?" என்று ஒருநாள் கேட்டார். "இல்லை" என்றேன். "ஏன் இல்லை? அதன் மூலம் எத்தனையோ விஷயங்களை அறிந்து கொள்ளலாமே!" என்பார்.

"நீ கணக்கிலே புலியாக வருவாய்" என்று ஒரு தடவை சொன்னார். அவர் வாக்குப் பலித்தது. நான் கணக்கிலே எப்போதுமே முதல் மார்க் வாங்குவேன். மற்றப் பாடங்களிலும் நிறைய மதிப்பெண்கள் பெற்றாலும், கணக்கிலேதான் அதிகமான மதிப்பெண் பெறுவேன். இதனால், முதல் ரேங்கிலே இருப்பேன்.

அந்தப் பள்ளியில் பி. வி. ராம





சாமி சாஸ்திரியார் என்றுஓர் ஆசிரியர் இருந்தார். அவருக்கு ஒரு கண் இல்லை. அவர் 33 மார்க்குக்குக் குறைவாக வாங்கியவர்களையெல்லாம் பிரம்பால் அடி அடி என்று நொறுக்கி விடுவார்! அவர் தன் கையில் பிரம்புடன் வருவார். கூடவே ஒரு பியூனையும் அழைத்து வருவார். அவன் சும்மா வர மாட்டான்; நிறையப் பிரம்புகளைச் சுமந்து கொண்டு வருவான். பிரம்புகள் ஒடிய ஒடிய அவன் கொடுத்துக் கொண்டேயிருப்பான். அவரைப் பார்த்தாலே, மாணவர்கள் நடுநடுங்குவார்கள்.

இன்னொரு ஆசிரியர் இருந்தார். ராவ் என்று அவரை அழைப்பார்கள். அவர் மிகவும் பிரியமாக இருப்பார். மாணவர்களுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுப்பார்.

எனவே பெப்பர்மின்ட் சிஸ்டம் (Peppermint System) பீட்டிங் சிஸ்டம் (Beating System) அதாவது மிட்டாய் வழங்கும் முறை, அடி கொடுக்கும் முறை, என்று நாங்கள் இவற்றைச் சொல்லுவோம்.

நான் அங்கு படிக்கும் போது தினமும் மாலை வேளையில் காவிரிக் கரைக்குச் செல்வேன். நீர்வீழ்ச்சியைக் காண்பேன். அங்கே தியானம் செய்வேன். பலவிதமான கற்பனைகள் எனக்குத் தோன்றும் காவிரியின் அழகிலே உள்ளத்தைப் பறிகொடுப்பேன். காவிரிக் கரையிலுள்ள மணல் மேடுகளிலும், ஓங்கி வளர்ந்த மரச் சோலைகளிலும், வழுவழுப்பான பாறைகளிலும் உட்கார்ந்தும் நின்றும் எதை எதையோ கற்பனை பண்ணுவேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், காவிரித் தாய்தான் எனக்குக் கவிதைப் பாலூட்டி வளர்த்தாள். 9 வது படிக்கும்போதே பாரதியார் பாடல்களையும் சா. து. சு. யோகியார் எழுதிய பாடல்களையும் மனப்பாடம் செய்திருந்தேன். அந்தக் கவிஞர்களின் பாடல்களும், காவிரிக் கரையில் எனக்குத் தோன்றிய கற்பனைகளுமே என்னைக் கவிதை எழுதத் தூண்டின; இல்லாது போனால் 'இளந்தமிழா' 'நல்ல நல்ல பாட்டு' போன்ற என் கவிதை நூல்கள் வெளிவந்திருக்குமா என்பது சந்தேகமே!

அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்



டாக்டர்
வா.செ. குழந்தைசாமி
(துணை வேந்தர் அண்ணா பல்கலைக் கழகம்)



முத்துவின் முத்தான முடிவு!

எல். விஸ்வநாதன்

அக் 7 ல் வந்தது அந்தப் பத்திரிகைச் செய்தி:

பாகிஸ்தான் தாக்குதலில்
மூன்று பாரத வீரர்கள்
பலி


ஜம்மு, அக் — 4.

இங்குள்ள எல்லையருகில் கார்கி என்னும் இடத்தில் வழக்கமாக ரோந்து வந்த மூன்று ஜவர்ன்கள் எதிரிகளின் இயந்திரத் துப்பாக்கிகளுக்குப் பலியானார்கள். அம்மூவரில் ஒருவர் மேஜர். தாக்குதலுக்குப் பின் மூவரின் சடலங்களையும் பாகிஸ்தானியர் தம்முடன் கொண்டு சென்றுவிட்டனர். பாகிஸ்தான் இந்திய வீரர்களைத் தாக்கிய பகுதி இந்திய எல்லைக்குள் இருப்பதால், அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இச்செய்தியைப் படித்த முத்துக்குமார் பதற்றத்துடன் அன்னையிடம் ஓடி வந்தான். "அம்மா, அம்மா" என்று ஓடி வந்த அவனை, அன்னை கனிவுடன் நோக்கினாள். "அம்மா, அப்பா மேஜரா இருக்கிறது கார்கி பகுதிதானே! இங்கே பார், இந்தப் பேப்பர் செய்தியை. ஒரு மேஜரையும் இரண்டு ஜவான்களையும் பாகிஸ்தான் வீரர்கள் கொன்னுட்டதாப் போட்டிருக்கு. எப்பா' நம்ம அப்பாவுக்கு ஒன்றும் ஆகியிருக்காதே? எனக்குக் கவலையாயிருக்கம்மா" என்று கூறி விட்டுக் கேவினான்.

செய்தி படித்த தாய் கலங்கினாள். கவலை கொண்டாள். 'இறந்தது தன் கணவராக இருக்கக் கூடாதே!' என்று கடவுளிடம் வேண்டினாள். மகனைத் தேற்றிப் பள்ளிக்கு அனுப்பினாள். 8 ஆம் வகுப்புப் படிக்கும் முத்துக்குமார் அன்னை ஆறுதல் கூறியபடி, 'நல்லவர்களாக இருக்கும் நமக்கு இப்படிச் சோதனையைக் கடவுள் தர மாட்டார்' என எண்ணிக் கொண்டே பள்ளிக்குச் சென்றான்.

அன்று பள்ளியில் தமிழ் வகுப்பில், 'இந்திய நாட்டு மாவீரர்கள்' என்ற பாடத்தை ஆசிரியர் நடத்தினார். அருமையான முன்னுரையுடன் பொருள் செறிந்த, வீரம் மிகுந்த கருத்



துக்களுடன் ஆசிரியர் பாடத்தை நடத்தி முடித்தார்.

அப்பாடத்தில், சென்ற இந்திய—பாக் போரில் வீரம் காட்டிய மூன்று வீரர்களின் சாகசங்களை விவரித்திருந்தனர். பாடம் முடிந்தவுடன் முத்துக்குமார், 'நம் அப்பாவும் இப்படிப்பட்ட சிறப்பான, பணியில்தான் ஈடுபட்டு இருக்கிறார்' என்று மிகுந்த பெருமிதத்துடன் பள்ளி முடிந்து வீடு திரும்பினான்.

அடுத்த நாள் பள்ளி செல்லுமுன் தபால்காரர் கடிதம் ஒன்று நீட்டினார். கடிதம் பாதுகாப்பு அமைச்சகத்திலிருந்து வந்திருந்தது. பிரித்த தாய் படித்தாள்.

'அம்மா, தங்கள் கணவர் கடந்த 4 ஆம் தேதியன்று பாக். வீரர்களின் தாக்குதலில் வீர மரணம் எய்திவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.' என்ற வரிகளைப் படித்ததும், 'ஓ'வெனக் கதறிவிட்டாள். முத்துக்குமார் உடனே அன்னையின் அருகிலே ஓடி வந்தான். செய்தி அறிந்ததும் அவனும் துடிதுடித்துக் கதறினான். பிறகு மேலும் படித்தாள் அன்னை.

''இது உங்களுக்கு மட்டுமல்ல; திறமை வாய்ந்த அவரைப் போன்ற ஆபீசரை இழந்தது நாட்டுக்கே பேரிழப்பு. எனினும் ஒரு மாவீரர் மனைவி எனப் பெருமை கொள்ளுங்கள். மேஜர் கதிர்மணியின் உடலைப் பாகிஸ்தானியர் திருப்பித் தந்தவுடன், நாங்களே ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்துவிடுகிறோம். மேலும், தங்கள் கணவருக்கு அவர் செய்த சிறந்த பணிக்காக, சாதனைகளுக்காக, 'மஹாவீர் சக்ரா' அவார்டுக்குசிபாரிசு செய்யப் போகிறோம். நன்றி''

கடிதத்தை முழுவதும் படித்த முத்துக்குமாரும் அவன் தாயும் அடைந்த துயரத்தை எழுத்து மூலம் தெரிவிக்க இயலாது. அந்தச் சூழ்நிலையில் சென்ற வருடம் தன் தந்தை சொன்ன சாகசச் செயல் அவரது சிந்தனையில் விரிந்தது.

அப்போது, கதிர்மணி BSF ல் (பார்டர் செக்யூரிட்டி போர்ஸ்) காப்டனாக இருந்தார். ஆகஸ்ட் மாதம் கடும் பனி பெய்து கொண்டிருந்தது. கதிர்மணி கண்காணிப்பு டவரிலிருந்து காவல் செய்து கொண்டிருந்தார். அவருடைய கூறுகூறுப்பான தொலைநோக்கி எல்லையை ஊடுருவும் எதிரிப் படை ஒன்றைக் கண்டது. அவரோ அவரின் கீழ் இருந்த மூவர் மட்டுமோ தனித்து எதுவும்

செய்ய இயலாது. சிறிது தூரத்திலுள்ள காம்ப் சென்று வீரர்களை எச்சரித்து அவர்களையும் சேர்த்துக் கொண்டு பகைவரை விரட்டத் தீர்மானித்து நால்வரும் ஓடினர். அப்போது, பகைவர் சுட்ட குண்டு கதிர்மணியின் காலில் பாய்ந்தது. இரத்தம் கொப்புளித்தது. எனினும், மிகுந்த வீரத்துடனும்மன உறுதியுடனும் நெஞ்சுரத்துடனும் ஓடி வீரர்களின் உதவியுடன் சிறந்த கமாண்டிங்கினால் பகைவரை ஓட ஓட விரட்டினார். அப்போது காப்டன் பதவியிலிருந்து மேஜர் பதவிக்கு உயர்வு பெற்றார்; 'வீர சக்ரா' விருதும் பெற்றார்.

இத்தகைய சிந்தனை ஓட்டங்களே முத்துக் குமாரின் மனத்தை ஆக்ரமித்திருந்தன. 'இப்படிப்பட்ட வீரத் தந்தைக்குப் பிறந்த என் கடமை என்ன?' என்று சிந்தித்தான். இறுதியில் உறுதியான முடிவை எடுத்தான்.


ஓரிரு நாட்கள் கழித்து கதிர்மணியின் ராணுவ உடைகள் பார்சலில் வந்தன. அதைப் பார்த்துத் தாயும் தனயனும் அடைந்த துக்கத்தை எழுதினால், கரையாத மனமும் கரையும். அதனுடன் ஒரு செய்தியும் வந்தது. அரசாங்கம் முத்துக்குமாரின் படிப்புச் செலவை ஏற்பதாக அறிவித்திருந்தது.

முத்துக்குமார் அப்போது எடுத்த உறுதியான முடிவு இதுதான். விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றுத் தொழில் நுட்ப அறிவுடன் கூடிய தன் சேவையை நாட்டிற்குத் தரத் தீர்மானித்தான்.

இது அவனது சிறிய மனத்தின் முடிவாயினும் பெரிய மனிதரின் முடிவை விட உறுதி மிக்கது; சிறந்த இலட்சியத்துடன் கூடியது.

பத்து நாட்கள் கழித்து பள்ளிக்குச் சென்றான் முத்து. அன்று மதியம் நடைபெறப் போகும் இலக்கிய மன்றத்தில் முத்துக்குமார் 'உரை' நிகழ்த்தினான். 'பாரதியும் தேசப் பற்றும்' என்ற தலைப்பில் முத்துக்குமார் முழங்கினான்.

''நண்பர்களே! பாரதி 'வெள்ளிப் பனி மலையின் மீது உலாவுவோம்' என்று கூறினார். அதன் உள் அர்த்தம் என்ன? ஆராய்ந்து சிந்தித்தால்தான் புலப்படும். நண்பர்களே! நம் நாட்டு எல்லையிலுள்ள பனிமலையான இமய மலை நம்மைப் பகைவரிடமிருந்து அரணாகக் காக்கிறது. ஆனால் 1962ல் அக். 20 அன்று சீனர் தாக்குதலின் போது அங்கு இருந்த நம் வீரர்களில் பலர் குளிரில் பழகி இராததால், பகைவர்களுக்குப் பலியானார்கள். இப்படி நடக்காதிருக்கவே வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம் என்றார் பாரதியார். 'பனி மலையின் மீது உலாவி நன்கு பழகிக் கொண்டு நாட்டைப் பாதுகாப்போம். எதிரிகளை விரட்டி அடிப்போம்' என்ற பொருளில்தான் அவர் அன்றே அப்படி பாடியிருக்கிறார். மகாத்மா காந்தி உலகில் எங்கும் நடக்காத வண்ணம் அகிம்சா முறையில் சுதந்திரம் வாங்கித் தந்தார். இந்தப் புனித வேள்வியில் பல ஆயிரக்



கணக்கானவர்கள் தங்களுடைய உயிர்களை அர்ப்பணம் செய்துள்ளனர். அதையெல்லாம் எண்ணும்போது பாடுபட்டுசுதந்திரம்வாங்கியதைவிட, அதைக் காப்பதன் முக்கியத்துவமும் பொறுப்பும் விளங்கும். ஆகவே, நாட்டின் ஆக்க வேலைகளில் நம்மில் பெரும்பாலோர்பாடுபட்டாலும், நம்மில் ஒரு பகுதியினர் பாரதியார் கூறியது போன்று நம் நாட்டுப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட வேண்டும். ஏனெனில்பொருளாதார, சமூக, விஞ்ஞான முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள நம் சகோதரர்களைக் காப்பதே நம் கடமையல்லவா? எனவே நாம் பாரதி கூறியபடி வலிமை கொண்ட தோளுடனும், உறுதி கொண்ட நெஞ்சுடனும், தளராத தேசப் பற்றுடனும் நம் நாட்டுக்குச் சேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும். நன்றி'' என்று முடித்தான்.

சிறப்பான அவனது உரையைக் கேட்ட மாணவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. அவனுடைய உரை அவன் தோழர்களின் எண்ணங்களுக்கு உரமூட்டுவதாகவும்,அவர்கள் மனத்திலிருந்த தேச பக்தி என்ற விதைக்கு நீருற்றி வளர்ப்பதாகவும் இருந்தது. முத்துக்குமார்,தான் இராணுவத்தில் பொறியியல் நிபுணராகிச் சேவை செய்வது மட்டுமன்றி அப்பணியில் ஈடுபடும் வரை தோழர்களுக்கும் தேசப் பற்றையும், தேசப் பாதுகாப்பையும் எடுத்துக் கூறுவதென முடிவு செய்தான்.

அன்று மாலை தான் எடுத்த முத்தான முடிவுடன் தன் அன்னையிடம் சென்றான். மிகுந்த பெருமிதத்துடன் தன் உயர்ந்த எண்ணத்தை வெளியிட்டான். தாயின் கண்கள் கண்ணீர் விட்டன. கவலையினால் அல்ல; ஆனந்தத்தினால்தான்! அவனை ஈன்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட மிக அதிகமான மகிழ்ச்சியை அடைந்தாள். தன் கணவரின் நாட்டுச் சேவையில் பெருமிதமுற்ற அவள், தன் மகனின் இந்த முடிவில் பூரிப்புற்றாள். இழந்த கணவனை மகனிடத்தில் மீண்டும் காணப் போகிறோம் என்பதை நினைத்துப் பெருமைப்பட்டாள்!

நேருவின் நினைவு



நேருவிற்குப் பிடித்த விளையாட்டு டென்னிஸ் ஆட்டம், சிரஸாசனம் செய்வது.

ஒரு சமயம் நேரு தம்மை உருவாக்கிய மூன்று பெரியவர்களைப் பற்றிச் சொன்னார். முதலாவதாக, அவருடைய தகப்பனார் மோதிலால் நேரு. அடுத்ததாக மகாத்மா, மூன்றாவதாக ரவீந்திரநாத் தாகூர். தாகூரும் அவர் வாழ்வின் பிற்பகுதியில் தொடர்பு கொண்டார். முதலில்வந்தஇருவருமேஅவர்வாழ்வை வகுத்தவர்கள்.

ஒரு சமயம் ஒரு நிருபர் கூட்டத்தில், 'நீங்கள் அரசியல்வாதி, தியாகி, தேசத் தொண்டன், எழுத்தாளர், சிந்தனையாளர், சமாதானத் தூதுவர், தேசத்தின் முதல் பிரதமர் இத்தனை பெயர்கள் பெற்றவர். இதில் எதனை விரும்பி ஏற்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு நேரு, ''ஏதாவது செய்து முடித்த பிறகு அதனை நினைத்துக் கொண்டு இருப்பது முறையன்று. 'நேரு இந்தியாவை விரும்பினார். இந்திய மக்களால் அதிகமாக விரும்பப்பட்டார்' என்னும் பெயர் நிலவினால் அது போதும்'' என்றார்.

—லட்சுமி சிவம்

கேளுங்கள்; சொல்கிறோம்



* சென்னை நகரத்தில் எழும்பூரிலே ஓர் ஏரி இருந்ததாக என் தாத்தா சொல்கிறாரே. நிஜமாகவா?

— பி. ராமு, சென்னை — 7.

உன் தாத்தா சொல்வது உண்மைதான். எழும்பூரில் மட்டுமல்ல; நுங்கம்பாக்கத்திலும் ஓர் ஏரி இருந்தது. எழும்பூர் ஏரி, நுங்கம்பாக்கம் ஏரி என்று அவற்றைச் சொல்வார்கள். நகரின் வளர்ச்சி கருதி அவற்றை மூடி விட்டார்கள்.

* 'தர்கா' என்கிறார்களே, அப்படி என்றால்...?

— வே. சாலினி, மடிப்பாக்கம்.

முஸ்லிம் துறவிகளின் 'சமாதி' இருக்கும் இடம்தான் 'தர்கா' என்று அழைக்கப்படுகிறது.

* எங்கள் வீட்டுக்கு வரும் கடிதங்களிலெல்லாம், முகவரியைச் சரியாக எழுதி விட்டு, அடியில் 'பி. எம். மாவட்டம்' என்றே குறிப்பிடுகிறார்கள். 'பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம்' என்பதையே சுருக்கிவிடுகிறார்கள். இது சரியா?

— கே. குமரேசன், காரைக்குடி.



பசும்பொன் முத்துராமலிங்கர் பெயருடன் உங்கள் மாவட்டம் விளங்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் பெயர் சூட்டியது. அந்தப் பெயர் நீளமாக இருப்பதால், சுருக்கி எழுதி விடுகின்றனர். அண்ணா நகர் என்றோ, கருணாநிதி நகர் என்றோ, முத்துராமலிங்கர் மாவட்டம் என்றோ வைத்திருந்தால் சுருக்கிக் கூற மாட்டார்கள். அடைமொழியுடன் நீண்ட பெயராக அறிஞர் அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் என்று பெயர் வைத்திருப்பதால் அதை ஏ. ஏ. நகர், கே. கே. நகர், பி. எம். மாவட்டம் என்று ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்திச் சுருக்கிவிடுகின்றனர்! சில ஆண்டுகள் சென்ற பிறகு அந்த இடங்களுக்கும், இந்தத் தலைவர்களுக்கும் உள்ள தொடர்பே தெரியாமல் போனாலும் போகலாம்!

* முதல் முதலாக சாகித்திய அகாதமி பரிசு பெற்ற தமிழ்ப் புத்தகம் எது?

— சி. நளினி, சென்னை — 24.



சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக 25 ஆண்டுகள் பணியாற்றிய சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் எழுதிய 'தமிழின்பம்' என்பதுதான் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற முதல் தமிழ்ப் புத்தகம்.

* சென்னையிலுள்ள பல பஸ் ஸ்டாண்டுகளில் எந்த எந்த எண் உள்ள பஸ்கள் நிற்கும் என்பதை அறிய முடியாதபடி போஸ்டர்களை ஒட்டியிருக்கிறார்களே என்ற ஒரு கேள்விக்கு அந்தப் போஸ்டர்களில் உள்ள முகவரிகளைக் கொண்டு அப்படிச் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாமே என்று எழுதியிருந்தீர்கள். 300 க்கு மேற்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கியதாக பேப்பரில் படித்து மகிழ்ந்தேன். அது மாதிரி சைக்கிளில் இரவு நேரத்தில் விளக்கு இல்லாமலும், பெல் அடிக்காமலும் போகிறவர்களுக்கும் தண்டனை கொடுக்கக் கூடாதா?

— என். குகநாதன், ஆரணி.

காவல் துறையினர் இதிலும் நடவடிக்கை

எடுத்துத்தான் வருகிறார்கள். ஆயினும், முழுமையாக அவர்கள் ஈடுபடவில்லை. இப்படிப் பட்டாளிசைக்கிள்காரர்களால் சென்னையில் விளக்குகள் இல்லாத அல்லது எரியாத பல தெருக்களில் நடந்து போகிறவர்களில் பலர் அடிக்கடி விபத்துக்குள்ளாகிறார்கள்.

° **சாயிபாபா கோயில் மைலாப்பூரில் இருக்கிறது. அவரைப் பற்றி எனக்குத் தெரிந்து கொள்ள ஆசை. சொல்லுவீர்களா?**

— சே. நவமணி, சென்னை — 4.

சாயிபாபா பழைய நைஜாம் இராஜ்ஜியத்தில் உள்ள பத்திரி என்ற கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்தார். குழந்தையாக இருந்த போதே ஒரு முஸ்லிம் பக்கிரியிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார். பிறகு, ஒரு பிராமண குரு இவருக்கு உபதேசம் செய்தார். இளமையிலே இவர் சிறந்த பக்தராகவும் ஞானியாகவும் விளங்கினார். பல அற்புதங்களை நிகழ்த்தினார். இவர் ஷிரடி என்ற ஊரில் ஒரு சிறிய மசூதியில் வாழ்ந்து வந்தார். பல மதத்தினரும் இவரை தரிசிக்க வருவார்கள். இவர் எல்லா மதங்களையும் போற்றுபவர்.

° **வண்டுகள் ரீங்காரம் செய்வது வாயினாலா?**

— ஜே. கண்ணன், கருப்பம்புலம்.



இல்லை. இங்கும் அங்குமாக வண்டு பறக்கும்போது, அதன் சிறகுகள் வேகமாக அசைகின்றன. காற்றுடன் சேர்ந்த அந்த அசைவினால் ஏற்படும் சப்தத்தையே நாம் ரீங்காரம் என்கிறோம். கவிஞர்கள், வண்டுபாடுவதாகக் கற்பனை செய்கிறார்கள். கொசு பாடுவதாகக் கூறுகிறார்களே, அதுவும் இப்படித்தான்.

° **கோகுலத்தில் பெரியவர்கள் மட்டும்தான் தொடர்கதை எழுதுகிறார்கள். சிறுவர்களாகிய நாங்களும் எழுதலாமா?**

— ம. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாமலை.

யார் எழுதினாலும் நன்றாக இருந்தால் ஏற்று வெளியிடுவோம். ஆனால், சிறுவர்களாகிய நீங்கள் முதலில் சிறுகதை எழுதப் பழகுங்கள். பிறகு, தொடர்கதை எழுதினால், நன்றாக இருக்கும்.

° **கோதுமை முதன் முதலில் எங்கு விளைவிக்கப்பட்டது?**

— தி. வெங்கடேஷ், மயிலாடுதுறை.

ஆதிகாலத்தில் கோதுமை அபிசீனியாவிலும், இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் உற்பத்தியாகியிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால், எங்கு முதன் முதலாகப் பயிரிடப்பட்டது என்று தெரியவில்லை.

° **நீராவிப்படகைக்கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட்தானே?**

— வி. மனோகரன், திருத்துறைப்பூண்டி.

ஜேம்ஸ் வாட் நீராவி இயந்திரத்தைத் தான் கண்டுபிடித்தார். நீராவிப் படகைக் கண்டுபிடித்தவர் ஃபல்டன் (Fulton) என்பவர்தான்.

° **அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர் (Red Indians) களுக்கும் இந்தியர்களாகிய நமக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?**

— வே. கலைமணி, திருச்சி — 4.

எந்தத் தொடர்பும் இல்லை. இந்தியாவைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அதுதான் இந்தியா என்றும், அங்கு வசித்து வந்த மக்கள்தான் இந்தியர் என்றும் தவறாக நினைத்து விட்டார். பிறகுதான் உண்மை தெரிந்தது. ஆயினும், அவர்கள் நிறம் சிவப்பாக இருந்ததால் அவர்களை சிவப்பு இந்தியர் என்றும் அமெரிக்க இந்தியர் என்றும் இப்போதும் அழைத்து வருகின்றனர்.

° **துக்ளக் முகமது ஒரு முட்டாள் அரசன் என்கிறார்களே, உண்மையா?**

— வி. காசிநாதன், கடலூர்.

அம், முற்றிலும் உண்மைதான்' என்று கூற முடியவில்லை. முகமது பின் துக்ளக், தத்துவம், கணிதம், வானவியல் எல்லாம் நன்கு கற்றவர்; நாவன்மை படைத்தவர்; ஒழுக்கமுடையவர்; எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். ஆயினும், அவர் ஓர் அவசரக்காரர், பிடிவாதக்காரர்; நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு செய்ய மாட்டார். பிறர் யோசனைகளைக் கேட்க மாட்டார். இக்காரணங்களால் இவர் போட்ட திட்டங்களெல்லாம் தோல்வியடைந்து 'முட்டாள்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டன.

° **'வண்டுகளே, உங்களைத்தான்' என்ற புத்தகத்தை நேற்றுத்தான் பார்த்தேன். அருமையான பாடல்களுடன், அழகான வண்ணப்படங்களும் அதில் இருப்பது கண்டு மகிழ்ந்தேன். இப்படிப்பட்ட புத்தகங்களெல்**

லாம் இப்போது வருவதில்லையே, ஏன்? அந்தப் புத்தகத்தை எழுதிய கவிஞர் செல்ல கணபதி அவர்களின் முகவரியைச் சொல்வீர்களா?

— கே. குமாரசாமி, திருப்பாதிரிப்புலியூர்.



அரசாங்க ஆதரவும் இல்லை; பெற்றோர் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் பழக்கமும் மிகமிகக் குறைவு. இந்த நிலையில் எப்படி அந்த மாதிரிப் புத்தகங்கள் வெளிவரும்?

கவிஞர் செல்ல கணபதியின் முகவரி:
17, வெங்கடரமணா சாலை,
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.–2

* **இந்தியாவில் தங்கம் மைசூர் மாநிலத்தில் கிடைப்பதாகப் படித்திருக்கிறேன். வேறு எங்கேனும் கிடைக்கிறதா?**

— ச. கபிலன், வேலூர் — 2.

இல்லை. மைசூர் மாநிலத்தில்தான் இரண்டு இடங்களில் தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. ஒன்று கோலார் தங்க வயல்; மற்றொன்று ராய்ச்சூர் மாவட்டத்திலுள்ள ஹட்டி தங்கச் சுரங்கம்.

* **மகாபாரதத்தில் வருகிறதே அஸ்தினாபுரம் அது இப்போது எங்கே இருக்கிறது?**

— க. கோவிந்தன், வந்தவாசி.

கங்கை நதியில் பெரும் வெள்ளம் வந்து அதில், அஸ்தினாபுர நகரமே 2800 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து விட்டதாம். மண் மேடாக இருந்த அந்த இடத்தைத் தோண்டி, பல புதை பொருள்களை எடுத்து வருகிறார்கள்.

* **உங்கள் விருப்பம் ஒன்றைச் சொல்லுங்கள்.**

— ச. வ. விஜயகுமார், ச. வ. விஜயலட்சுமி, ஒசூர்.

உங்களைப் போன்ற சிறுவர்கள், எதிர்காலத்தில் இந்த நாட்டின் நன்மணிகளாகத் திகழ வேண்டும் என்பதுதான்.

* **சிங்கம், புலி — இவை எதற்கு ஆயுள் அதிகம்?**

— கோ. ஜெகநாதன், சென்னை — 12.

புலிதான் அதிக ஆண்டுகள் வாழும். சிங்கம் சுமார் 20 ஆண்டுகளும் புலி சுமார் 30 ஆண்டுகளும் வாழும் என்கிறார்கள். ஆயினும், சில சிங்கங்கள் 30 ஆண்டுகள் வரை வாழ்ந்திருக்கின்றன. அவை வாழுகின்ற இடத்தைப் பொறுத்தும், உணவைப் பொறுத்தும் ஆயுள் நீள்கிறது!

* **பாரதியாருக்குக் கணக்கு என்றால் கசப்பாமே?**

— இரா. செல்வகுமார், சென்னை — 12.

கவிதையிலே அவர் மனம் ஈடுபட்டிருந்ததால், கணக்கு அவருக்குக் கசந்தது. 'கணக்கு' என்று சொன்னாலே, பாரதியார் உடனே, "கணக்கு, பிணக்கு, ஆமணக்கு' என்று சொற்களை அடுக்க ஆரம்பித்து விடுவார்.

* **மற்போர் எந்த நாட்டில் முதல் முதலாக ஆரம்பமானது?**

— பி. தேவசேனாபதி, சூலூர்பேட்டை.



இது மிகமிகப் பழைமையான ஒரு விளையாட்டு. எந்த நாட்டில் முதன் முதலாக ஆரம்பமானது என்று சொல்ல முடியாது. பாபிலோனியர், எகிப்தியர், இந்தியர், ஆகிய பல தேசத்தவரும் பல்லாண்டுகளுக்கு முன்பே மற்போர் செய்து வந்தனர்.





கல்வியின் பெருமை

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

வினா: கல்வி என்பது என்ன?

விடை: அறியாமையைக் கிள்ளி எறிவது. அதாவது அடியோடு அறியாமையை அழிப்பது.

வினா: கல்வியின் பயன் என்ன?

விடை: எது நன்மை, எது தீமை என்பதை விளக்கமாகக் காட்டுவது கல்வியின் பயன்.

வினா: நன்மை என்பது என்ன?

விடை: தன்னலம் இல்லாமல் எல்லோருக்கும் நன்மையாய் இருப்பது நன்மை.

வினா: இதற்கு உதாரணம் என்ன?

விடை: மின்சாரம் குறைவாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். வீட்டு உபயோகத்தைவிட விவசாயத்திற்குத் தேவையென்றால், வீட்டு உபயோகத்திற்கு மின்சாரத்தைக் குறைத்து விவசாயத் தேவைக்குக் கொடுத்தால் எல்லோருக்கும் நன்மையாகும்.

வினா: தீமை என்பது என்ன?

விடை: ஒருவனுக்கு நன்மையாக இருந்து பலருக்கு அது தீமையாக இருக்குமானால், அது தீமை எனப்படும். மேலும், ஆரம்ப காலத்தில் நன்மையாக இருந்து பின்னால் தீமையாக இருக்குமானால் அதுவும் தீமைதான்.

வினா: அதற்கான உதாரணங்கள் யாவை?

விடை: பரீட்சை காலங்களில் சர்க்கஸ் போன்ற பொழுது போக்குகள் வருமானால், அது சிலருக்கு நன்மையாக இருக்கும். மேலும், பெரும்பாலான மாணவ மாணவியருக்குத் தீமையாக இருக்கும். தலை வலிக்கின்ற காலங்களில் காற்றோட்டமான இடத்தில் இருந்தால் குணமாகிவிடும். அவசரத்திற்கு மாத்திரை சாப்பிட்டால் போகப் போக மாத்திரைக்கு அடிமையாக நேரிடும். காலப் போக்கில் உடல் நிலை மிகவும் கெட்டுவிடும்.

வினா: தனி மனிதன் நன்மையை எவ்வாறு காண்பது?

விடை: மூன்று அடிப்படையில் காணலாம்:

1. தனக்கு நன்மையா? 2. அதனால் பிறர் பாதிக்கப்படுகிறார்களா? 3. எதிர் காலத்தில் அது நன்மை பயக்குமா? இவைகளுக்கு ஒழுங்கான விடை கிடைத்தால் எல்லாமே நன்மைதான்.

வினா: தனி மனிதன் தீமையை எவ்வாறு காண்பது?

விடை: இதற்கும் மூன்று அடிப்படை உண்டு. 1. தனக்குத் தீமையா? 2. தனக்கு வரும் தீமையால் அடுத்தவரும் பாதிக்கப்படுகிறாரா? 3. எதிர் காலத்திலும் தீமையைக் கொடுக்குமா? ஒவ்வொரு செயலையும் சிந்தனை செய்து விடை கண்டால் தீமையை எளிமையாகக் கண்டுவிடலாம்.

வினா: இதற்கு கல்வி எவ்வாறு பயன்படும்?

விடை: மிகச் சிறந்த முனிவர்களும் பெரியோர்களும் தங்கள் அனுபவத்தால் கண்டவற்றை நீதி நூல்களாகச் செய்திருக்கிறார்கள். கல்வியின் வழியாகத்தான் நாம் அவற்றை அறிய முடியும். ஆராய்ந்து அதன்படி நடக்க முடியும்.

வினா: பகுத்தறிவு என்றால் என்ன?

விடை: பகுத்து அறிதல் என்று பிரிக்கலாம். ஒரு செயலைச் சீர்தூக்கி அது நன்மையா? தீமையா? என்று ஆராய்தல் பகுத்தறிவு எனப்படும்.

வினா: அதற்கு உதாரணம் என்ன?

விடை: வயல் நன்றாக விளைந்திருக்கிறது. ஒரு மாடு மேய வருகிறது. வயலின் காவல்காரன் அதைக் கட்டிப் போட்டு நன்றாக அடிக்கிறான். பிறகு விரட்டி விடுகிறான். ஆனால், மறு நாளும் அந்த மாடு வருகிறது. காரணம், போனால் திரும்பவும் அடி விழும் என்று அறிவதில்லை. ஆனால், மனிதன் தனக்கு ஆபத்து வரும் என்ற இடத்திற்குச் செல்ல மாட்டான். இதற்குத்தான் பகுத்தறிவு என்று பெயர்.

வினா: அப்படிப்பட்ட கல்வியின் பெருமை என்ன?

விடை: ஆன்மா நிலையானது. ஆனால் உடல் செய்யும் பாவ புண்ணியங்களை ஆன்மா அனுபவிக்கிறது. உயிரும், உடலும் கூடி இருக்கும்வரை நல்ல காரியங்களை உடல் செய்யக் கல்வி வழி செய்கிறது. இன்பமும், துன்பமும் உடலோடு நின்றுவிடுகின்றன. கல்வியின் பயன்கள் ஆன்மாவைச் சென்று அடைகின்றன. ஆகவே கல்வி மிக உயர்வானது. மக்கள் அனைவரும் அவசியம் கற்க வேண்டியது.

திருக்குறள்:

"எண்என்ப, ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு."

பிருந்தாவனம்

பலசரக்கு



வால் உள்ள பலசரக்கு — வால் மிளகு

மாசத்தை உடைய பலசரக்கு — மாசிக்காய்.

ஏலத்தை நினைவூட்டும் பலசரக்கு— ஏலக்காய்

ஜாதியை உடைய பலசரக்கு — ஜாதிக்காய்

கரை உடைய பலசரக்கு—சர்க்கரை

பூ உள்ள பலசரக்கு — குங்குமப்பூ

— பு. அருள்செல்வம் (9821), காரைக்குடி.

பழமொழிகள்

* அழகான பழமொழி பையிலுள்ள தங்க நாணயம் போன்றது.

— ஸ்விட்சர்லாந்து

* பழமொழிகளில் உமி கிடையாது

— இந்தியா.



* நல்ல நினைவு இருப்பதற்காகவே பழமொழிகள் உள்ளன.

— பிரான்ஸ்.

* பழமொழிகள் மக்கள் புழங்கும் நாணயங்கள்.

— ரஷ்யா.


* பழமொழிகள் அனுபவத்தின் எதிரொலிகள் — ஸ்வீடன்.

தொகுப்பு: பி. செந்தில்குமார் (6861), பேரூர்.

பச்சை

கீழேயுள்ள கேள்விக்குரிய விடை ஒவ்வொன்றிலும் முதலில் இருப்பது பச்சை.

1. சிறுவர் விளையாட்டுக்களில் ஒன்று



2. சமையலுக்குப் பயன்படும் வாசனைப் பொருள்.
3. நவரத்தினங்களில் ஒன்று
4. செடியில் விளையும் காரமான காய்
5. சொன்னதைச் சொல்லும் பறவை
6. சாலையைக் கடக்க உதவும் விளக்கு

விடை: 1. பச்சைக் குதிரை; 2. பச்சைக் கற்பூரம்; 3. பச்சைக் கல்; 4. பச்சை மிளகாய்; 5. பச்சைக் கிளி; 6. பச்சை விளக்கு.

— வெ. சீனுவாசன் (6577), திருவாரூர்.




பறக்கும் பத்து!

'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்கிறோமே, அந்தப் பத்து என்னென்ன தெரியுமா?

மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காதல்' என்பவைதான்!

— க.ப. சிவா (3450),
திருநெல்வேலி.

அதிக மிருகங்கள்



உலகிலேயே அதிகமான மிருகங்கள் உள்ள மிருகக் காட்சி சாலை கலிபோர்னியாவிலுள்ள சாண்டியாகோ மிருகக் காட்சி சாலைதான். அங்குள்ள மிருகங்களின் மொத்த எண்ணிக்கை 5100.

— ஆர். கணேஷ், (2933),
அம்பத்தூர்.

கேட்டு ரசித்தது

நான் சுவாமி மலைக்கு ஒருமுறை சென்றிருந்தேன். அப்போது அங்கே ஒரு வெள்ளைக்கார உல்லாசப் பயணியைப் பார்க்க நேர்ந்தது. அவர் அங்குள்ள சிற்பங்களையெல்லாம் பார்த்து ரசித்து பின்னர் அருள்மிகு ஸ்ரீசுவாமிநாத சுவாமியையும் தரிசித்தார். பிறகு, கோயிலை விட்டு வெளியில் வந்தார்.

அப்பொழுது தேரடியில் சிலர் சண்டை போட்டுக் கொண்டு நின்றார்கள். உடனே, அந்த வழியாக வந்த குருக்களைப் பார்த்து, **'What is there?'** என்று ஆங்கிலத்தில் கேட்டார்.



there என்பதைத் தேர் என்று நினைத்து, 'இது அம்மன் தேர், அது சாமி தேர்' என்றார் அந்தக் குருக்கள். வெள்ளைக்காரர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

— ஆர். எஸ். பாலாஜி (13044),
மன்னார்குடி.


பெயரும் தொழிலும்



"ரேஷன் கடையில் உங்கள் பிள்ளைகள் இருவரும் வேலை பார்ப்பதாகச் சொன்னீங்களே, அவங்க பெயர்கள் என்ன?"

"மூத்தவன் பெயர் சுந்தரேஷன், இளையவன் பெயர் கதிரேஷன்."

— வை. மோகன்தாஸ், (10083),
மணச்சநல்லூர்.



நீரில் நனைந்தாலும்...

நாம் நீரில் நனைந்தால் ஜலதோஷம் பிடிக்கிறது. ஆனால், வாத்து, கொக்கு போன்ற நீர் வாழ் பறவைகளுக்கு ஜல தோஷம் பிடிப்பதில்லை, என்ன காரணம்?

வாத்து போன்ற பறவைகளுக்கு வாலுக்கு அருகில் உள்ள சிறு உறுப்பிலிருந்து எண்ணெய் உற்பத்தியாகிறது. அந்த எண்ணெயை பறவை தன் அலகால் எடுத்து உடம்பு முழுவதும் தடவிக் கொள்ளுகிறது. இதனால் உடலும் நனைவதில்லை; ஜலதோஷமும் பிடிப்பதில்லை.

— ரா.க. சௌ. கருணாகரன், (883),
சேலம்—1.

பொன் நெல்லிக்கனி

ஒருமுறை சங்கரர் துவாதசி தினத்தன்று பரம ஏழையான ஒருவரின் வீட்டு முன்நின்று பிச்சை கேட்டார். அந்த வீட்டில் உணவுப் பண்டம் எதுவும் கிடையாது. துவாதசி தினத்தன்று கடவுளுக்கு நிவேதனம் செய்வதற்காக ஒரு நெல்லிக் கனியை மட்டும் எடுத்து வைத்திருந்தாள் அந்த வீட்டுப் பெண்மணி.

பால முருகனைப் போல் வாசலில் வந்து நிற்கும் சங்கரரரைக் கண்டவுடன் அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. ''அடடா! இந்தத் தெய்வக் குழந்தைக்குப் பிச்சையிட ஒன்றும் இல்லையே!'' என்று யோசித்த அவள், நிவேதனத்திற்காக வைத்திருந்த நெல்லிக் கனியை பிச்சைப் பாத்திரத்தில் போட்டாள். அவளது கருணையைக் கண்ட சங்கரர் லட்சுமி தேவியைக் குறித்துத் துதி பாடினார்.

என்ன அதிசயம்! அவ்வீட்டு முற்றத்தில் தங்கத்தாலான நெல்லிக் கனிகள் மழையாகப் பொழிந்தன. அதைக் கண்டு, அப்பெண்மணி வியப்படைந்தாள்.

அப்போது அவர் பாடிய துதிப் பாடல்தான் 'கனகதாராஸ்தோத்திரம்' என்று வழங்கப்படுகிறது.

— சு. நாகராஜன் (10451),
தஞ்சாவூர்.



மண்ணிலே சோறு!



பைத்தியம்—1: ஐயோ! இந்த அநியாயத்தைப் பாரேன்!

பைத்தியம்—2: என்ன அநியாயம்?

பைத்தியம்—1: நான் மண் தின்னும் போது ஒரு பாவி அதிலே சோற்றை அள்ளிப் போட்டுட்டான்.

— ஆர். பிரசன்னா (3221), கரூர்.

இப்படித்தான் தூங்கினேன்

முதல் வகுப்பு ஆசிரியர் குல்லாக் கதையைப் பிள்ளைகளுக்குச் சொன்னார். ஒரு குல்லா வியாபாரி மரத்தடியில் குல்லாக்களை வைத்துவிட்டுத் தூங்கியபோது சில குரங்குகள் அந்தக் குல்லாக்களை எடுத்துத் தலையில் மாட்டிக் கொண்டு மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டதையும், தூங்கி



எழுந்த குல்லா வியாபாரி உடனே தன் தலையிலிருந்த குல்லாவைக் கழற்றி எறியவே அந்தக் குரங்குகளும் தங்கள் தலையிலிருந்த குல்லாக்களைக் கழற்றி எறிந்ததையும் சுவையாகக் கூறினார்.

மறுநாளும் அதே கதையைக் கூறும்படி குழந்தைகள் கேட்டார்கள். கதையைக் கூறிக் கொண்டிருக்கும்போதே, ஆசிரியருக்குத் தூக்கம் வந்துவிட்டது. மேஜை மீது தலையை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று வந்துவிட்டார் பள்ளி ஆய்வாளர்! உடனே ஒரு சிறுவன் ஆசிரியர் அருகில்ஓடிப்போய் மெதுவாக விஷயத்தைச் சொன்னான். உடனே ஆசிரியர் கண்விழித்து "இப்படித்தான் அந்தக் குல்லா வியாபாரி மரத்தடியில் படுத்துத் தூங்கினான்" என்று கூறி சமாளித்துவிட்டார்!

— ஆர். பாலமுருகன் (9368),
சேலம்—1.

நல்ல வெள்ளை




கல்கத்தாவில் மல்லிகைப் பூ விற்பனையாளர்கள் மல்லிகைப் பூக்களை நீலம் கரைத்த நீரில் நனைத்து விற்கிறார்கள். காரணம், பூக்கள் நல்ல வெள்ளையாக இருக்குமாம்.

— அ. செந்தில்நாதன் (10805),
சென்னை—33.

எத்தனை மாம்பழங்கள்?

இராமனின் தந்தை ஒரு பழக் கடை வைத்திருந்தார். அவர் வெளியூர் செல்லும்போது இராமனைப் பார்த்து, "இதோ இங்கு ஏழு பெட்டிகள் இருக்கின்றன. நம் கடையில் அடுக்கி வைத்துள்ள மாம்பழங்களில்பாதியை முதல் பெட்டியில்வை.மீதமுள்ள பழங்களில் பாதியை இரண்டாவது பெட்டியில் வை. இப்படியே ஏழு பெட்டிகளிலும் வைத்துவிட்டு மீதி வரும் ஒரு பழத்தை நீ எடுத்துக் கொள்" என்றார்.



இராமனும் அப்படியே செய்தான். அப்படியானால் கடையில் அடுக்கி வைத்திருந்த மாம்பழங்கள் எத்தனை?

விடை: 128 பழங்கள்

— வ. அருள் முருகன், (10080),
கடலூர்.

யோசி—யோசி

1. வாயில்லா பிராணிகளை—
2. தமிழ் மாதத்தில் ஒன்று—
3. திருத்தலங்களில் ஒன்று—
4. கண்ணில் விழுவது—
5. தைக்கப் பயன்படுவது—
6. இரவல் வாங்குவதற்குப் பெயர்—

விடை: 1. நேசி; 2. மாசி; 3. காசி; 4. தூசி; 5. ஊசி; 6. ஓசி.

— ஆர். பாலாஜி (8366),
சென்னை—84.





சி. சுப்பிரமணியம் அவர்கள் 'சிரிக்கும் பூக்கள்' முதல் பிரதியை ஒரு சிறுவனிடம் கொடுத்து வெளியிடுகிறார். அருகில் இருப்பவர் டாக்டர் அவ்வை நடராஜன்.
சி. சுப்பிரமணியம் அவர்களின் பேச்சை டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்களும் நீதிபதி எஸ். மோகன் அவர்களும் கவனமாய்க் கேட்கிறார்கள்.

உங்களுக்காகவே ஒரு புத்தகம்

'அருமைச் சிறுவர் சிறுமியரே,' என்று அன்போடு உங்களை அழைத்துப் பேசும் கோகுலம் கௌரவ ஆசிரியர் அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதிய மலரும் உள்ளம் புத்தகத்தை உங்களில் பலர் படித்திருப்பீர்கள். அந்தப் புத்தகத்தின் இரண்டு தொகுதிகளிலும் உள்ள பல பாட்டுக்களைப் பாடியும், ஆடியும் மகிழ்ந்திருப்பீர்கள். 'மியாவ் மியாவ் பூனையாரை'யும் 'கோவில் யானை'யையும் நினைவிருக்கிறதில்லையா? 'அப்பா என்னை அழைத்துச் சென்றார் அங்கு ஓரிடம்' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடித்ததை மறந்து விட முடியுமா...?

இத்தனை நாளாக உங்களையெல்லாம் சந்தோஷப்படுத்திய 'மலரும் உள்ளம்' புத்தகத்தைப் போலவே இன்னொரு புத்தகத்தையும் இப்போது எழுதியுள்ளார் குழந்தைக் கவிஞர், அழ. வள்ளியப்பா. 'சிரிக்கும் பூக்கள்' என்ற அந்த அழகான புத்தகத்தில் 110 பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாட்டையும் நீங்கள் படித்து ரசித்து மகிழ உதவும் விதவிதமான படங்களும் நிறைய உள்ளன. வண்ணமயமான அட்டையும் உள்ளது.

சிரிக்கும் பூக்களில் உள்ள சில பாடல்களை இங்கே மாதிரிக்குத் தருகிறேன், படித்துப் பாருங்கள்:

சின்னச் சின்னக் கோபுரம்
சிற்பி செய்யாக் கோபுரம்
என்னைப் போல மூன்றடி
இருக்கும் அந்தக் கோபுரம்.

சின்னஞ் சிறிய கோபுரம்
செங்கல் நிறத்துக் கோபுரம்
மண்ணால் ஆன கோபுரம்
மனிதர் நுழையாக் கோபுரம்

அருமை யான கோபுரம்
யார் அமைத்த கோபுரம்?
கறையான் ஒன்று கூடியே
கட்டி வைத்த கோபுரம்.

— இது விடுகதையைப் போல் புதிர் போடும் பாட்டு!

'ஆஹா! இப்படிச் செய்ய முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று கற்பனையில் நம்மை மூழ்கச் செய்யும் ஒரு கவிதை:

ஏணி மேலே ஏணி வைத்து
ஏறப் போகிறேன்
ஏறி ஏறி எட்டி வானை
முட்டப் போகிறேன்

என்று ஆரம்பித்து வானத்து நட்சத்திரங்களைத் திரட்டி, சட்டைப் பையில் அடைக்கப் போவதையும், பந்து நிலாவை எடுத்து வீசி விளையாடப் போவதையும் விவரிக்கிறது.

'ஐயோ! இப்படி ஆகிவிட்டதே!' என்று வருத்தப்படச் செய்யும் ஒரு பாட்டு:

கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே,
தரையில் கிடப்பதேன்?
குருவி காகம் கிளையில் அமர்ந்து
கொத்திப்போட்டதோ?— இல்லை
பெரிய காற்று விரைந்து வந்து
பிய்த்துப் போட்டதோ?
கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே,
தரையில் கிடப்பதேன்?

குறும்புப் பையன் எறிந்த கல்லால்
பிரிய நேர்ந்ததோ? — இல்லை
கொறிக்கும் அணில்தான் உன்னைக்
கீழே
பறித்துப் போட்டதோ?
கொய்யாப் பூவே, கொய்யாப் பூவே
தரையில் கிடப்பதேன்?

* * * *

பூவே நீயும் காய் ஆவாய்
காயி லிருந்து கனி ஆவாய்

கனியை உடனே பறித்திடலாம்
கடித்துக் கடித்துச் சுவைத்திடலாம்

என்றே நானும் சிலநாளாய்
எண்ணி யிருந்தேன் —ஆனால்என்

எண்ணத் தினிலே மண்விழவா
இப்படி மண்ணில் நீ விழுந்தாய்?

இத்தனை வகை வகையான பாடல்கள் அடங்கிய சிரிக்கும் பூக்கள் புத்தகம், கடந்த ஜூன் 30 ஆம் தேதியன்று சென்னை ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அரங்கில் வெளியிடப்பட்டது. அந்த வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் பல பெரியோர்கள் பேசினார்கள். அவர்கள் எல்லோரும் சிறு பிள்ளைகளான உங்களைப்போலவே திருவள்ளியப்பாவின் கவிதைகளைப் பற்றி உற்சாகத்துடனும், குதூகலத்துடனும் பேசினார்கள். அவ்விழாவில் தலைமை தாங்கியவர் நீதிபதி திரு. மோகன், புத்தகத்தை வெளியிட்டவர் பாரதத்தின் முன்னாள் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம். திரு. வள்ளியப்பாவைப் பாராட்டிப் பேசியவர்கள் — தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராஜன், பாரதியார் பால் அன்பும் பக்தியும் கொண்டவரான டாக்டர் கே. ராமமூர்த்தி, பேராசிரியர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, மற்றும் உங்களைப்போன்ற குழந்தைகளுக்கு இசையும் நாட்டியமும் சொல்லித் தந்து மகிழும் ஆசிரியை திருமதி ஆனந்தி.


திருமதி ஆனந்தி பாராட்டுகிறார்

இவர்கள் பேசியதற்கு திரு. வள்ளியப்பா பதில் அளித்த போது தாம் முதல் முறையாக கல்கி அவர்களைச் சந்தித்தபோது நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னார்:

"நீங்கள்தான் வள்ளியப்பாவா? உங்களைப்பற்றிநிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் எழுதிய 'பாலர் பாடல்' என்ற புத்தகத்தைப் பார்த்தேன். தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் அப்புத்தகத்திற்குப் பரிசு கொடுக்கலாம் என்று எண்ணினார்கள். நான்தான் வேண்டாம் என்று சொல்லி விட்டேன்" என்று கல்கி ஒளிவுமறைவு இல்லாமல் சொன்னபோது குழந்தைக் கவிஞருக்குத் தூக்கி வாரிப் போட்டதாம்.

கல்கி தொடர்ந்து சொன்னாராம்— "அந்தப் புத்தகத்தில் உள்ள கவிதைகள் காலம் கடந்து நிற்கும். ஆனால், புத்தகம் நிற்காது போலிருக்கிறதே!"

மெல்லியதாக இருந்த அந்தப் புத்தகம் நிற்க வைத்தால் நிற்காமல் மடிந்து விழுவதையே இப்படித் தமாஷாகச் சுட்டிக் காட்டினார் கல்கி. நூலகத்தில் வைக்கப்படும் புத்தகங்கள் படிக்கச் சுவையாக இருப்பதோடு அல்லாமல் பார்க்கவும் கையாளவும் தக்கனவாக இருக்க வேண்டும் என்பதாலேயே அன்று கல்கி அப்படிப் பேசினார்.


அன்று கல்கி சொன்னதை மறந்து விடாமல் 'சிரிக்கும் பூக்கள்' புத்தகத்தை அதன் ஆசிரியரும், பதிப்பகத்தாரும், அச்சகத்தாரும், ஓவியர்களும் இணைந்து மிகுந்த கவனத்துடன் வெகு நேர்த்தியாகத் தயாரித்துள்ளனர்.

எனவே, இன்றே உங்கள் அப்பா அம்மாவிடம் சொல்லி, சிரிக்கும் பூக்களின் ஒரு பிரதியை வாங்கிக் கொள்ளுங்கள்.

புத்தகத்தின் விலை ரூ. 20/—
கிடைக்கும் இடம்: பாரி நிலையம், பிராட்வே, சென்னை — 108.

— சீதா ரவி

நண்பனின் தம்பி



இன்று ஞாயிற்றுக்கிழமை. எங்கள் பள்ளி கிரிக்கெட் டீமிற்கும், ரெட் ரோஸஸ் கிரிக்கெட் டீமிற்கும் ஒரு நாள் மேட்ச் நடக்க இருக்கிறது. எங்கள் குழுவில் நான் தான் விக்கெட் கீப்பர். அசோக் கேப்டன். நல்ல பேட்ஸ்மேன். மற்ற நண்பர்களுக்கும் ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துவான். அசோக், தொடக்க ஆட்டக்காரனாக மைதானத்தில் இறங்கும் பொழுது அனைவரும் கைதட்டி மகிழ்வார்கள். அவன் புட்பாலிலும் கெட்டிக்காரன். சிறந்த ஓட்டக்காரன். பள்ளியில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் எல்லாம் முதலாவதாக வருவான் அசோக்.

இன்று மேட்சுக்குப் போகும் போது அசோக் வீட்டிற்கும் போய் அவனை அழைத்துக் கொண்டுதான் மைதானத்திற்குப் போகப் போகிறேன். ஆனால், அப்படிப் போகும்போது சங்கரன் பயல் என் கண்ணில் படாமல் இருக்க வேண்டும். அவனைப் பார்த்தாலே அபசகுனம். சங்கரன் வேறு யாருமல்ல. அசோக்கின் தம்பிதான். இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட தன் குச்சிக் கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு ரோட்டில் வருவோர் போவோர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது அவன் பொழுதுபோக்கு. சிறந்த விளையாட்டு வீரனை அசோக்கிற்கு இப்படி ஒரு தம்பியா என்று சங்கரனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஒரே அருவருப்பாக இருக்கும்.

சங்கரன் எங்கள் பள்ளியில் தான் படிக்கிறான். அவன் நன்றாகப் படிப்பான் என்றாலும் எனக்கு அவனைக் கொஞ்சம் கூடப் பிடிப்பதில்லை. அசோக் சரியாகப் படிப்பதில்லை என்றும் எப்போது பார்த்தாலும் விளையாட்டுத்தான் என்றும் அவர்கள் அப்பாவிடம் வத்தி வைப்பான். எனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்றாலும் அவன் என் மீது அன்பு வைத்திருந்தான். நான் பேசாவிட்டாலும் அவனே வலியவந்து பேசுவான். நான் பார்த்தும் பார்க்காதது மாதிரி போனாலும் அவனே என் அருகில் வந்து பேசுவான். என் மீது மரியாதையும்

பிரியமும் வைத்திருந்தான். ஆனால், அசோக்கை என் நண்பன் என்று பெருமையாகக் கூறிக் கொள்ளும் நான்,சங்கரனின் நண்பன் என்று கூற மட்டும் தயங்குவேன். இன்று என்னைப் பார்த்தால் கூட அன்பாகப் பேசுவான் சங்கரன். ஆனால் நானோ அவன் என் கண்ணில் படக்கூடாது என்று கட வுளை வேண்டிக் கொள்வேன்.

இதுதான் அசோக்கின் வீடு. நான் யாரைப் பார்க்கக் கூடாது என்று நினைத்திருந்தேனோ, அந்தச் சங்கரன் வாசலில் உட்கார்ந்திருக்கிறானே! சாலையில் சுறுசுறுப்பாகப் போய்க் கொண்டிருக்கும் வாகனங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தவன் என்னைப் பார்த்துவிட்டான். ''வாங்க அண்ணே.... வாங்க... அசோக் உள்ளே இருக்கான்... என்ன காலையிலேயே வந்துட்டீங்க? இன் னிக்கு ஏதாவது மேட்ச் இருக்கா?'' என்றான்.

''ஆமாம்'' என்று சுருக்கமாகப் பதில் கூறினேன்.

''குட்மார்னிங்'' என்றவாறே வீட் டுக்குள்ளிருந்து வந்தான் அசோக். ''என்ன இப்பவே வந்துட்டே? மேட்ச் ஆரம்பிக்க இன்னும் ஒரு மணி நேரம் இருக்கே! சரி, நீ இந்த பேட்டையும் பாலையும் வைத்துத் தட்டிக் கொண் டிரு... நான் ஒரு நிமிஷத்துலே குளிச் சிட்டு வந்துடறேன்'' என்று மட்டை யையும் பந்தையும் கொடுத்து விட்டுச் சென்றான், அசோக்.

அவன் உள்ளே சென்றவுடன் சங்கரன் என்னிடம் பேச்சுக் கொடுத் தான். ''என்ன அண்ணே, நாளைக்கு சயன்ஸ் டெஸ்ட் இருக்கு போலி ருக்கே, நல்லா படிச்சிருக்கீங்களா?'' என்று கேட்டான்.

எனக்குக் கோபம் கோபமாக வந் தது. 'அடே நொண்டிப் பயலே, குச்சிக் காலை வைச்சிக்கிட்டு என்னையே கிண் டல் பண்ணிப் பேசறியா? உன்னை நொண்டியாப் படைச்ச ஆண்டவன் ஊமையாகவும் படை...ச்சிருந்தா இந்தத் தொல்லையெல்லாம் இருந்திருக் காதே!'' என்று என் மனம் கூறினா லும், அதை வெளியில் காட்டாமல், ''ஆமா, ஆமா, எல்லாம் நல்லா 'படிச் சிருக்கேன்.'' என்றேன்.

இனியும் அங்கு நின்று கொண் டிருந்தால் அந்த நொண்டிப் பயல் ஏதாவது கேட்டுக் கொண்டேயிருப் பான் என்று நினைத்த நான் ரோட்டு ஓரத்திற்கு வந்து மட்டையால் பந்தைத் தட்டிக் கொண்டிருந்தேன். என்னு டைய திறமையை சங்கரனுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக மட் டையால் பந்தை மேல்நோக்கி அடித்து விட்டு கேட்ச் பிடிப்பதற்காக இடது பக்கம் 'டைவ்' அடித்தேன். ஆனால், ரோட்டின் நடுவில் வந்து விழுந்து விட்டதை நான் உணரவில்லை.

திடீரென்று ''அண்ணே அண்ணே! பின்னால் லாரி'' என்று சங்கரனின் குரல் காதில் வந்து மோதி யது. அப்போதுதான் நிலைமையை உணர்ந்தேன். திரும்பிப் பார்த்தால் இரும்புத் தூண்களை ஏற்றிய லாரி வேகமாக என்னை நெருங்கிவிட்டது. கண் இமைக்கும் நேரத்தில்,ரோட்டின் ஓரத்திற்குப் புரண்டுவிட்டேன். சங்கரன் சரியான நேரத்தில் குரல் கொடுத்திருக்காவிட்டால் லாரியின் அடியில் சிக்கிச் சிதைந்திருப்பேன். புரண்டு விழுந்த வேகத்தில் சங்கர னின் கால்களின் அருகில்போய்விழுந் தேன். பயத்தால் உடல் நடுங்கிக் கொண்டிருந்த சங்கரன், ''நல்ல வேளை, தப்பிச்சுட்டீங்க அண்ணே! இந்த நொண்டியால கத்தத்தான் முடிந்தது. ஓடிவந்து உங்களைக் காப் பாற்ற முடியல்லே. என்னை நொண் டியா படைச்ச இறைவன் ஊமையா வும் படைச்சிருந்தா உங்களுக்குக் குரல் கூடக் கொடுக்க முடியாமல் போயிருக்கும். அதுக்காக, கடவுளுக்கு நான் நன்றி சொல்லணும்'' என்று கண்ணீர் வழியக் கூறினான்.

அப்போதுதான் உடலின் ஊனம் உண்மையில் ஊனமில்லை. மனத்தின் ஊனமே ஊனம் என்று எனக்குப் புரிந்தது. நல்ல உள்ளம் கொண்ட சங்கரனை 'நொண்டி,' ''நொண்டி' என்று அழைத்த நான்தான் மனத்தால் ஊனமுற்றவன்.

எம்.பி.ராஜசேகர்



வி.வி.கிரி

நம் குடியரசுத் தலைவராயிருந்த வி.வி. கிரி அவர்கள் அயர்லாந்தி லுள்ள டர்பன் நகரில் சில காலம் கல்வி பயின்றவர். படிப்பை முடித்த பின், இவர் வழக்கறிஞராக வாழ்க்கை யைத் தொடங்கினர். அப்போது மகாத்மா காந்தி ஆரம்பித்த ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கு கொண் டார். தேச விடுதலைக்கும், தொழி லாளர் நலனுக்கும் இவர் அரும்பாடு பட்டுள்ளார்.

முதலில் அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவராகவும் பிறகு பல்வேறு தொழிற்சங்கங்களில் பொறுப்புள்ள பதவிகளை வகித்தும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை உயரத் தொண்டாற்றினர்.

சென்னை மாகாணத்தில் தொழி லாளர் நல அமைச்சராகவும் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சராகவும் பணியாற்றினர். இலங்கையில் இந்தியத் தூதராக மூன்று ஆண்டுகள் இருந்தார். உத்தரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங் களின் கவர்னராக இருந்து, பிறகு குடியரசுத் துணைத் தலைவராக ஆனர். 1969 முதல் 1974 வரை குடியரசுத் தலைவர் பதவியை வகித்தார்.



மாண்டிசோரி அம்மையார்

'மாண்டிசோரி கல்விமுறை' நம் நாட்டிலும் உலகின் பல பாகங்களி லும் கையாளப்படுகிறது. இந்த முறை யைத் தோற்றுவித்தவர் இத்தாலிதேசத் தில் பிறந்தவரான மாண்டிசோரி அம்மையார். பெண் கல்வி அதிகமாகப் பரவாத அக்காலத்தில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்றவர் இவர்.

முதலில் இவர், மூளை வளர்ச்சி யில்லாத குழந்தைகளுக்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றின் தலைவ ராக இருந்தார். அப்போது அவர்களுக் காகச் சில விளையாட்டுக் கருவிகளைச் செய்தார். அவற்றைப் பயன்படுத்தி அவர்களின் மங்கிக் கிடந்த புத்தி யைத் தூண்டினர். நல்ல பலன் கிடைத் தது. பிறகு அதே கருவிகளில் சில மாற்றங்கள் செய்து மற்ற குழந்தை களுக்கும் கல்வி போதிக்கத் தொடங்கி ஞர். நல்ல வெற்றியும் கண்டார்.

சென்னை அடையாற்றிலுள்ள பிரும்ம ஞான சங்கத்தாரின் அழைப் பின் பேரில் இவர் சென்னை வந்தார். அப்போது இரண்டாவது உலகயுத்தம் நடந்ததால், 7 ஆண்டுகள் நம் நாட் டிலே தங்கிவிட்டார். அப்போது இவர் பல ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

உருவகக் கதைகள்

— ஜெயபாரன்

பழைய புத்தகம்



ஒரு பழைய புத்தகக் கடை. அடுக்கி வைக்கப்பட்ட செங்கற்களைப் போல புத்தகங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பக்குவப் படுத்தப்பட்ட காய்ந்த மீன்களைப் போல, சில புத்தகங்களும் ஒரு பக்கத்தில் காணப்பட்டன.

அங்கிருந்த ஒரு பழைய புத்தகத்தைப் பார்த்து மற்ற புத்தகங்கள் கேலி செய்து கொண்டிருந்தன.

''ஒரு புத்தகம் பார்ப்பதற்கு அழகாக இருக்க வேண்டும். கையில் எடுத்தால் படிப்பதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். கிழிந்த சட்டை போட்டுக் கொண்டிருக்கும் அநாதையைப் போல இருந்தால் — அதை யார் தொடுவார்கள்? இந்தக் கடைக்காரருக்கு இது கூடவா தெரியாது? அழகாக நம்மை வைத்திருக்கும் இடத்தில், இப்படி அலங்கோலமாக ஒரு புத்தகத்தையும் சேர்த்து வைத்து நம்மையும் அவமானப்படுத்துகிறாரே'' என்று அங்கலாய்த்துக் கொண்டன.

இந்தச் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பழம் புத்தகம் பதிலுக்கு ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தது.

அதனுடைய அமைதியான போக்கைக் கண்டு ஒரு புத்தகம் ஆதரவாகப் பேசியது.


''நீங்கள் இப்படிப் பேசுவது நல்லதல்ல. அந்தப் புத்தகம் நம்மைப் போல, பார்வைக்கு அழகாக இல்லாமல் இருக்கலாம். அதற்காக அதை நாம் கேலி செய்யக் கூடாது. அது நம்மைவிட நாற்பது வயது மூத்தது. அதற்காகவாவது நாம் அதை மதிக்க வேண்டும்'' இந்தப் பரிவான சொற்களைக் கேட்ட அந்தப் பழம் புத்தகம், அப்போதும் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை.

அந்தப்புத்தகக்கடைக்குஒருபெரியவர் வந்தார். கேலி பேசிய புத்தகங்களில் ஒன்றை எடுத்தார். அதைப் புரட்டிப் பார்த்தார். அதன் விலையைக் கேட்டார். கடைக்காரர் ஐந்து ரூபாய் என்றார்.

அந்தப் பெரியவரின் பார்வையில் கேலிக்கு உள்ளாகிய அந்தப் பழம் புத்தகம் பட்டது. அவர் அதை எடுத்தார். ஆவலுடன் அதைப் பிரித்தார். பக்கங்களை மெதுவாகத்தள்ளிப்பார்த்தார். அதன் விலையைக் கேட்டார். கடைக்காரர் 'முப்பது ரூபாய்' என்றார். அந்தப் பெரியவர் பேரம் பேசவில்லை. உடனே முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்து, 'இது மிகவும்

அரிய புத்தகம். இதை நான் தேடாத இடம் இல்லை. பத்து ஆண்டுகளாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். இன்று கிடைத்தது. மிகவும் நன்றி'' என்றார். மேலும் பத்து ரூபாய் அதிகமாகக் கேட்காமல் போய்விட்டோமே என்று வருந்தினார் கடைக்காரர். அதன் பெருமை புரியாமல் வெளித் தோற்றத்தைக் கண்டு கேலி செய்துவிட்டோமே! என்று சில புத்தகங்கள் வருந்தின.

நல்லவனுக்குத் தண்டனை!



அந்தக் குள்ள வெள்ளை முயல் எல்லோருடனும் நன்றாகப் பழகியது. அனைவரையும் நம்பியது. கள்ளங்கபடமின்றி நடந்து கொண்டது. அது ஒரு நாள் ஒரு தட்டில் தாய் கொடுத்த வடையை எடுத்துக்கொண்டுவிட்டு வாசலின் முன்னால் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அப்போது ஒரு காகம் அங்கு வந்தது. வடையைப் பார்த்த அந்தக் காகத்தின் நாக்கில் நீர் ஊறியது. முயலை ஏமாற்றிவிட்டு அந்த வடையை எடுத்துக் கொண்டு போக வேண்டுமென அது திட்டமிட்டது.

காகம் முயலின் அருகில் சென்றது. அதன் வெண்ணிற உடம்பை வானளாவப் புகழ்ந்தது. அச்சமயத்தில் எங்கோ ஓர் ஓசை கேட்டது. உடனே, காகம் முயலைப் பார்த்து, ''உன் அம்மா உன்னைக் கூப்பிடுகிறார்கள் போலிருக்கிறதே'' என்று கூறியது.

முயல், வடையை அப்படியே வைத்துவிட்டு, உள்ளே ஓடியது. அம்மா தன்னைக் கூப்பிடவில்லை என்று அறிந்து வெளியே வந்து பார்த்த போது, தனது தட்டு மட்டுமே அங்கு இருந்தது. அதிலிருந்த வடையைக் காணவில்லை! வடையைக் காகம்தான் தன்னை ஏமாற்றிவிட்டு எடுத்துக் கொண்டு போய்விட்டது என்பதை உணர்ந்து கொண்டது. அதற்குக் காகத்தின் மீது கடுஞ் சினமும் அளவற்ற வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன.

அந்த வெள்ளை முயல், மற்றொரு நாள் சுவையான பழங்களைத் தின்று கொண்டிருந்தது. அப்போது அங்கே வந்த ஒரு குயில், தனக்கும் சில பழங்களைத் தரச் சொல்லிப் பணிவாகக் கேட்டது. ''ஓ, உனக்கும் தருகிறேன்'' என்று சொன்ன முயல், பழங்களுடன் வீட்டுக்குள் சென்று ஒரு கோலை எடுத்து வந்தது. கோலினால் குயிலை அடிக்க ஆரம்பித்தது. இதைக் கண்டு மிரண்ட குயில், ''என்னை ஏன் அடிக்கிறாய்? பழம் தராவிட்டால் இல்லை என்று சொல்வதுதானே?'' என்று ஆத்திரத்துடன் கேட்டது.

''அன்று ஒரு நாள் என் வடையைத் திருடிக்கொண்ட காகமே, இன்று பழத்திற்குப் பங்கு கேட்க நல்லவனைப் போல வந்து நடிக்கிறாயா?'' என்று முயல் கேட்டது.

''நான் காகமும் அல்ல. நான் உன் வடையைத் திருடியதும் இல்லை'' என்று குயில் பதில் சொன்னது.


முயல் அதன் பேச்சை நம்பவில்லை. குயிலுக்கும் காக்கைக்கும் வித்தியாசம் தெரியாததால் அது, ''நீ என்னை ஏமாற்றியதும் அல்லாமல் என்னிடம் பொய் சொல்லி என்னை முட்டாளாக்கவும் பார்க்கிறாயா?'' என்று சொல்லிக் கொண்டு மீண்டும் அடிப்பதற்குக் கோலை ஓங்கியது. அதைக் கண்ட குயில், ''ஒருவர் செய்த தப்புக்கு, வேறு ஒருவர் தண்டிக்கப்படுவதுதான் உலக இயல்பு போலும்'' என்று சொல்லிக் கொண்டே பறந்துவிட்டது.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3690 வி. லலிதா, 1/39, அக்ரகாரம், கணியூர் — 638 203.
3691 எஸ். நஜுமுனிசா, 17, அக்ரகார வீதி, கணியூர் — 638 203.
3692 பி. ரமேஷ், 33, ஜாபர் பேக் தெரு, செஞ்சி — 604 202.
3693 எஸ். உஷா, X பாணாதுரை மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்.
3694 கே. ராஜன்பாபு, ஜெ. 151/1, கெங்கை கொண்டான் காலனி, நெய்வேலி — 2.
3695 த. பிரேமலதா, 19, ஞானகிராம் நகர், நெல்லிக்குப்பம் — 607 105.
3696 மு. வாசன், சிங்கை — 624 502.
3697 ச. பத்மாவதி, 2/152, திருச்சி ரோடு, மதுராபுரி, துறையூர் — 621 010, திருச்சி மாவட்டம்.
3698 பி. ஸ்ரீவித்யா, 14, ஸ்ரீராம் காலனி, கும்பகோணம்.
3699 வெ. ராதாகிருஷ்ணன், 75, பக்தபுரி தெரு, கும்பகோணம்.
3700 என். முத்து, 4 — பி, பாலு முதலி தெரு, சென்னை — 17.
3701 ப. சங்கர், 27, என். ஜி. ஜி. ஓ. நகர், செங்கல்பட்டு — 603 001.
3702 ஆர். ஜெ. ரவிசங்கர், 28, நேருஜி ரோடு, விழுப்புரம் — 605 602.
3703 அ. குமார் பத்மநாபன் யூ — 58, கோவைப்புதூர், கோவை — 641 042.
3704 எஸ். ரமேஷ், 59, முனுசாமி அவின்யூ, காஞ்சிபுரம் — 631 501.
3705 எஸ். ஞானகிராமன், 280, மெயின் ரோடு, ஆறுமுகநேரி — 628 202.
3706 க. ராஜா, 89/14, சென்னிமலை ரோடு, நியூ பில்டிங், ஈரோடு — 638 002.
3707 க. ஹரிஹரன், 'ஆனந்தபவன்,' கண்ணக்கோடு, மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம் — 629 165.
3708 எஸ். ஏ. சர்புதீன், 4, உப்பு கிணறு சந்து, ராஜவீதி, கோவை — 1.
3709 வெ. விநோத், 1, ராஜேந்திரப்பிரசாத் ரோடு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை — 44.
3710 கே. மணி T.C. 23/802, வழிச்சாலை தெரு, திருவனந்தபுரம் — 23.
3711 ம. எழிலன், 25 டி, பெருமாள் கீழ வீதி, மடப்புரம், திருவாரூர் — 610 001.
3712 ஜெ. சுதாகர், 6/312, வடக்குரத வீதி, சோழவந்தான் — 624 214.
3713 ஜி. ஆர். துளசி பிருந்தா, த/பெ. ஜி. ராகவன், ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருமலைராயபுரம் — 624 622. ஸ்ரீராமபுரம் அஞ்சல்.
3714 எஸ். எம். கண்ணன், 16, ஸ்ரீனிவாச பெருமாள் கோயில் தெரு, வாலாஜா பேட்டை, வ. ஆ. மாவட்டம் — 632 513.
3715 எஸ். சௌந்தரபாண்டியன், பேப்பர் பையன், மறவமங்கலம்.
3716 பா. பிரமிளா, 9, ரத்தினசிங்ககுளம், ஆரணி ரோடு, வேலூர் — 632 001.
3717 தா. பரமேஸ்வரி, டபிள்யூ 10/49, வையாபுரி வாசநிலையம், மேச்சேரி அஞ்சல், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம்.
3718 கே. அண்ணாதுரை, கண்டக்கம் பாளையம், புக்குளம் அஞ்சல், உடுமலை தாலுகா.
3719 எஸ். சீனிவாசன், 25 ஜி, கிருஷ்ணம்பாளையம் ரோடு, ஈரோடு — 3.
3720 பி. ஆனந்த், க — 2, வீட்டு வசதி வாரியம், எஸ். வி. மில் அஞ்சல், உடுமலைப் பேட்டை, கோவை மாவட்டம்.
3721 மு. இராமகிருஷ்ணன், 9 அழகப்பா லே அவுட், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி — 2.
3722 பா. சரவணபவன், 13, ஜெ. சங்கர் நகர், கொமரசாமிப்பட்டி, சேலம் — 7.
3723 A. Venkadesvaran, Gindupittiya Street, Colombo -13, Sri Lanka.
3724 B. Anubama, No. 20, Cross Road 'A', Austin Town, Bangalore -4.
3725 ஜி. சுமதி, 5, அஹமத் காலனி, ராமலிங்க நகர், திருச்சி — 620 003.
3726 கே. செந்தில்நாதன், 2, ராஜாஜி தெரு, தென்பதி, சீர்காழி — 609 111.
3727 தி. ஸ்ரீகாந்த், 33 ஏ, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி — 620 017.
3728 ஆர். சுரமுத்து, த/பெ. கே. ரங்கநாதன், திருமழபாடி அஞ்சல் — 621 831.
3729 ஆர். ஸ்ரீப்ரியா, பிளாட் — 12, திருநகர் அனெக்ஸ், வளசரவாக்கம், சென்னை — 87.
3730 தோ. ச. லட்சுமி, 113, ஆர். எஸ். ரோடு, கும்மிடிப்பூண்டி.
3731 சி. செந்தில்குமார், 29 ஏ, 13 வது கிராஸ் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை — 600 044.
3732 கி. கண்ணன், சி — 12, குஜராத் சாலை, வட்டம் — 19, நெய்வேலி டவுன்ஷிப்.
3733 கே. எம். டார்வின், சி. கொத்தங்குடி தெரு, சிதம்பரம்
3734 க. சாந்த மீனாட்சி, 1/99, கிழக்கு முதல் தெரு, சண்முகநாதபுரம் — 623 314.

3735 கே. திலகவதி, 70, திருநகர் காலனி, ஈரோடு—638 003.
3736 ஆர். செந்தில்குமார், த/பெ. ஆர். சண்முகவல்லி, ஸ்டேட் பாங்கு பின்புறம், ஹைவேஸ் ரோடு, செட்டிபாளையம்—641 201 போத்தனூர். வழி— கோவை.
3737 ம. அருண்குமார், 34 ஏ, தாமரை பெரிய நாயகம் வீதி, இராமநாதபுரம், கோவை—45
3738 ஒய். ரவிசங்கர், 16, முதல் மெயின் ரோடு, கண்ணன் நகர், மடிப்பாக்கம், சென்னை—600 091.
3739 எஸ். வேதவல்லி, 95/2, சபாபதி நகர், 4 வது தெரு, மூவரசம்பேட்டை, சென்னை—91
3740 க. சுமித்ரா, 95/2, 4 ஆம் தெரு, மூவரசம்பேட்டை, சென்னை—91.
3741 ல. திருவம்பலம், 6, III கிராஸ் தெரு, கண்ணன் நகர், மடிப்பாக்கம், சென்னை—91.
3742 வி. மோகன்ராம், 7, 3 வது கிராஸ் தெரு, கண்ணன் நகர், சென்னை—91.
3743 என். ஜி. உஷா, 9, I மெயின் ரோடு, கண்ணன் நகர், சென்னை—91.
3744 டி.எஸ். ஜெயஸ்ரீ, பிளாட் எண்—4, ராகவ நகர், மூவரசம்பேட்டை, சென்னை—91.
3745 எம். கே. மாலா, 25, எம்.எம்.டி.சி. காலனி, நங்கநல்லூர், சென்னை—600 061.
3746 ஜி. ஷீலா, 9, I மெயின் ரோடு, கண்ணன் நகர், சென்னை—91.
3747 இரா. ஜெயக்குமார் 16/36, காந்தி நகர், கணபதி அஞ்சல், கோவை—6.
3748 எஸ். எம்மானுவல் பிரபு, சம்பூர்ணம் ஹோம், ராணிப்பேட்டை இண்டஸ்டிரியல் எஸ்டேட், ராணிப்பேட்டை—632 403.
3749 எம். ஸ்ரீதர், 176, சுண்ணாம்புக்காரத் தெரு, வேலூர்—4
3750 கே. பிரகாஷ், 20, வி.ஓ.சி. காலனி, பீளமேடு, கோவை—641 004.
3751 ஜி. கணேசன், த/பெ. கே. கோபாலகிருஷ்ண தேசிகர், பெருவிளை, ஆசாரி பள்ளம் அஞ்சல், குமரிமாவட்டம்.
3752 பி. கிருஷ்ணப்ரியா, 37, மேல சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி—620 006.
3753 டி. ராஜசேகர், 12, ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ், பிரிமியர் மில்ஸ், ஒத்தக்கால் மண்டபம் கோவை—641 032.
3754 டி.ஏ. சுந்தரவேலு, 5, ஏ.கே.இ. கிராஸ் ரோடு, திருச்செங்கோடு—637 211.
3755 டி. மதிவாணன், பி—4, வாணியாறு குடியிருப்பு, பாப்பிரெட்டிபட்டி—636 905.
3756 சி. சங்கர், 1, அங்காளம்மன் தெரு, நெல்லிக்குப்பம்.
3757 எல். கமலக்கண்ணன், த/பெ. ஆர். லக்ஷ்மிநாராயணன், ஐ.டி.சி.—6, மேட்டூர்டாம்—1
3758 ஏ.எல். அண்ணாமலை, 21, சி.எம்.சி. ரோடு, செஞ்சை, காரைக்குடி.
3759 செ. சுந்தரராஜன், 9 ஏ, மாரிமுத்து நாடார் தெரு, மஞ்சகுப்பம், கடலூர்—1.
3760 கே. முத்துஜெகன், 99, பெருமாள்புரம், திருநெல்வேலி—7.
3761 எம். தனசேகர், 3, இராமசாமிபுரம், தூத்துக்குடி—3.
3762 எம். கார்த்திகேயன், 1576, வடக்கு 3ம் வீதி, புதுக்கோட்டை—622 001.
3763 ந. பாலகிருஷ்ணன், 22, சுப்பிரமணியபுரம், 1 வது தெரு, மதுரை—625 011.
3764 க. ரமாமணி, 1/28, பெருமாள் கோவில் தெரு, கருங்குளம்—628 615.
3765 ர. ராஜன், 94, தெற்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்—620 006.
3766 பாரதிப்பிரியா, 40, பெருமாள் கோவில் தோட்டத் தெரு, சென்னை—600 079.
3767 என். அல்லி ராணி, த/பெ. எம்.என். செழியன், காவிரி நகர், குளித்தலை, திருச்சி மாவட்டம்.
3768 வி. சுரேஷ் குமார், 67, பிருந்தாவன நகர், மன்னார்குடி—614 001.
3769 க. முத்துக்குமார், 123, காந்தி நகர், ஆத்தூர், 636 102.
3770 க. ரவி குமார், 123, காந்தி நகர், ஆத்தூர், 636 102.
3771 பி. அகல்யா, 2600, ஸ்ரீபாக் தெற்கு வீதி, தஞ்சாவூர்.
3772 இரா. தியாகராஜன், 48, சர்தார் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை—600 032.
3773 பி. அசோக் பாபு, லட்சுமி இல்லம், பட்டிவீரன்பட்டி—624 211.
3774 வி. சுப்புலட்சுமி, 12,ஏ, மேலச் செட்டித் தெரு, இராமநாதபுரம்—623 535.
3775 M. Rathnesh, 1264, Lakshmibai Nagar, New Delhi-110 023.
3776 வெ. லெக்ஷ்மி நாராயணன், 6/91, பழைய தெரு, கடயம்—627 415.
3777 ஷ. தியாகராஜன், 114, வெங்கடேஸ்வரா நகர், பொழிச்சலூர், சென்னை—74.
3778 ஆர். ரவி குமார் 25/8, பெருமாள் முதலியார் காலனி, சீரங்கப்பாளையம் ரோடு, சேலம்—636 007.
3779 ப. சங்கர், 36, ரங்கைய நாயுடு தெரு, அயன்புரம், சென்னை—23.
3780 அ. இராமன், த/பெ. அண்ணாமலை கவுண்டர், கோவில் மான்ய தெரு, வடபாதி மங்கலம், போளூர் தாலுகா, வ.ஆ. மா.
3781 எஸ். சுமந்த் குமார், த/பெ. கே. சுகுமார், க்யூ. எஸ். லாயிட்ஸ் காலனி, ராயப்பேட்டை, சென்னை—14.
3782 எஸ். பாஸ்கரன், 13 ஏ, பாபுராவ் தெரு, கடலூர், 607 002. (தெ.ஆ. மா.)
3783 எஸ். கணேஷ்ராம், 75, ஹட்கோ காலனி, டாட்டாபாத், கோவை—641 012.
3784 இரா. பிரேமா, 40, டி.எஸ்.புரம், திருப்பூர்.
3785 அ. குட்டியப்பன், 74/4, கரிசல்குளம், விஜயாபுரி அஞ்சல், கோவில்பட்டி தாலுகா.

(இன்னும் வரும்)


மது மந்த நகரில் சுதன்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை...
தேவி! நம் குழந்தை கொள்ளை அழகு...
கவியரசன் காளிதாசன்
கதை: ஆனந்தி
படம்: வினு
அழகைப் போலவே அறிவிலும் சிறந்து விளங்க வேண்டும். அதனால் வித்யாரத்னம் என்று பெயர் சூட்டுவோம்.
ஆண்டுகள் சென்றன...
கண்ணே! உனக்கு வித்யாப்யாசம் ஆரம்பிக்கும் வயதாகிவிட்டது. வித்யாரத்னம் என்ற பெயர் விளங்க நடந்து கொள்.
படிப்பில் மட்டுமின்றி, கலைகளிலும்...
...விளையாட்டிலும் கூடச் சிறந்து விளங்கினாள் வித்யாரத்னம்.


இது கண்ட சுதன்மன் அதிசயத்துடன் ....
தேவி! நம் நந்தவனத்துப் பறவைகள் கூட இவ்வளவு அழகாகப் பாடுகின்றனவே!
வித்யாரத்னம் பாடக்கேட்டுத் தான் அவை பாடுகின்றன.
எங்கே, அவளை அழைத்து வா; பாடச் சொல்வோம்.
வித்யாரத்னம் பாட, மரங்கள் கூட அசையாது கேட்டன; பறவைகள், மிருகங்கள் மயங்கின; மன்னரும் மற்றவரும் சொக்கிப் போனார்கள்.
பாடி முடித்ததும் ...
என் கண்ணே! அற்புதமாய்ப் பாடினாய்! உன் திறமை இன்னும் பிரகாசிக்கச் செய்வேன்!
வித்யாரத்னம் எல்லா சாஸ்திரங்களும் படிக்க ஏற்பாடு செய்தான் சுதன்மன்.
வித்யா! குரு அம்பரோஷரை வணங்கு.
சகல கலா வல்லியாக விளங்கு வாய்!
கணிதம், வியாகரணம், தர்க்கம், வேதாந்தம், இதிகாசம், புராணம் முதலிய எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றாள் வித்யாரத்னம்.


வித்யாரத்னத்தின் ஆற்றலே சுதன்மனுக்குக் கவலையையும் தந்தது...
வித்யாவுக்குத் திருமண வயதாகி விட்டதே!
அவள் அறிவாற்றலுக்கு ஏற்ற கணவன் எங்கே கிடைப்பான்?
மன்னன் சுதன்மன் ஒரு முடிவுக்கு வந்து...
வித்யாரத்னத்தை யார் வாதத்தில் வெல்கிறார்களோ அவருக்கு அவள் மாலையிடுவாள் என்று முரசு அடித்து அறிவியுங்கள்!
முரசு கொட்டி அறிவித்த செய்தி நாடு நகரமெல்லாம் பரவியது...
டம் டம் டம் டம்
இளவரசியை வாதத்தில் வெல்பவர் அவளை மனைவியாக அடையலாம்!
மதுமதி நகரில் புலவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் என்று ஏராளமாய்க் கூடினார்கள்...
நான் அறுபத்தி நாலு கலைகளையும் அறிந்தவன். இளவரசி எனக்குத்தான்!
நான் சகல சாஸ்திரங்களையும் கரைத்துக் குடித்தவன். எனக்குத்தான் வித்யா ரத்னம் மாலையிடுவாள்!


ஆனால் வித்யா ரத்னம் தன்னுடன் வாதிட்ட அத்தனை பேரையும் வென்றாள்.
வாதத்தில் தோற்றேன்; போய் வருகிறேன்.
நானும்தான்.
வெளியே வந்த புலவர்கள்...
அவமானம்! ஒரு பெண்ணிடம் தோற்றோமே!
திமிர் பிடித்த பெண்!
அம்பரீஷன் மனம் கொதித்தான்.
அறிவாளிகளையெல்லாம் அந்தச்-சிறுக்கி மட்டம் தட்ட நாம் பார்த்துக் கொண்டிருப்பதா?
கானகம் வழியே திரும்பும்போது எதிரே வந்தார் ஒரு வேதியர்.
வேதியரே, எங்கே இவ்வளவு தூரம்?
அட, அம்பரீஷனா? மதுமந்த நகரம்தான் போகிறேன்.
போகாதீர்! அவமானமடைவீர்! நாங்களெல்-லாம் தலை குனிந்து திரும்புகிறோம்!
அப்படியா! ஒரு பெண்ணா இப்படி நம்மைத் தோற்கடிக்க முடியுமா?



அவள் கர்வத்தை அடக்க வேண்டும்.
ஒரு வடிக் கட்டின மடையனை அவள் கல்யாணம் செய்து கொள்ளும்படிச் செய்வதுதான் வழி!
அவர்கள் ஒரு முழுமுட்டாளைத் தேடிக் கொண்டு போனார்கள்... ஓரிடத்தில்...
மூடனே! மரக் கிளையில் உட்கார்ந்து அடி மரத்தை வெட்டினால் விழுந்து விடுவாய்!
மடையா! இறங்கி வா உடனே!
பண்டிதர்கள் ஆளுக்கொரு கேள்வி கேட்க இளைஞன் பயந்து போய்...
நா... நா... நான் மாடு மேய்ப் பேனுங்க... அண்ணன் விறகு கொண்டாரச் சொன்னு...
பண்டிதர்கள் தங்களுக்குள் கலந்தாலோசித்தனர்...
வாட்ட சாட்ட மாய் இருக்கிறான். இவனைக் கொண்டு அரச குமாரியை அடக்கலாம்!
...திட்டத்தைச் செயல் படுத்தினார்கள்...
ஏண்டாப்பா, நாங்க சொல்றபடி செய்யுறியா? நல்ல சாப்பாடு, புது வேஷ்டி எல்லாம் கிடைக்கும்!
ஆகட்டுமுங்க!


பண்டிதர்கள் இடையனை அழைத்துப் போய் அலங்காரம் செய்தார்கள்...
பலே! உலகிலேயே மிகப் பிரமாதமாக அலங்கரித்துக் கொண்ட அடிமுட்டாள் இவன் தான்!
இடையனை அழைத்துக் கொண்டு மதுவந்தி நகர் சென்றார்கள்... வழியில்...
அடேய்! பேசாமல் வந்தால் எல்லா சௌகரியமும் உனக்குக் கிடைக்கும். வாய் திறந்தாயோ கொன்றுவிடுவேன். புரிகிறதா?
தலைநகரில் பவனி வந்தான் இடையன்... மந்திரி எதிர்ப்பட்டார்.
பண்டிதர்களே! பல்லக்கில் யார்?
இவர் மகாகவி! ஆரிய புத்திரர்! ஐந்திர நாட்டிலிருந்து வருகிறார். ஐந்திர நாதன் என்று பெயர்.
ஹும்! எங்கள் அரச குமாரியை வாதில் வெல்வாரா?
நிபந்தனை பற்றி கேள்விப் பட்டுத்தான் வந்திருக்கிறார். அரசகுமாரிக்குக் கல்யாணம் நடந்து விட்டதாகவே வைத்துக் கொள்ளுங்கள்!


பண்டிதர்கள் இந்திர நாதனுக்குச் செய்யும் உபசாரத்தைக் கண்டு மக்கள் அதிசயித்தார்கள்...
மகா பண்டிதராம்; ஆனால் பேசவே மாட்டாராம்!
மௌன குருவோ?
ஊர்வலம் அரண்மனையை அடைந்தது. அரசவை மண்டபச் சுவரில் ராம-ராவண யுத்தம் ஓவியமாகத் தீட்டப் பட்டிருந்தது.
வரவேணும். இந்திரநாதரே! அமருங்கள்!
ஓ! ராபணன்! ராபணன்!
மன்னன் திடுக்கிட்டான்...
இதென்ன இப்படி பேசுகிறார்?
அரசே! மகாபண்டிதரானதால் தான் இப்படி பேசுகிறார்... புரியவில்லையா?
அம்பரீஷன் ஒரு விளக்கம் தந்து சமாளித்தான்...
தம்பிகளான விபீஷணன், கும்பகர்ணன் ஆகிய இருவர் பெயரிலும் 'ப' என்ற கம்பீரத் தொனி இருக்கும் போது மகாவீரனான அண்ணன் ராவணன் பெயரில் இருக்க வேண்டாமா? அதனால் தான் ராபணன் என்கிறார்!
மன்னன் மகிழ்ந்தான்...
ஆகா! அருமையான விளக்கம். சரி, இன்று பயணக் களைப்புத் தீர இளைப்பாறுங்கள். நாளை சம்வாதம் வைத்துக் கொள்ள லாம்.
அப்படியே ஆகட்டும்.


மறுநாள் காலை ஜந்திரநாதனை எழுப்பவும்...
வாயை மூடு! எதற்கு ஏன் பேசினாய்! சமாளிப்பதற்குள் திணறிவிட்டேன்! உன் கொச்சை மொழியே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்..
ஆ! என்னை சாமி?
ஜந்திரநாதன் குளித்துவிட்டு வர, அலங்காரம் செய்தார்கள்...
இதோ பார்! ராஜகுமாரி உனக்கு நமஸ்காரம் செய்வாள். 'மூப்பிணியும் உண்டாகும்' என்று சொல்லு. வேறு ஏதாவது பேசினால் கொன்று விடுவோம்!
அரசசபையில் வித்யாரத்னம் பண்டிதர்க்கு வணங்கினாள்...
ஜந்திரநாதரே! அரசகுமாரி நமஸ்காரம் செய்கிறாள் பாரும்!
மூப்பிணியும் உண்டாகும்!
மன்னருக்குத் தூக்கி வாரிப்போட்டது...
இதென்ன அவச்சொல்!
மன்னவா! மூப்பிணியில் ஒன்று கணவனுக்குப் பணிவிடை செய்வதால் வரும் களைப்பு; இரண்டாவது குழந்தைகள் மேலே விழுந்து விளையாடுவதால் வரும் அயர்வு...


அம்பரீஷன் விளக்கத்தைத் தொடர்ந்தான்...
மூன்றாவது, விருந்தினரை உபசரித்து உபசரித்து வரும் சோர்வு, மூப்பிணி உண்டாகும் என்ற இரு சொல் வாழ்த்தில் சகல சௌபாக்கியங்களும் அடங்கியுள்ளன!
அரசகுமாரி உள்பட அனைவரும் பரவசமடைந்தனர்.
அடாடா!
ஐந்திர நாதர் பெரும் ஞானி!
ஆகா!
அம்பிகே! பராசக்தி! இந்த மகாவித்வானையே நான் மணாளனாக அடைய அருள் புரிவாய்!
வாதம் தொடங்கவும்...
இவர் மௌன குருவாமே... அதனால் இவரோடு மௌனமாகவே பேசுகிறேன்...
அரசகுமாரி ஒரு விரலை உயர்த்திக் காட்டவும் ஐந்திர நாதன் இரு விரல்களை உயர்த்தினான்...
அம்பரீஷன் அதற்கு விளக்கம் கூறினான்.
அடாடா! அரசே! கல்வியில் கலைமகள் போன்ற தங்கள் புதல்வி பரம் பொருள் ஒன்றே என்று காட்டினாள்...


... உடனே எங்கள் குரு, கடவுள் இகம்-பரம் என்றும் பேதம்-அபேதம் என்றும் உருவம் - அருவம் என்றும் ஜீவாத்மா-பரமாத்மா என்றும் இரண்டாகவே இருக்கிறார் என்று சமிக்ஞையிலேயே உணர்த்தி விட்டார்!
அரசகுமாரி மன மகிழ்ந்து...
இவரா என்னை வென்றவர்!
ஐந்திர நாதன் வாழ்க!
வாழ்க! வாழ்க!
ஐந்திர நாதனுக்கும் வித்யாரத்தினத்துக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது...
அந்தப்புரத்தில்... வித்யா ரத்தினம்...
இவர் ஏன் தரையில் தூங்குகிறார்? வீணை வாசித்துப் பாடி எழுப்புகிறேன்...
தூக்கத்தில் புரண்டான் ஐந்திரநாதன்.
இதென்ன ஆட்டுச் சலங்கை பாட்டுப் பாடுது?


பன்னீர் தெளித்துப் பார்த்தான் வித்யாரத்தினம்...
சீ! தூங்க முடியாமெ தூத்தப் போகுது!
இதென்ன இப்படி பேசுகிறார்! ஆட்டிடையன் போல...
பலவந்தமாக அவனை எழுப்பினாள் வித்யாரத்தினம்.
யார் நீ? உண்மையைச் சொல்!
ஐயோ! தெரியாம மாட்டிக் கிட்டேனே...
வித்யாரத்தினம் மிரட்டியதில் நடந்ததையெல்லாம் கூறி விட்டான் விறகு வெட்டி....
என்னை வீட்டுக்கு அனுப்பிடு தாயே!
வித்யா ரத்தினம் மனமுடைந்து போய்... பூஜை அறையில்...
தேவி! உன்னை இடைவிடாது பூஜித்து வந்த எனக்கு ஏன் இந்தத் தண்டனை?
அப்போது அசரீரி ஒலித்தது...
பாக்கியவதியே! இவன் இடையனும் அல்ல; மடையனும் அல்ல; அத்திரி மகரிஷிக்கும் ஒரு தேவ கன்னிகைக்கும் பிறந்தவன்!
ஆ!



இந்திர நாதன் கதை...
இந்தக்குழந்தை மகா வித்வானாகக் கீர்த்தி பெறுவான். ஆனால் என்னால் வளர்க்க முடியாது. நான் தவம் செய்யப் போக வேண்டும்.
இந்தத்தாமரை மீது கிடத்தி விட்டுப் போகிறேன். வளர்ப்புத் தந்தை வருவான்...
அந்தப் பக்கமாக வந்த ஓர் இடையன் குழந்தையைக் கண்டு...
என்ன அழகான குழந்தை! நான் எடுத்துப்போய் வளர்க்கிறேன்.
அசரீரி தொடர்ந்தது...
இடையனால் வளர்க்கப்பட்ட குழந்தை கல்வி பெறவில்லை. ஆனால் அவனுக்குள்ளே அறிவு நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது. ..
..நகருக்கு வெளியே உள்ள காளி கோயிலுக்கு இவனை அனுப்பு. தேவி பிரசன்னமாகி வரம் தருவாள்.



காளியின் அருளைப்பெற கணவனுக்கு யோசனை கூறி அனுப்பினாள் வித்யாரத்தினம்.
கோவிலுக்குள் சென்று உள்பக்கமாகக் கதவைத் தாளிட்டுக் கொள்ளச் சொன்னாளே...
அப்போது தேவி நகர்க் காவலுக்காகச் சென்றிருந்த சமயம்...
நல்லவேளை கதவு திறந்திருக்கிறது. வித்யாரத்தினம் சொல்லிக் கொடுத்தபடியே செய்வோம்.
நகர்க்காவல் முடிந்து திரும்பி வந்த தேவி, கோவிலின் வாசற் கதவு உள்ளே தாளிடப்பட்டிருப்பதைப் பார்த்து...
யாரது உள்ளே! உடனே கதவைத்திற!
நான் கோரும் வரம் தந்தால்தான் திறப்பேன்!
கேள்!


நான் கெட்டிக் காரனாகணும்; எனக்கு எல்லா வித்தைகளும் தெரியணுமே!
சரி, சாமித்துவாரம் வழியாக நாக்கை நீட்டு!
தேவி சூலத்தின் முனையால் அவன் நாவில் எழுதினாள்...
இன்று முதல் இணையற்ற கவியாக விளங்குவாய்!
கதவு திறந்தது. இந்திரநாதன், சிறந்த கவியாக மாறியிருந்தான்.
மாணிக்யவீணாம் உபலாலயந்தீம் மதாலஸாம் மஞ்சுள வாக்விலாஸாம் மாஹேந்த்ர நீலத்யுதி கோமலாங்கீம் மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி!
'காளிதாஸன்' என்ற பெயரில் மகாகவியாகக் கீர்த்தி பெறுவாய்! தாரா நகரத்தில் போஜராஜன் சபையை அடைவாயாக!
காளிதாஸன் அந்தப்புரம் திரும்பினான். வித்யாரத்னம் வரவேற்று...
தேவியின் பரிபூரண ஆசிபெற்று வந்திருக்கிறீர்கள்; உங்களைக் கணவனாக அடைந்த நான் பாக்கியசாலி!


வித்யா! உன் உபதேசத்தினால் தான் நான் காளியின் அருள் பெற்றேன். என்னை வாழ்த்தி வழியனுப்பு. தாரா நகர் செல்லுமாறு காளியின் ஆணை!
வித்யாரத்னம் மிகுந்த மன வருத்தத்துடன் கணவனுக்கு விடை கொடுத்தாள்...
தேவியின் சித்தம் அதுவானால் தடை விதிக்க நான் யார்? சென்று வாருங்கள்!
கலை நகர் தாராவில் போஜராஜன் ஒரு நாள் வீதி உலா வந்தபோது...
அந்தணரே! எனக்கு ஆசி கூறாமல் கண்களைப் பொத்திக் கொள்கிறீர்களே ஏன்?
உனக்கு ஆசி வழங்கி எனக்கு என்ன பயன்? நீ யாருக்கும் எதுவும் கொடுப்பதில்லையே!
அரசன் என்று அஞ்சாமல் உண்மையைக் கூறிய உமக்கு லட்சம் பொன் தருவேன்! தங்கள் பெயர்?
கோவிந்தகவி!
அன்று முதல் போஜன் வள்ளலாக விளங்கினான். அவன் சபைக்கு ஏராளமான கவிஞர்கள் வரத் தொடங்கினார்கள்.
அரசே! கலிங்கத்திலிருந்து ஒரு கவி...
உடனே அழைத்து வா!




புலவரின் கவிதைகளைக் கேட்டு மகிழ்ந்த போஜராஜன்...
பத்தாயிரம் பொன் தந்தேன், பிடியுங்கள்!
மிகச் சிறந்த கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் தாரா நகரம் புகலிடமாக விளங்க வேண்டும் என்பதே என் ஆசை!
தங்கள் விருப்பம் நிச்சயம் நிறைவேறும்!
போஜராஜன் வாழ்க!
போஜராஜன் சபை, கலைஞர்கள் நிறைந்து தேவலோகம் போல் விளங்கியது.
நமது மன்னரின் புகழ் நாடு நகரங்களெல்லாம் பரவியிருக்கிறது!
இத்தகைய போஜராஜன் சபைக்குக் காளிதாசன் வந்து சேர்ந்தார்.
வரவேணும்! காளியின் அருள்பெற்ற காளிதாசரே! தாங்கள் வருமுன்னரே தங்கள் கீர்த்தி எங்களை எட்டி விட்டது!
போஜமன்னன் சபையில் தலைசிறந்த கவியாக விளங்கினார் காளிதாசன். கவியின் புகழும் அவனை ஆதரித்த மன்னன் பெருமையும் திக்கெட்டும் பரவின.
மேகஸந்தேசம்
குமாரஸம்பவம்
சாகுந்தலம்
ரகு வம்சம்

சித்திரப் புதிர்! 13


ஆழி



1 சென்னையில் உள்ள பிரசித்திப் பெற்ற கட்டடத்தின் மேல்பகுதி இது. என்ன கட்டடம் என்று தெரிகிறதா?




2 4 இசைத் தட்டுக்கள் 8 துண்டுகளாக உடைந்துவிட்டன. எந்தத் துண்டுடன் எந்தத் துண்டைச் சேர்க்க வேண்டும்?




4 இந்த 10 படங்களில் இரண்டு மட்டும் வித்தியாசமானவை. எந்த இரண்டு? என்ன வித்தியாசம்?

3



முதல் படத்தில் மூன்று கோடுகளை மட்டும் மாற்றினால் இரண்டாம் படம் வந்துவிடும். எந்த மூன்று கோடுகளை எப்படி மாற்ற வேண்டும்?



5 இங்கே என்னென்ன பழங்கள் இருக்கின்றன?

விடை வேறுபக்கம்



மோகனூரில் செல்வரங்கன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி செல்லம்மாள். இருவருக்கும் குழந்தைகளே இல்லை. வியாபாரம் செய்து நிறையப் பணம் சேர்த்தான் செல்வரங்கன். ஆனால், ஒரு காசு கூட செலவு செய்ய மாட்டான். பணத்தைச் சேர்த்துச் சேர்த்துப் பெட்டியில் வைத்து அழகு பார்த்தான். அவன் அப்படிச் சேர்த்து வைப்பது அவனுடைய மனைவி செல்லம்மாவுக்கும் தெரியாது. இரவு நேரத்தில் அவள் தூங்கிய பிறகு மெதுவாக, சந்தடி செய்யாமல் எண்ணிப்பார்த்து பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவான்.

திருடர்கள் பயம் அந்த ஊரில் அதிகமாயிற்று. செல்வரங்கன் திருடர்களுக்குப் பயந்து நான்கு பானைகளில் தான் சேமித்த பணத்தையெல்லாம் நிரப்பினான். அந்தப் பானைகளின் வாயைக் களிமண் கொண்டு பூசிக் கிணற்றுக்குப் பின்புறம் குழிவெட்டிப் புதைத்து விட்டான். இது செல்லம்மாவுக்குக் கூடத் தெரியாது!

மறுநாள் காலையில் அவன் வீட்டில் எல்லோரும் கூடி இருந்தனர். செல்லம்மாள் ஓலமிட்டு அழுது கொண்டிருந்தாள். செல்வரங்கன் இறந்துவிட்டான். திடீரென்று நெஞ்சு வலி என்றான். அவன் உயிர் பிரிந்து விட்டது!

செல்லம்மாளைச் சுற்றி ஊர் மக்கள் அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவராக வந்து துக்கம் விசாரித்துச் சென்று விட்டனர். செல்வரங்கனின் வீட்டில் அன்று சல்லிக்காசு கூடக் கிடையாது. ஊர் மக்கள் எல்லோரும் ஐந்து பைசா பத்து பைசா என்று வசூல் செய்து அவனது கடைசிக் காரியங்களை முடித்தனர்.

பிறகு, செல்லம்மாவும் வேறு வழியின்றிச் சில வீடுகளில் வேலை செய்து பிழைத்தாள்.

ஒரு நாள் அவள் வீட்டிற்கு ஒரு பால சன்யாசி வந்தார். அவரைச் செல்லம்மாள் தன் மகன் போல் எண்ணி உபசரித்தாள்.

செல்வரங்கன் இறந்த விதம் பற்றி அறிந்து கொண்டார். அவன் இறப்பதற்கு முதல் நாள் சந்தைக்குச் சென்று மண் பானைகள் ஆறு வாங்கி வந்ததைச் செல்லம்மாள் கூறினாள். இரண்டு பானைகள்தான் அங்கு இருந்தன. மற்ற நான்கும் என்னவாயின?

பால சன்யாசி இவைகளையெல்லாம் ஆராய்ந்தவாறே செல்வரங்கன் தனது பணத்தையெல்லாம் அந்த நாலு பானைகளில் வைத்து எங்கோ புதைத்து இருக்கிறான் என்ற உண்மையை மட்டும் அறிந்து கொண்டார்.

மறுநாள் தோட்டத்தில் பல இடங்களில் தோண்டிப் பார்த்தார். கடைசியில் என்ன ஆச்சரியம்! கிணற்றின் அருகே புதையல் கிடைத்தது. நான்கு பானைகளையும் வெளியே எடுத்தார். யாரும் அறியாமல் அவர்கள் உள்ளே எடுத்து வந்தார்கள்.

பால சன்யாசியின் யோசனைப் படி செல்லம்மாள் அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு பள்ளிக்கூடம் கட்டினாள். ஏழைகள் தங்குவதற்காக ஒரு விடுதி அமைத்தாள். அனாதைகள் மறுவாழ்வு இல்லமும் ஏற்படுத்தினாள்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் செல்லம்மாள் காலமானாள். அன்று அந்த ஊரே அவளது வீட்டில் இருந்தது. பள்ளிக்கூடத்தில் இருந்து ஆசிரியர்கள், மாணவர்கள் ஊர்வலமாக மாலைகளோடு வந்தனர். ஏழைகளும் அனாதைக் குழந்தைகளும் ஒரே கூட்டமாக அவளது இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர். தனம் தேடி உண்ணாமல் புதைத்த செல்வரங்கனின் இறுதியாத்திரை போலில்லாமல், தருமத்தை ஒருநாளும் மறவாத செல்லம்மாளின் இறுதி யாத்திரை பற்றி மோகனூரே பெருமையாகப் பேசிக் கொண்டது!

ஓர் அற்புதம் நடந்தது!



பேரளம் புகழ்மதி

அழகான ரதம் போன்ற வெளி நாட்டுப்படகுக்காரில், பிரபல தொழிலதிபர் நடராஜனும், அவர் மனைவியும் அவர்களின் செல்வக் குழந்தையான பத்து வயதுச் சிறுமி ஆஷாவும் பயணம் செய்து கொண்டிருந்தனர். காஞ்சிப் பெரியவரைத் தரிசிக்க, காரில் போய்க் கொண்டிருக்கையில் சிறுமி ஆஷா சுவாரசியமாக இருபுறமும் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"ஏனப்பா, பெரியவா வடக்கே புனித யாத்திரை போயிருக்கிறதா பேப்பரிலே போட்டிருந்ததே" என்றாள்.

"ஆமாம், பெரியவர் சந்திர சேகர சங்கராச்சாரியார் வடக்கே உள்ளவர்களுக்குத் தரிசனம் தந்து அவர்களின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்ற யாத்திரை போயிருக்காரு. இப்ப நாம புதுப் பெரியவா ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைத் தரிசிக்கப் போகிறோம். இந்தப் பெட்டியில இருக்கிற ஒரு லட்சம் ரூபாயையும் அவர் பாதங்களிலே அர்ப்பணிச்சு, காணிக்கை செலுத்தத்தான் காஞ்சிபுரம்போகிறோம்" என்றார்நடராஜன்.

ஐந்து வருடம் முன்னால் நடராஜன் வெளிநாட்டில் தொழில் செய்ய முடிவெடுத்தபோது, 'காஞ்சிப் பெரியவரின் ஆசீர்வாதம் கிடைத்தால்தான் போவேன்' என மனத்தில் உறுதியாயிருந்தார். அது போலவே 'ஆசீர்வாதம்' கிடைத்தவுடன் மகிழ்ச்சியோடு வெளிநாடு சென்று 'மளமள'வென்றுவியாபாரத்தில்கொடிகட்டிப் பறந்தார். இப்பொழுது இந்தியா வந்த அவர், காஞ்சிப் பெரியவருக்கு காணிக்கையாக இந்த ஒருலட்சத்தைப் பெட்டியில் வைத்துப் பெரியவரின் பாத கமலத்தில் அர்ப்பணிக்கக் காரில் போய்க் கொண்டிருக்கிறார்.

சிறுமி ஆஷாவுக்கு ஒரே குஷி. அவள் அடிக்கடி தந்தையை ஏதாவது கேட்டபடி வந்தாள். அவள் வெளிநாட்டில் தமிழையும், இந்தியப் பண்பாட்டையும் மறந்துவிடாமல் இருக்க ஒரு தனி ஆசிரியரையே ஏற்பாடு செய்திருந்தார் நடராஜன்.

"அப்பப்பா, அதோ பாருப்பா, ஒரு பழைய காலத்துக் கோயில்! காரை நிறுத்துங்கப்பா" என்றாள் ஆஷா. கார் நின்றது.

அந்தப் பிரும்மாண்டமான, புராதன காலத்துக் கோயிலை நோக்கி மூவரும் நடந்தனர். ஆஷாவுக்கு கோயில்களுக்கு போவதென்றால் மிகவும் பிடிக்கும். கோவில்களும், புத்தகங்களும்தான் அவளின் அன்றாடத் தெய்வங்கள்!

கோவிலைச் சுற்றி வெறும் புதர் வெளிகள்; கோவில் மிகவும் சிதிலமடைந்து காணப்பட்டது; சுற்றுப்புற மதில்கள் அனைத்தும் இடிந்து போய்க் கிடந்தன. ஏதோ ஒரு மன்னன் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் பழங்காலத்தில் 'ஓகோ'வென்று இருந்திருக்கும் என்பதற்கேற்ற அடையாளங்கள் இருந்தன!

வழியில் ஐந்தாறு ஆடு மேய்க்கும்

சிறுவர்கள் தங்களுக்குள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். சற்று தூரத்தே நூறு, நூற்றைம்பது குடிசைகள் காணப்பட்டன.

மூவரும் கோயிலை அடைந்தனர். ஒரு லட்சம் ரூபாய் கொண்ட அந்தக் கறுப்பு நிற சூட்கேஸை ஓரத்தே வைத்துவிட்டு சுவாமியை வணங்கிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஆஷா, "திருடன்! திருடன்! பெட்டியைத் தூக்கிக்கிட்டு ஓடறான்!" எனக் கத்தினாள். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த நடராஜன், "ஐயய்யோ, பெரியவாளுக்கு அர்ப்பணிக்கிற பெட்டியாச்சே!" என்றபடி பின்னால் ஓடினார். மிகவும் அருகில் போய்விட்டபோது, அத்திருடன் கத்தியை உருவி, "யாரும் கிட்ட நெருங்காதீங்க!" என்றுஎச்சரித்தபடி, ஆஷாவின் அம்மாவை நெருங்கினான். அணிந்திருந்த நகைகளைப் பார்த்தான்.

"ஆகா, நல்ல வேட்டைதான் எனக்கு. வலுவிலேயே என் கைக்கு இவ்வளவு நகை கிடைக்குதே! மரியாதையா நகையைக் கழற்றித் தரலேன்னா உயிர் போயிடும்" என்று மிரட்டினான்.

"ஐய்யய்யோ, இது என்ன சோதனை?" கம்மிய குரலில் அரற்றினாள் ஆஷாவின் தாய்.

"சீக்கிரம், சீக்கிரம்.... கழட்டு, கழட்டு" — துரிதப்படுத்திட கத்தியை ஓங்கினான் திருடன்.

"தொப்" — திடீரென்று ஒரு சத்தம். "ஐயோ, பேய், பேய்" என அலறினான் திருடன். மரத்தின் கிளையில் உட்கார்ந்தபடி மாடுகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாட்டுக்காரச் சிறுவன், திருடன் மேல் குதித்த சத்தம்தான் 'தொப்' என்ற சத்தம்; எதிர்பாராமல் தன் மீது ஏதோ ஒன்று உயரத்திலிருந்து விழுந்து தன் கத்தியையும் தட்டிவிட்டதே என்ற பயத்தில் தான் 'பேய், பேய்' என்று அலறியபடி பெட்டியைப் போட்டுவிட்டு ஓடினான் திருடன்!

"அப்பா.... நல்ல நேரத்தில் நீ காப்பாத்திட்டாய்" வாய் குழறியபடி, நெற்றியில் துளிர்த்த வியர்வைகளைத்





துடைத்தபடி, நடுங்கிய உடம்போடு மெல்லச் சொன்னாள் ஆஷாவின் தாய்; தன் மாங்கல்யத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''தம்பி, நீ யாருப்பா'' நடராஜன் கேட்டார்.

''நான் இங்கே ஆடு மாடு மேய்க்கறவன்... அதோ தெரியுதே, வேப்பமரம் அதற்குக் கீழே உள்ள குடிசைதான் எங்க வீடு. எங்க வீட்டுப் பெரியவரு வடக்கே போயிருக்காரு. நான் ஆடு, மாடுகளைப் பார்த்துக்கிட்டு மரத்து மேலே உட்கார்ந்திருந்தேன். திடீர்னு உங்க சத்தத்தைக் கேட்டேன்; அந்தத் திருட்டுப் பயல் கத்தியைத் தூக்கிக்கிட்டு அம்மாக்கிட்டே போறதைப் பார்த்தேன். உடனே 'பொத்'துன்னு அவன் மேலே குதிச்சுக் கத்தியைத் தட்டிவிட்டேன்'' என்றான் அமைதியாக.

''உன் உயிரைப் பொருட்படுத்தாம எங்களைக் காப்பாத்திவிட்டாய். ஏம்பா, நீ ஸ்கூலுக்குப் படிக்கப் போகலியா?'' என்றார் நடராஜன்.

''இல்லீங்க.... மூணாவது வரைக்கும் படிச்சேன். அதுக்கப்புறம் எங்க ஸ்கூல் பக்கத்து டவுனுக்குப் போயிடுச்சு; அந்த கல் தொலைவில டவுனு இருக்கிறதால அங்கே போய் யாரும் படிக்கிறதில்லே.... இந்தக் குப்பத்திலே இருக்கிற எழுபது எண்பது பசங்களுக்குத் தோப்பு, துரவு வேலைதான். ஆடு மாடு மேய்க்கறதுதான். படிப்பு நின்னு போச்சு'' என்று உருக்கமாகக் கூறினான் அந்தச் சிறுவன்.

அன்போடு, ஆதரவாக அவனை வருடிக் கொடுத்த நடராஜன் அவன் கையில் நூறு ரூபாயைக் கொடுத்தார்.



நோபல் பரிசு வழங்கிய ஆல்பிரட் நோபல் சிறந்த விஞ்ஞானி என்பது தெரியும்! இதில் இன்னொரு விசேடம் என்னவெனில் ஆல்பிரெட் நோபலின் தந்தை இமானுவேல்தான் 'பிளைவுட்' (Plywood) என்னும் ஒட்டுப் பலகையைக் கண்டுபிடித்தவர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

''ஐய்யய்யோ'' நெருப்பு கையில் பட்டதுபோல் பின்வாங்கினான். ''வேண்டாங்க.... பணமா முக்கியம்... மனுஷங்கதான் முக்கியம்'' என்றான். எவ்வளவு வற்புறுத்தியும் பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை.

'இந்தச்சிறுவனுக்குத்தான் எத்தனை சீலம்!' என வியந்த நடராஜன் கைப் பையில் கொண்டு வந்திருந்த ஓர் உயர்ந்த ரக வெளிநாட்டு பிஸ்கெட் பாக்கெட்டை அவன் கையில் அளித்தார். ''இதையாவது நீ மறுக்காமல் வாங்கிக்கப்பா'' என்றார். அன்போடு அதனைப் பெற்றுக் கொண்டான்.

''உன் பேரு என்னப்பா?'' என்றார். தன் பெயரையும் தன் வீட்டுப் பெரியவர் பெய்ரையும் கூறினான். கருணை ததும்ப அவனைத் தட்டிக் கொடுத்தார்.

கார் காஞ்சியை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆஷாவின் மனம் கோயிலில் நடந்த சம்பவங்களையே நினைத்துக் கொண்டிருந்தது.

அதோ.... யுகம் யுகமாய் மனிதப் பிறவிகளைக் கடைத் தேற்றும் சத்திய ஜோதியின் திருமடம் தெரிகிறதே; மடத்தினுள் மூவரும் சென்றனர்.

உள்ளே.... புதுப் பெரியவர் ஜெயேந்திர சங்கராச்சாரியாரும் இளைய பெரியவரும் காட்சி தருகின்றனரே.... மிகுந்த பணிவுடன் மூவரும் நமஸ்கரித்தனர்!

தொழிலதிபர், லட்ச ரூபாய் கொண்ட பெட்டியினைப் பயபக்தியோடு பெரியவரின் பாத கமலத்தில் சமர்ப்பித்தார். ''பெரியவா... கிருபை கொண்டு இந்தப் பணத்தை ஏத்துக்கணும்'' நெகிழ்ச்சியோடு கூறினார் நடராஜன். பவ்யத்தோடு நின்ற நடராஜனைப் பெரியவர் அன்போடு பார்த்தார். ''இந்தப் பணத்தை நீங்களே வச்சுக்குங்க'' என்று திருவாய் மலர்ந்தார். பதற்றத்தோடு நடராஜன், ''பெரியவா அப்படிச் சொல்லக் கூடாது. நீங்க அஞ்சு வருஷம் முன்னடி ஆசிர்வாதம் வழங்கலேன்னா அடியவனுக்கு வாழ்வே இருந்திருக்காது'' என்றார்.

அருள் பூத்த இளம் கீற்று நகையோடு, துல்லியமான, சாரம் கசிந்த வார்த்தைகளைக் கனிவோடு கூற ஆரம்பித்தார் பெரியவர்.

''வந்து.... இந்தப் பணத்தை நான் ஏன் வாங்கிக்கலேன்னா, இதைக் கொண்டு நீங்களே செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி ஒண்ணு இருக்கு.... லோகத்திலே இன்னமும் கொஞ்சம் மழை பெய்யுதுன்னா, புல் பூண்டுங்க... செடி கொடிங்க வளருதுன்னா அதுக்கு என்ன காரணம்? இன்னமும் தெய்வ பக்தி இந்த லோகத்திலே கொஞ்சமாவது இருக்குதுன்னு தான் அர்த்தம்....! ஆனால் இந்த பக்திக்கு மூல காரணமா இருக்கிற கோயில்களிலே பல இன்னைக்குப் பாழாய்க் கிடக்கு.... பராமரிப்பு அற்ற முறையிலே, திருப்பணி எதுவுமில்லாமே பரிதாபமா பல 'புராதனக் கோயில்கள் இருக்கு. சுற்றுப்புற மதில்களெல்லாம் இடிஞ்சு போய்க் கிடக்கு; திருட்டுப் பயமும் அதிகரிச்சுப் போச்சு! தனி மனித ஒழுக்கத்தை வளர்த்து மனித ஆன்ம நேயத்துக்கு அடிகோலுகின்ற கோயில்க்ள் வலு விழுந்து போச்சுன்னா, அப்புறம் இந்த உலகத்தில தர்மம் இருக்காது. மனுஷனை மனுஷனே நம்பாமல் அறப் பண்பு குறைஞ்சு போய் மனிதர்களே மனிதர்களைத் தின்று பசியைத் தீர்த்துக்கிற காலம் வந்துடும்.

''இதனால்தான் அந்தக் காலத்திலே கோயில் மதிப்போடு விளங்கிச்சு... 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'; 'ஆலயம் தொழுவது

சாலவும் நன்று' என்ற பழமொழி களுடைய தாத்பரியம்தான் என்ன...?' சற்று உருக்கத்தோடு நிறுத்தினர் தன் பேச்சினைப் பெரியவர்.

பிறகு ஞான அருள் வெள்ளப் பார்வையோடு "நீங்ககூட வர்ற வழி யில் ஒரு புராதனக் கோயிலைப் பார்த் திருக்கலாம்... இதுமாதிரி உள்ள கோயிலை உங்களைப் போன்ற தர்மிஷ் டர்கள் ஒன்று கூடி நிதி திரட்டித் திருப்பணி செய்யணும்" என்றார்.

"மிகமுக்கியமான மற்ருெருவிஷய மும் என் மனசை ரொம்ப வருத் துது...." ஓ.... பெரியவரின் விழி களில் ஏன் அத்தனை ஈரக் கசிவு....! தெய்வமே கலங்கினல் மனிதர்கள் நிலை என்ன?

"ஒரு புனிதமான கடமை நம்மை எதிர்நோக்குது...." ஆத்மார்த்தசொற் களோடு சொல்லத் தொடங்கினர் ஜகத்குரு. "நம்ம கிராமத்துப் பாலகர் கள் நிலைமை ரொம்பப் பரிதாபமா இருக்கு. நாட்டிலே கல்விங்கறது கண்ணு மாதிரி. ஆனல், அந்தக் கண்ணு, கிராமத்துச் சிறுவர்களுக்குச் சரியாக் கிடைக்க மாட்டேங்குது. அது மாத்திரமில்லை. பொதுவாக லோகத் திலேயே சரியான ஞானக் கண்ணுகக் கல்வி அமையாமல் வெறும் ஆர வாரமா இருக்கு. இதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு. அதனல் உங்களை மாதிரி உள்ளவங்க ஒன்று கூடி 'மிஷன்' (**Mission**) நிறுவி நல்ல தெய்வீகக் கல்வியை வாழ்க்கையோடு ஒட்டிய விதத்திலே ஆத்மார்த்தமா வழங்கினீர்களானல், உலகம் உங் களை என்னென்னிக்கும் நினைக்கும்; அது மாத்திரமில்லை, தெய்வமும் நல்ல ஜீவமுக்தி தந்து பரவசப்படுத்தும்! இது ஓர் இமாலயத் தொண்டு; இதை நம்மாலே நிறைவேத்த முடியுமா!ன்னு திக்பிரமை அடையாதீங்க. அனும னுக்கு இலங்கையைத் தாண்டத் தேவைப்பட்டது நம்பிக்கைதான்; மனேதிடம்தான்! தெய்வம் நமக்குப் பின்னணியிலே இருந்து எல்லாத்தை யும் நடத்திடும்; முயற்சி செய்யறதும், செயலில் முனைந்து நிற்கிறதும்தான் உங்களைப் போல உள்ள தர்மாத்மாக் களின் பங்கு. இதுக்கு என்னுடைய ஆசிர்வாதம் நிரம்ப உண்டு" அருள் மழை பொழிந்ததை உணர்ச்சிப் பர வசத்தோடு கேட்டுக் கொண்டிருந் தார் நடராஜன். அவர் விழிகளில் வழியில் கண்ட கோயிலும், மாடு மேய்க்கும் சிறுவர்களும் பளிச்சிட் டனர்.

"இந்தப் பழங்களையாவது பெரியவா வாங்கிக்கிட்டு என்னை ரட் சிக்கணும்.... எதுவுமே என்னிட மிருந்து பெரியவா வாங்கிக்காம இருக்கிறது எனக்கு ஏதோ தண்டனை மாதிரி இருக்கு....." என்றார் தேம்பும் குரலில்; பாதங்களில் நமஸ்கரித்தார்.

பெரியவர் மெல்ல எங்கோ பார்த் தார். ஒரு ஞானப் புன்னகை அவர் இதழ்களில் மலர்ந்தது. "நான் உங்க கிட்டேயிருந்து முன்னடியே வாங்கிட் டேன்" தெய்வீக ஒளியோடு வார்த்தை களை மென்மையாகக் கூறினர் பெரிய வர்.

குழம்பினர் நடராஜன். 'என்னது, நம்மிடம் இருந்து எப்பொழுது வாங்கி ஞர்; ஒன்றும் புரியவில்லையே.... நாம் எப்போது கொடுத்தோம்' திகைத்த படி காரில் ஏறித் திரும்பிக் கொண் டிருந்தார் நடராஜன். ஆஷாவின் அம்மாவும் பெரியவர் சொன்ன வார்த்தைகள் புரியாமல் குழம்பினள். 'நம்மிடம் பெரியவா எப்போ வாங் கினு?' மனப் புதிரோடு இவர்கள் இரு வரும் இருக்கையில் ஆஷாவோ, 'பெரியவர் கடைசியாக ஓரிடத்தில் பார்த்தாரே.... அந்த இடத்தில், அந்த இடத்தில்.... 'அது' எப்படி வந்தது?' என்று நினைத்தபடியே அவர்களுடன் சென்றாள்.

முன்னர் கண்ட அந்தக் கோயிலைக் கார் அடைந்தவுடன் 'டக்'கென்று நின்றது. மூவரும் சற்றுத் தூரத்தி லிருந்த அந்தக் கோயிலைப் பக்தியோடு வணங்கிக் கொண்டிருந்தனர்.

"வாங்கோ, வாங்கோ" குரல் கேட்டுத் திரும்பினர் நடராஜன். "நான்தான் இந்தக் கோயில் குருக் கள். காலம்பற காரிலே வந்து யாரோ சேவிச்சதா மாட்டுக்காரப் பசங்க சொன்னங்க... நான் அந்தச் சமயம் பக்கத்தூர்க் கோயிலுக்கு பூஜைக்குப் போயிருந்தேன்" என்றார்.

"ஆமா... அந்தப் பையன் மட்டும் காப்பாத்தலைன்ன அவ்வளவுதான்,

நாங்க 'குளோஸ்' ஆயிருப்போம் நடுக்கத்தோடு அந்த நிகழ்ச்சியை நெஞ்சில் நினைத்தபடி மனம் உருகக் கூறினார் நடராஜன்.

"என்ன சொல்றேள்.... எந்தப் பையன் காப்பாத்தினான்....? என்ன நடந்தது உங்களுக்கு"—பரபரப்போடு கேட்டார் குருக்கள். "என்ன, அந்தப் பையன் அதையெல்லாம் சொல்லல்லியா...!" நடந்ததை முழுக்கச் சொன்னார் நடராஜன். "சிவ, சிவா... இது என்ன ஆச்சரியமா இருக்கே!" இடிந்து போய் உட்கார்ந்தார் குருக்கள். ஒரு நிமிடம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "எந்தப் பையன் உங்களைக் காப்பாத்தினது" என்று கேட்டார்.

"அதோ.... அந்த வேப்ப மரத்துக் கீழே உள்ள குடிசைதான் அவன் வீடுன்னான்" என்றார்.

"ஆச்சரியமா இருக்கே. அந்தக் குடிசையிலே வயதான பாட்டியைத் தவிர வேறு யாருமில்லையே.... அந்தக் கிழவி கோயில் காரியங்களைக் கவனிக்கிறவ. 'காமாட்சிக் கிழவி'ன்னு கூப்பிடுவோம்...." பதற்றத்தோடு பரபரப்பாய்க் கூறினார்.

ஏதோ திடீரென்று ஒரு தீவிரமான யோசனை அவர் முகத்தில் நிழலாடியது. சட்டென்று கர்ப்பக்கிரகத்திலுள்ள சுவாமியைப் பார்த்தார். ஒரு வேளை அப்படியும் இருக்குமோ? படபடப்போடு கேட்டார். "வந்து.... அந்தப் பையன் தன் பேரு என்னன்னு சொன்னான்....?" உடல் நடுங்க வாய் குழறக் கேட்டார்.

"வந்து....." நடராஜன் திக்பிரமையோடு ஒருகணம் அந்தப் பையன் கூறியதை நினைவு கூர்ந்தார். "தன் பேரு ஜெயன்னு சொன்னான்; பெரியவர் பேரு சந்திரன்னான்."


மின்னல் திடீரென்று பாய்ந்தது குருக்களின் மேனியிலே; உடல் முழுக்கத் திடீரென்று ஒரு குலுக்கல்; குப்பென்று வியர்த்தது உடம்பு; குபீரென்று கண்களில் கண்ணீர்.

"அடடா, அடடா.... என்ன அற்புதம்; என்ன அற்புதம்....! நீங்க பாக்யவான்; நீங்க கொடுத்து வைச்சவா! பகவானே காஞ்சிப் பெரியவர் பெயரிலே இந்தத் திருவிளையாடலை நடத்தியிருக்கார்; அதைப் பெரியவாளும் உணர்ந்து அதற்கேற்றமாதிரி திருவாய் மலர்ந்திருக்காங்க. பெரியவா வடக்கே போயிருக்காருன்னு, அவர் பெயரைச் சொன்னாரே, பார்த்தீங்களா, 'சந்திரசேகர சங்கராச்சாரியாரை'தான் சொல்லியிருக்காரு. தான் தங்கியிருக்கிற வீடா காமாட்சி வீட்டைக் காண்பிச்சாரே, அது சாட்சாத் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலைக் குறிக்குது. நம்மளைப் போன்ற அஞ்ஞானங்களுக்கு அதையெல்லாம் புரிஞ்சிக்க முடியுமா?" மெய் விதிர்க்க, மேனி படபடக்க கூறினார் குருக்கள்.


"ஆமாப்பா. காஞ்சி மடத்திலே நீங்க பெரியவா பாதத்திலே நமஸ்கரிச்சு, "ஏதாவது வாங்கிக்கணும்"னு சொன்னப்போ, பெரியவா மெதுவா சிரிச்சுக்கிட்டு எங்கேயோ பார்த்தாரே, அந்தப் பக்கம் நானும் பார்த்தேன். அவர் பார்த்த இடத்திலே நம்ம மாட்டுக்காரப்பையனுக்குக் கொடுத்த அந்த வெளிநாட்டு பிஸ்கெட் பாக்கெட் இருந்ததுப்பா! அதைப் பார்த்துக்கிட்டே பெரியவா, "நான் முன்னாடியே வாங்கிட்டேனே'ன்னு சொன்னப்ப எனக்கு ஒரே குழப்பமா இருந்ததுப்பா. இந்த பிஸ்கெட் பாக்கெட்டை நாம அந்தப் பையனுக்குத்தானே கொடுத்தோம்; இவருக்கிட்டே எப்படி வந்ததுன்னு திகைச்சுப் போய்

சித்திரப் புதிர் -13 விடை

1. சென்னை உயர்நீதிமன்றம்.
2. 1—7, 2—4, 3—5, 6—8.



3. புள்ளி வைத்துக் காட்டியிருப்பது மாற்றி வைக்க வேண்டிய கோடுகள்.
4. 4 — 7, வித்தியாசமானவை, 4—7 இவற்றுக்கு 5 மூலைகள். மற்றவைக்கு 4 மூலைகள்.
5. ஆரஞ்சு, தக்காளி, மாம்பழம், வாழை, திராட்சை, முந்திரி, அன்னாசி, ஆப்பிள், மாதுளை.



"டேய், புதுப் பஞ்சாங்கத்திலே பல்லி விழும் பலன் போட்டிருக்காடா?"

"நம்ம பாட்டிக்கு பல் விழுந்துடுத் தாம். அதுக்கு ஏதாவது பலன் போட் டிருக்கா, பாரு."

வழி பூரா அதே யோசனைதான்பா'' ஆஷா ஆச்சரியத்தோடு கூறினுள்.

குருக்கள் நெஞ்சம் நெக்குருக ஆஷாவைப் பார்த்தார். ''குழந்தே.... நீ தெய்வக் குழந்தையம்மா.... சிறு வர்களுக்குத்தான் காஞ்சிப் பெரியவா, தன் கடாட்சத்தை முழுக்க முழுக்க அருள்கிருர் அம்மா.... உன் ஞானக் கண்ணுக்குத் தெரிஞ்ச பிஸ்கெட் பாக் கெட் மத்தவங்களுடைய ஊனக் கண் ணுக்குத் தெரியாமேப் போயிடுச்சு பாரம்மா'' நாக்குழறக் கூறியபடி கர்ப் பக்கிரகத்திற்குள் சென்று நெடுஞ் சாண்கிடையாக விழுந்தார்!


''சுவாமி, சுவாமி.... எம்பெரு மானே, கருணைமூர்த்தியே, பெரியவா மூலமா ஒரு பெரிய திருவிளையாடலே யே செஞ்சுட்டியே, பெரியவா திரு வருளாலே இனிமேல் கோயில்களுக் கெல்லாம் விடிமோட்சம் ஏற்படப் போறது; சிறுவர்களுக்கெல்லாம் ஞானக் கண் கிடைக்கப் போகுது. ஓ, பெரியவாளுக்குத்தான் இந்த லோகத்து மேலே எத்தனை பிரியம்...! கோமாதா மாதிரி தன் கொழுந்து களை எப்படியெல்லாம் ரட்சிக்கிருர்!'' ஆனந்தமும், புளகாங்கிதமும் மேலிட, தேம்பித் தேம்பி, தாயிடம் மகன் பேசு வது போல, குருக்கள் குழறிக் குழறிப் பேசுகிருர்!

பெரியவரின் தெய்வீகத் திருவிளை யாடலை பக்திப் பரவசத்தோடு நெஞ் சில் நினைத்தபடி ஆஷாவின் அப்பா வும் அம்மாவும் மனம் உருக இறை வனை வணங்குகிருர்கள்; மெய் சிலிர்க்க நமஸ்கரிக்கிருர்கள்!

ஆ....! அவர்களின் விழிகளிலே திடீரென ஓர் அருட்காட்சி பிரசன்ன மாகிறதே....! காஞ்சிப் பெரியவரின் தெய்வீகப் புன்னகை ஒரே ஒருகணம் அவர்கள் கண்களுக்குத் திவ்யமாய்ப் புலப்படுகிறதே, அது எப்படி?

பழைய புத்தகம் புதிய பாடம்

கோமதி



''உனக்காகத்தான் இந்த விலை. ஒன்றும் யோசிக்காதே. பேசாமல் புத்தகங்களை எடுத்துப் போ... இன்னிக்கு இல்லேன்னா, நாளைக்கே நான் வேறு யாருக்கேனும் கொடுத்திடுவேன்... அப்புறம் என் மேல் குற்றம் சொல்லக் கூடாது, பார்த்துக்கோ...'' — கறாராகப் பேசினான் கண்ணன்.

''ரூபாய் கொஞ்சம் குறையுது... அதனாலே கொஞ்சம் குறைச்சுக்கச் சொல்லி எங்கப்பா சொல்லச் சொன்னார்'' — பணிவுடன் பதில் கூறினான் பாலன்.

''குறைச்சுத்தானே கொடுக்கிறேன்...! வேறு யாருக்கேனும் என்றால், ஐந்து ரூபாய் அதிகம் வைத்துக் கொடுத்திடுவேன். புத்தகங்கள் அத்தனையும் புத்தம் புதுசு மாதிரி இருக்கே... பார்!'' கண்ணன் கூறினான்.

''சரி, உன் இஷ்டப்படியே ஆகட்டும்...! பணத்தை இன்று மாலையில் அப்பா வாரச் சம்பளம் வாங்கியதும் தருவார். மொத்தமாகக் கொடுத்திடுறேன்'' — பாலன் முடிவு கூறினான்.

இருவர் உரையாடல்களையும் விட்டிலிருந்த கண்ணனின் அப்பா சிவானந்தம் கேட்டபடியே அமர்ந்திருந்தார். உடனே, ''கண்ணா...! என்ன, வியாபாரம் பலமாயிருக்கே? முடிவு என்னாச்சு...?'' என்று கேட்டதும், இருவரும் திரும்பிப் பார்த்தனர். அத்தனை பழைய புத்தகங்களுடன் சிவானந்தம் முன்பு ஆஜரானார்கள்.

சிவானந்தம் ஓர் ஆலையின் உரிமையாளர்; தயாள சிந்தை உள்ளவர். உண்மை, அன்பு இவற்றை விரும்புபவர். கண்ணன் அவருடைய ஒரே புதல்வன். பாலன் ஓர் ஏழை விவசாயியின் மகன். ஆலையின் பக்கத்தில் அவனுடைய வீடு இருந்தது. இருவரும் ஒரு வகுப்பு வித்தியாசத்தில் படித்தனர். கண்ணன் பத்தாம் வகுப்பு என்றால் பாலன் ஒன்பதாம் வகுப்பு. இதனால், ஆண்டுதோறும் கண்ணனின் புத்தகங்களை பாலன்தான் வாங்குவான். இருவரும் தேர்ச்சி பெறுவார்கள். இணை பிரியாத நண்பர்கள். ஆனாலும், காசு விஷயத்தில் கண்டிப்பாக இருப்பான் கண்ணன் — பாலனுக்கும் இது பிடிக்கும்.

சிவானந்தர் ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பிரித்துப் பார்த்தார். சில

இடங்களில் மூலைகளில் மடங்கி இருந்தவற்றைச் சரிசெய்து, அடுக்கி விட்டார்.

சிவானந்தர் தலையிட்டதால் கண்ணனுக்குத் திகைப்பு! பாலனுக்கோ மகிழ்ச்சி, விலை குறையுமென்று. சிறிது நேரத்தில் அவர் இருவரையும் நோக்கி, "சரி, உங்களுடைய பேரத்தில் நான் பிரவேசிக்கவில்லை...! உங்கள் விருப்பப்படி முடித்துக் கொள்ளுங்கள்...!" என்றார் சிரித்துக்கொண்டே!

கண்ணனின் திகைப்பு, மகிழ்ச்சியாக மாறியது! பாலனுக்கு வியப்பாக இருந்தது. சற்று ஏமாற்றம் கூடத்தான்! பாலன் புத்தகங்களுடன், கண்ணனிடமும் அவனுடைய அப்பாவிடமும் விடைபெற்றுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

பாலன், தன் அப்பாவிடம் புத்தகங்களைக் காட்டினான். புத்தகங்களைக் கண்ணன் புதிதாக வைத்திருந்ததைப் பாராட்டினார் பாலனின் அப்பா. பிரித்துப் பார்த்தார்கள் இருவரும். பாலனுக்கு ஒரு புத்தகத்திலிருந்து புதிய பத்து ரூபாய் நோட்டு ஒன்று கிடைத்தது. அப்பாவிடம் காட்டினான். அவர் 'பணக்காரர் வீட்டுப் புத்தகங்களில் கூடப் பணம் இருக்கும் போலிருக்கே! நாம் அடுத்தவர் பணத்துக்கு ஆசைப்படக் கூடாது. பாலா! இப்போதே இதையும், புத்தக ரூபாயையும் கொண்டு போய்க் கொடுத்திட்டு வந்திடு... அவர்கள் தேடினாலும் தேடலாம்!" என்று பாலனை அனுப்பி வைத்தார். பாலனுக்கு வழியில் சிவானந்தரின் சிரிப்பு நினைவிற்கு வந்தது.

* * * * *

"கொடுத்த பணத்தைத் தொலைத்து விடுவாய்...? ஆனால், புத்தகத்தை விற்கும்போது, குறைக்காமல் பேரம் பேசுவாய்...! ஐந்து ரூபாய் குறைக்க மறுத்தாய்...? இப்போ பத்து போச்சு!" சிவானந்தர் கடுகடுப்பாகப் பேசிக் கண்ணனின் அஜாக்கிரதையைச் சாடினார்.

"இதோ இருக்குங்க... ரூபாய்...! கண்ணன் புத்தகத்தில் வைத்திருக்கிறான்... பிரித்துப் பார்க்கும் போது கிடைச்சுது" என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டே, உள்ளே நுழைந்து, பத்து ரூபாய் நோட்டையும் புத்தகங்களுக்கான ரூபாயையும் கொடுத்து விட்டு நின்றான் பாலன்.

சிவானந்தர் முகத்தில் திருப்தி தெரியவில்லை. பாலனுக்கோ வியப்பு மேலிட்டது.

"புத்தகத்திலா ரூபாய் நோட்டை வைப்பது? — பொறுப்பில்லையே!" என்றார் சிவானந்தர்.

சிறிது நேரத்தில், பாலனுடைய அப்பா வேகமாக அங்கு வந்தார். சிவானந்தருக்கு வணக்கம் கூறி மேலும் ஒரு இருபது ரூபாய் நோட்டை அவரிடம் நீட்டினார்! இப்பொழுது சிவானந்தரின் முகம் மலர்ந்து விட்டது!

"என்னய்யா நோட்டு? அப்பாவும், பிள்ளையும் அடுத்தடுத்துக் கொண்டு வர்றீங்க...?" என்றார் கேலி பொங்கச் சிரித்துக் கொண்டே!

"முதலில் பத்து ரூபாய் நோட்டைக் கண்டதும், பையனை அனுப்பினேன்; அப்புறம் இந்த இருபது ரூபாய் நோட்டைக் கண்டதும் அடியேன் வந்தேன்... முதலாளி வீட்டுப் புத்தகமெல்லாம் பணமாக இருக்கும் போலிருக்கு...!" என்று மீண்டும் நினைத்ததைச் சொல்லிவிட்டார்!

"அப்பா! நான் பத்து ரூபாயைத்தான் மறந்து போய் வைத்துவிட்டேன்...! இந்த இருபது ரூபாயை நான் வைக்கவில்லையே...! அது எப்படி வந்தது...?" — கண்ணன் கேட்டான்.

"அதுவா...? அதை நான்தான் வைத்தேன்!" —சிவானந்தர் பெருமிதத்துடன் கூறினார்!

"நீங்கள் மட்டும் புத்தகத்தில் ரூபாய் நோட்டை வைக்கலாமாக்கும்?" — பட்டென்று கண்ணன் அப்பாவை மடக்கினான்.

"நான் என்ன... உன்னைப் போல மறந்து போயா வைத்தேன்...? வேண்டுமென்றேதானே வைத்தேன்...? அதாவது ஒரு 'இண்டர்வியூ' மாதிரி நடத்தினேன்!" — சிவானந்தர் கண்ணனை அடக்கினார். சத்தம் கேட்டு உள்ளே இருந்து கண்ணனுடைய அம்மாவும் வந்துவிட்டாள்.

கண்ணனின் அப்பா சிவானந்தர் பாலனையும், அவன் அப்பாவையும் பார்த்துக் கூறினார்: "உங்கள் இருவருடைய நேர்மையையும் நல்ல பண்பையும் பாராட்டுகிறேன்! என் மகன் ஒரு நல்ல பையனுடன்தான், நல்ல குடும்பத்துடன்தான் நட்பு வைத்திருக்கிறான் என்பதை அறிந்து பெருமைப்

படுகிறேன். இதை முன்பே நான் அறிவேன், கண்ணனும் அறிய வேண்டியே இப்படிச் செய்தேன். உம்... பாலா, பத்துப் படிச்சு முடிச்சதும் எனது ஆலையில் ஒரு வேலையில் உன்னை நியமிக்க இருக்கிறேன்! வந்து... மேலும் படிக்க விரும்பினாலும் படிக்கலாம்... உதவுவேன். என்ன... சந்தோஷந் தானே...? இந்த முப்பது ரூபாயையும் நீயே வைத்துக் கொள். தேவையான நோட்டுப் புத்தகங்களை வாங்கிக் கொள்'' என்றார்.

இருவரும் அசந்து விட்டனர்.


வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் இக்காலத்தில், படிக்கும் முன்பே வேலை காத்திருப்பது யாருக்குக் கிடைக்கும்? பாலனுக்கு அவனுடைய நேர்மைக்குக் கிடைத்த பரிசு என்று அனைவரும் பேசிக் கொண்டார்கள். ஆனால், சிவானந்தமோ, அவருடைய ஆலைக்கு எதிர்காலத்திற்கு உயர்ந்த உள்ளம் கொண்ட ஒருவனைத் தேடிக் கொண்டோம் என்று மகிழ்ந்தார். இனிய கனிதரும் மரம் எப்போதும் இனிய சுவைதானே தரும்...? சுவையை மாற்றாது அல்லவா?

பேச்சுக் கலையில் வெற்றி பெற...



* முதன் முதலில் மேடையேறும்போது கூச்சம் இருக்கவே செய்யும். இருந்தாலும், கேலிக்கு அஞ்சாது தொடர்ந்து படையெடுங்கள். பழகிவிட்டால், படிந்து விடும்.
* எடுத்துக் கொண்ட கருத்தை ஒங்கிப் பேச வேண்டும்.
* பேச்சில் ஏற்ற இறக்கம், குழைவு, நெளிவு யாவும் இருக்க வேண்டும்.
* தேவைப்படும் சமயத்தில் கைகளை ஆட்டியும் தலையை ஆட்டியும் 'ஆக்ஷனு'டன் பேசுவது முக்கியம்.
* தலையைச் சொறிவது, பாக்கெட்டில் கைகளை நுழைப்பது, சட்டை நுனியைத் திருகுவது, தாடையைத் தடவுவது, வேர்வையைத் துடைப்பது போன்ற சேட்டைகளைச் செய்யாதீர்கள்! இயல்பாகப் பேசுங்கள்.
* அறிஞர்களின் மேற்கோள்களைச் சுட்டிக் காட்டிப் பேசலாம்.
* பேச்சுக்குப் பொருத்தமாக வரும் குறள், பாட்டு இவற்றையும் சேர்க்க வேண்டும். அப்படி இணைக்கும் பாடல்களை இசையுடன் பாடியும் காட்டலாம்.
* ஒன்றன் பின் ஒன்றாக சங்கிலிக் கோவை போல் பேச்சு இருத்தல் வேண்டும்.
* குட்டிக் கதைகளும் கூறலாம்!
* ஒரே வார்த்தையைப் பன்முறை உபயோகிக்காதீர்கள். வெவ்வேறு விதமாகக் கூற முயலுங்கள் (உ—ம்) கூறினார், சொன்னார், இயம்பினார், நவின்றார் என்று.
* முன்னுரையை எல்லோரும் சொன்ன மாதிரியே சொல்லாமல், தனிப்பட்ட விதத்தில் தொடங்க வேண்டும். மறவாது நன்றியும் வணக்கமும் கூறி முடியுங்கள்.
* கடைசியாக ஒரு விஷயம் (காதைக் கொண்டு வாருங்கள், ரகசியம்!) உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் மாணவர்கள் என்பதை மறந்து விடுங்கள்! கடல் அலைகளின் இரைச்சல் முன் நீங்கள் கத்துவதாக நினைத்துக் கொள்ளுங்கள். பின் என்ன? வெற்றி உங்களுக்குத்தான்!

ஆர். நாச்சியப்பன் (75)



அறிவியல் உலகம்

விமலன்

காந்தம்

காந்தத் தன்மை பெற்றுள்ள பாறைகள் பற்றி ஒரு கதை உண்டு. பல நூற்றுண்டுகளுக்கு முன்பு 'கிரீட்' என்னும் ஊரில் "மாக்னஸ்" என்ற ஆடு மேய்க்கும் இடையன் ஒருவனிருந்தான். அவன் தன் ஊருக்கருகில் உள்ள ஒரு குன்றின் பக்கத்திலே தனது ஆடுகள் மேய்வதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனிடம் ஒரு நீண்ட பழைய கோல் ஒன்று இருந்தது. அக் கோலின் நுனியில் வளைந்த இரும்புக் கம்பி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

ஆடுகள் புற்களை நிதானமாக மேய்ந்து கொண்டிருக்கையில் "மாக்னஸ்" தன்னிடமிருந்தகுச்சியைகுன்றுகளுக்கிடையே ஆழமற்ற குட்டையில் குவிந்து கிடந்த் கற்குவியல்களுக்கு நடுவே செலுத்திக் கொண்டும், இழுத்துக்கொண்டும்தன் பொழுதைக்கழித்தான். திடீரென ஏதோ ஒரு பொருள் தனது குச்சியைக் கீழ் நோக்கி இழுப்பதுபோன்றதொர் உணர்வுதோன்றியது. மெதுவாகத் தன் கையிலுள்ள குச்சியை இழுத்த மாக்னஸ் இரும்பு தாங்கிய பகுதியில் ஒரு கல் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். மாக்னஸ் காந்தத் தன்மை கொண்ட ஒரு பொருளைக் கண்டுபிடித்துவிட்டதாக மகிழ்ச்சியடைந்தான்.

அக்காந்தத்திற்குத் தனது பெயரையே வைத்து 'மாக்னெட்' எனவும் அழைத்தான்.

அறிவியல் உலகில் முதல் முதலில் மின் சக்தி தோன்றக் காரணமாயிருந்த மாக்னஸ் என்பாருக்கு நாம் நன்றிக் கடன்பட்டுள்ளோம்.

மின்சார சக்தி

முதன் முதலில் மின்சார சக்தி பற்றி ஆராயத் தொடங்கியதற்கான ஆதாரம் கி. மு. ஆறும் நூற்றுண்டின் தொடக்கத்தில் காணப்படுவதாகக் கூறலாம். "தாலஸ் ஆப் மைல்டஸ்" என்ற கிரேக்கர் (கி. மு. 624 – 548) இரு பொருட்களைத் தேய்ப்பதாலோ



விமலன்



அல்லது ஒன்றோடு ஒன்று உராய்வதன் மூலமோ அவைசிறிது நேரம்மெல்லிய பொருள்களை ஈர்க்கும் சக்தியைப் பெறுவதாக உணர்ந்தார்.

இந்தத் தத்துவம் ஆங்கிலத்தில்' "Tribo Electrification" (மின் உராய்வு) எனப்படுகிறது.

இந்தமின்சக்தித்தத்துவத்தைகி. பி. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த கிரேக்கத் தத்துவஞானி 'தியோபரடஸ்' என்பார் ஆய்வு செய்து வந்தார். 'பிளினி' என்ற ரோமானிய அறிஞர் இக்கண்டுபிடிப்பில்மேலும்பல ஆய்வுகள் செய்து அடுத்த நான்கு நூற்றாண்டுகளில் வெற்றி காண வழி வகுத்தார்!



பிருந்தாவனக் கதையரங்கம்




கடவுளுக்கு நன்றி

எம். எஸ். சுரேஷ் (7005)

அழகன் என்பவன் எட்டாம் வகுப்பில் படித்து வருகிறான். அவன் பெயருக்கேற்றாற்போல் மிகவும் அழகாகத்தான் இருக்கிறான். ஆனால், மிகவும் சோம்பேறித்தனம் உடையவன். பக்கத்துத் தெருவில் உள்ள பள்ளிக்கூடத்திற்குக் கூட நடந்து போகச் சோம்பேறித்தனம். ஆகையால், தன்னுடைய தந்தையைத் தொந்தரவு செய்து ஒரு புதிய சைக்கிளை வாங்கி, அதில்தான் தினமும் பள்ளிக்குச் செல்வான். அழகன் தினமும் காலையில் எழுந்திருப்பதோ ஏழரை மணிக்குத்தான். எழுந்தவுடன் பள்ளிக்குச் செல்வதற்கு நேரம் ஆகிவிட்டது எனத் தன் தாயைத் தொந்தரவு செய்வான்.

பக்கத்துத் தெருவில் பள்ளிக்கூடம் இருந்தும், அதுவும் சைக்கிளில் சென்றும், மதிய உணவிற்கு வீட்டிற்கு வர மாட்டான். அவனுக்குக் காலையிலேயே மதிய வேளைக்குத் தேவையான சாப்பாட்டையும் கட்டிக் கொடுத்து விட வேண்டும். "அம்மா, எனக்குப் பள்ளிக்கு மணியாகி விட்டது. சீக்கிரம் சாப்பாட்டைக் கட்டிக் கொடம்மா!" என்றுகூறிக்கொண்டே அரைகுறையாகப் பல் தேய்த்துவிட்டு, அவசரமாக முகத்தை அலம்பிக் கொள்வது வழக்கம். அவன் குளிப்பதோ வாரத்திற்கு ஒருமுறைதான். மற்றைய தினங்களில் முகத்தை மட்டும் அலம்பிக் கொள்வான்.

அடுப்படியில் வேலையாக இருக்கும் தன் தாயாரை "அம்மா, அம்மா, என்னுடைய புத்தகங்களைக் கொஞ்சம் அடுக்கிக் கொடம்மா" என்பான். பிறகு, "அம்மா, எனக்கும் கொஞ்சம்



"அப்பா, ஓ.பே.ப . மாமா அதோ வருகிறார் அப்பா."

"அது யாருடா ஓ.பே.ப . மாமா?"

"ஓசி பேப்பர் படிக்கிற மாமா!"

தலை வாரி விடம்மா" என்பான். இப்படியே தன் தாயாரை அழைத்துக் கொண்டே இருப்பான். இதனால் அவனுடைய தாயார் இவனுக்குத் தேவையான மதிய உணவைக் கட்டிக் கொடுப்பதற்கு நேரமாகிவிடும். உடனே அழகன், நேரமாகிவிட்டது எனக்கூச்சலிடுவான்.

அழகனுடைய தாயார் தன்னுடைய மகன் வளர வளர மிகவும் சோம்பேறியாகி வருவதைக் கண்டு மிகவும் வருந்தினாள். அவனுடைய தந்தையாரும் அவனை மிகவும் கண்டித்திருக்கிறார். ஆனால் அழகனின் போக்கு மாறுவதாக இல்லை.

வீட்டில்தான் இப்படிச் சோம்பேறி என்றால், பள்ளிக்கூடத்திலும் அப்படித்தான். தன்னுடைய நண்பன் மணியை அழைத்து, "மணி, மணி, நேற்று கணக்கு ஆசிரியர் கொடுத்த வீட்டுக் கணக்குகளைக் கொஞ்சம் போட்டுக் கொடடா" என்பான். இப்படியாக நாளுக்கு நாள் அவன் மிகவும் சோம்பேறியாக வளர்வதைக் கண்டு மிகவும் வருந்தினாள் அழகனுடைய தாயார். ஒருநாள் இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்போது, 'முருகா, அழகனை நீதான் திருத்த வேண்டும்' என்று மனம் உருகி வேண்டினாள். முருகப் பெருமான் அருளை மனம் உள்ளவரல்லவா?

அன்று இரவு அழகன் தூங்கும் போது, ஒரு கனவு கண்டான். அதில் முருகர் அவன்முன் தோன்றி, "குழந்தாய், நீ வேண்டுவனவற்றைக் கேள்," என்றார். அழகன்தான் சோம்பேறியாயிற்றே! அதனால் "முருகக் கடவுளே, நான் என் பெற்றோரை மிகவும் தொந்தரவு செய்கிறேனாம். அதனால் நான் நினைத்தவற்றை அதாவது பல் துலக்குவது, தலை வாருவது, கணக்குப் போடுவது, முதலியன தானாகவே நிகழ அருள் புரிய வேண்டுகிறேன்" என்று வேண்டினான். "அதன் படியே நடக்கும், குழந்தாய்" என்று கூறி முருகர் மறைந்து விட்டார்.

காலையில் அழகன் எழுந்தான். பல் துலக்க நினைத்தவுடன், பிரஷ் தானாகப் பறந்து வந்தது. அவனுடைய பற்களை தானாகத் தேய்த்துவிட்டது. முதலில் அழகனுக்குச் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால், அந்த பிரஷ் மிகவும் வேகமாகத் தேய்க்கத் தொடங்கியது. அழகனால் வலி பொறுக்க முடியாமல் கத்தினான். ஆனால், பிரஷ் தேய்த்துக் கொண்டே இருந்தது. அடுத்து முகம் அலம்பச் சென்றான். சோப்பு தானாகப் பறந்துவந்து முகத்தில் தேய், தேயெனத் தேய்த்து விட்டது. அழகனுக்குக் கண்ணெல்லாம் ஒரே எரிச்சல்! குடிதண்ணீர் முகத்தை நோக்கி 'சளக், சளக்' கென வேகமாக அடித்தது. பிறகு டவல் தானாகப் பறந்து வந்து அவனது முகத்தை நன்றாகத் தேய்க்க ஆரம்பித்தது. அழகன் போதும் போதுமெனக் கத்தினான். ஆனால், டவல் தேய்ப்பதை நிறுத்தவில்லை. அழகன் ஓவென அழுதான். தலை வாரும் சீப்பு தானாகவே வாரத் துவங்கியது. அதுவும் கோணலும் மாணலுமாக வாரியது. பவுடரும் முகத்தில் அப்படியே அப்பிக் கொண்டது. அழகனுக்குக் கண்ணெல்லாம் ஒரே எரிச்சல். அடுத்து சட்டை போடுவதற்குள் அது வேறு தப்பிதமாய் மாட்டிவிட்டது. பள்ளிக்குக் கிளம்பும்போது சைக்கிளை மிதித்தவுடன், சைக்கிள் வேகமாகத் தாறுமாறாக ஓடியதால் எதிரே வந்த சைக்கிளுடன் மோதி, அவனது முழங்காலில் காயம் ஏற்பட்டது.

இப்படியாக அலங்கோலமாகப் பள்ளிக்குச் சென்ற அழகனைப் பார்த்து எல்லா மாணவர்களும் கேலி செய்தனர். அழகனால் அதைக் கண்டு பொறுக்க முடியவில்லை. வகுப்பறையில் கணக்கு ஆசிரியர், கணக்கை நடத்தி விட்டு, "அழகா, இந்தக் கணக்கை போர்டில் போடு" என்றார். அழகனும் சாக்பீசை எடுத்துக் கொண்டு போடத் துவங்கியவுடன், சாக்கு தானாகவே கிறுக்கத் தொடங்கியது. உடனே ஆசிரியருக்குக் கோபம் வந்தது. "அழகா, என்ன இது? போர்டில் கணக்கைப் போடச் சொன்னால் இப்படிக் கிறுக்குகிறாய்?" என்று நன்றாகப் பிரம்பால் அடித்தார். வலி பொறுக்க முடியாமல் அழகன், "ஐயோ, கடவுளே, காப்பாற்றுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினான்.


அப்போது பக்கத்து அறையில் தூங்கிக் கொண்டிருந்த அவனுடைய அம்மா ஓடிவந்து, "அழகா, என்ன ஆச்சு? ஏன் இப்படிக் கத்துகிறாய்? ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டாள். அழகனும், "ஆமாம்" என்று கூறித் தூங்கிவிட்டான்.

மறுநாள் அழகன் காலையில் எழுந்ததும் தன்னுடைய வேலைகளை யாருடைய உதவியும் இல்லாமல், சுறுசுறுப்பாகச் செய்து கொள்ளத் தொடங்கினான். பாரதியாரின் பாடல்படி செய்தான். அவனுடைய தாயாரும் அவனுடைய மாற்றத்தைக் கண்டு, "கடவுள் தன்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு அழகனைத் திருத்திவிட்டார்" என்று இருகைகளையும் கூப்பிக் கடவுளை நன்றியுடன் வேண்டினாள்.

பணத்தை எடுத்தவன்

பொன் அன்புமலர் (12851)

ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த, மதிவாணன் என்ற சிறுவன் ஏழாம் வகுப்பு படித்து வந்தான். அவன் வகுப்பில் உள்ள சில பணக்கார மாணவர்கள் நிறையக் காசு எடுத்து வந்து செலவு செய்தார்கள். அதைக் கண்ட மதிவாணன் தானும் அப்படிச் செய்ய வேண்டும் என ஆசைப்பட்டான். ஆனால், அவ்வாசை நிறைவேறுமா? அவன்தான் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவனாயிற்றே! அவன் தந்தை உழைத்தால்தான் அன்று காசு. ஒரு நாள் வேலை செய்யாவிட்டாலும் அன்று அவர்கள் பட்டினியே. தினமும் அவன் தாயார் மதிவாணனுக்குப் பத்துப் பைசா கொடுப்பாள். ஆனால் அவன் ஆசை நிறைவேற அது போதுமா?



ஒருநாள், அவனுடைய நண்பன் கணேசனுடன் ஒரு வீட்டிற்குச் சென்றான். அங்கு ஓர் இளம் ஆசாமியைக் கண்டான். ஆசாமியிடம் கணேசன், "நான் சொன்னேனே, அவன்தான் இந்தப் பையன். இவனுக்கு நிறையக் காசு வைத்துக் கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்ய வேண்டும் என்று ஆசை. அதை நீங்கள்தான் நிறைவேற்ற வேண்டும்" என்று கூறினான்.

அதற்கு அந்த ஆசாமி, "அவ்வளவு தானே கணேசா, அவனை நாளை அழைத்து வா!" என்று கூறிவிட்டான்.

மதிவாணனும் மறுநாள் பள்ளிக்குப் போவதைப் போல் அந்த ஆசாமியின் வீட்டிற்குச் சென்றான். அவன், "தம்பி மதிவாணா, நான் சொல்வதைப் போல நீ செய்ய வேண்டும். அப்போதுதான் நீ இன்பமாக வாழ முடியும்" என்று கூறி, அவனுக்குப்

பிக்பாக்கெட் அடிக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தான். சில நாட்களில் மதிவாணன் அந்தக் கலையில் தேர்ந்து விட்டான்.

இரவிலே அவன் படிக்க அமர்ந்து புத்தகத்தை எடுப்பான். அவன் மனம் படிப்பிலே செல்லாது. நாளைக்கு எப்படி பிக்பாக்கெட் அடிக்கலாம், எந்தப் பணக்கார ஆசாமி அகப்படுவார், எந்த ஓட்டலிலே சாப்பிடலாம் என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பான்.

தினமும் காலையில் பள்ளிக்குப் புறப்படுவதைப் போல மதிய உணவு எடுத்துக் கொண்டு புறப்படுவான். கூட்டம் அதிகமாயுள்ள ஏதேனும் ஒரு பேருந்தில் ஏறுவான். பயணிகள் அசந்த சமயம் பார்த்து ஐந்து, பத்து என்று அடித்துவிடுவான். அதைக் கொண்டு மதியம் ஓட்டலிலே நன்றாகச் சாப்பிடுவான். தாயார் கொடுத்த உணவை பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்துவிடுவான். இதைப் போலவே அன்றாடம் பள்ளிக்குப் போகாமல் தீய பழக்கத்தில் ஈடுபட்டிருந்தான். இது வீட்டிலுள்ள தாய்க்கோ, தந்தைக்கோ தெரியாது.

ஒருநாள் அவன் தந்தைக்குத் திடீரென்று வயிற்று வலி ஏற்பட்டது. மதிவாணன் வழக்கம்போல் பள்ளிக்குப் புறப்படுவதைப் போலப் புறப்பட்டுச் சென்றான். அவன் தாயார் கனகம் மதிவாணனின் தந்தையை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் சென்றாள். மருத்துவர் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் ஆபரேஷன் செய்ய வேண்டும். ரூபாய் இருநூறு செலவாகுமே! என்றார். உடனே கனகம் தன்னுடைய கம்மலை அடகு வைத்துப் பணம் கொண்டு வருமாறு பக்கத்து வீட்டுக் காரரிடம் சொன்னாள். அவர் கம்மலை அடகு வைத்துப் பணம் வாங்கிக் கொண்டு பஸ்ஸில் வரும்போது எவனோ அப்பணத்தைப் பிக்பாக்கெட் அடித்துவிட்டான்! மருத்துவமனைக்கு வந்த பிறகுதான் உண்மை தெரியலாயிற்று.

அவனுடைய தந்தையார், ஆபரேஷன் செய்யப் பணமின்மையால் துடிதுடித்துச் செத்துவிட்டார். மதிவாணனின் தாயார், கதறி அழுதாள். கனகம் நடந்ததை மதிவாணனிடம் கூறினாள். அவனும் குமுறிக் குமுறி அழுதான்.

'தன்வினைத் தன்னைச் சுடும்' என்பர். கனகத்துக்கு உதவ வந்த பக்கத்து வீட்டுக்காரரிடம் பிக்பாக்கெட் அடித்தவன் வேறு யாருமல்ல; மதிவாணன்தான்! அவன் மற்றவருக்குக் கேடு விளைவித்தான். கடைசியில் அது அவனுக்கே வந்து முடிந்தது.

பகவானின் பாதுகைகள்

முன்னொரு சமயம், வைகுண்டத்தில் ஸ்ரீமன்நாராயணன் பள்ளி கொண்டிருந்தார். அப்பொழுது, அவர் பக்கத்தில் இருந்த அவருடைய பாதுகைகளைப் பார்த்து,

"பாதுகையாரே, நாராயணனோ உறங்கிக் கொண்டிருக்கிறார். நாம் மூவரும் சற்று உலவிவிட்டு வரலாம். வாரும்" என்றன அவருடைய வெண்கொற்றக் குடையும் சாமரமும்.

அதற்குப் பாதுகை, "எந்த நேரத்தில் பக்தன் கூப்பிடுவானோ, அந்த நேரமே பகவான் விழித்து ஓடத் தொடங்குவார். அப்பொழுது, முதல் முதலில் என்னைத்தான் தேடுவார். ஆகவே நான் வர முடியாது" என்று சொல்லிற்று.

இதைக் கேட்ட வெண்கொற்றக் குடையும் சாமரமும் பாதுகையைப் பார்த்துச் சிரித்தன.

"இப்படி ஊழியம் செய்து கொண்டிருந்தால் செய்து கொண்டே இருக்க வேண்டியதுதான். நீர் எப்படியாவது போம்! நாங்கள் இருவரும் ஜாலியாக உலவிவிட்டு வருகிறோம்" என்று சொல்லி அவை இரண்டுமே வெளியே போய்விட்டன.

இதை ஸ்ரீமன்நாராயணன் கேட்டுக் கொண்டேதான் இருந்தார்.. இந்த வெண்கொற்றக் குடைக்கும், சாமரத்திற்கும் பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார்.

அதனால்தான் பகவான் ஸ்ரீராமனாக அவதாரம் செய்தபோது அவருடைய பாதுகைகள் அவருக்குப் பதில் பதினான்கு வருஷ காலம் சிம்மாசனத்தில் இருந்து அரசு புரியும் பாக்கியத்தைப் பெற்றன. அந்தப் பதினான்கு வருஷ காலமும் ஒரு நிமிடம் கூட வெளியே போக முடியாமல், அந்த வெண்கொற்றக் குடையும், சாமரமும் பாதுகைகளுக்குப் பக்கத்திலேயே இருந்து தொண்டு புரிந்தன!

ஆதாரம்: விஷ்ணு புராணம்.

— த. அருள்சிவபாலன் (47), செங்கல்பட்டு



அக்கினி பூதம்

தங்கமணி



9. பூதமாவது! புடலங்காயாவது!

அது ஒரு சாதாரண உருவமல்ல; அது ஒரு மனிதக் குரங்கு!

அதைக் கண்டதும் —

அந்த மனிதக் குரங்கைப் பார்த்ததும்—

வால்மீகியைப் பார்த்துக் கிசுகிசுத்தான் ஆதி: ''நேற்றிரவு.... இரண்டு கால்களால் நடந்து, நான்கு கால்களால் தாவிச் சென்ற கரிய உருவம் இதுதான்! இந்த மனிதக் குரங்கு தான்.....!''

'ஆமாம்' என்கிற மாதிரி, தலையை அசைத்தான் வால்மீகி.

அடுத்தநொடி—

'டம்ம்.... ம்மார்ர்ர்......!'

பேரிடியாய்க் குமுறிய பெருஞ் சத்தத்தைக் கேட்ட இளநெஞ்சங்கள், சிலிர்த்துக் குலுங்கின! தலைக்கு மேலே தூக்கி வைத்திருந்த பாறுங்கல்லை மறு பக்கத்தில் வீசியெறிந்துவிட்டு, நெட்டுக் குத்தாக ஓங்கி நிற்கிற பாறையில் நின்று, ''உர்ர்ர்! புர்ர்ர்!'' என்று ஆக்ரோஷமாகக் கூவிக் குதித்தது, மனிதக் குரங்கு!


குரங்கின் கூத்தைப் பார்த்ததும்—

கோபவேசத் தாண்டவத்தைக் கண்டதும் —

''அண்ணு! கோபப்படாதீர்கள், அண்ணு.....! அறியாமல் செய்வது தவறு. அறிந்தே செய்வது, குற்றம்! குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது! ஆனல்.... தவறை மன்னித்துக் கொள்ளலாம். சின்னஞ் சிறு பையன்கள், ஏதோ..... அறியாமல், புரியாமல் செய்துவிட்டார்கள். என்ன செய்வது....? பொறுத்துக் கொள்வோம்....'' எனக் கனிவாகப் பேசிய கிழவர், மேலும் பரிவோடு கெஞ்சிஞர்: ''இச் சிறுவர்கள் பசியாறுவதற்கு ஏதேனும் பழம் பறித்து வாருங்கள்.....''

அவரது பேச்சை —

உன்னிப்பாய்க் கவனித்து உணர்ந்து, உள்ளம் தணிந்தது. கனிந்



''அப்பா, இன்னைக்குப் பள்ளிக் கூடத்திலெபாடப்புஸ்தகலிஸ்ட்கொடுத்தாங்க. நோட் புஸ்தக லிஸ்ட் வேறே இருக்கு. அதை நாளைக்குத் தருவாங்களாம்.''

தது. ''உர்ர்.... புர்ர்....''ரென உறுமியது. பாறை உச்சியில் நான்கு கால்களால் நடந்தது. தாழ்வான பாறையில் எம்பிக் குதித்து, இரண்டு கால்களால் நடந்தது. அப்புறம், பாறைகளுக்கிடையே புகுந்து மறைந்தது, முற்றி முதிர்ந்த மனிதக் குரங்கு.

சில விநாடிகளுக்குப் பிறகு —

'மூசுமூசு' என உள்ளும் புறமுமாகத் திணறித் தவிக்கிற சுவாசக் காற்றை மிகவும் சிரமத்துடன் சமனப்படுத்திக் கொண்டு, கிழவர் சொன்னார்: ''இந்த மனிதக் குரங்கு, என் அருமையான சகோதரர். மனித குலத்தின் ஆதி காலத் தாத்தாவான இவர், ரொம்ப நல்லவர். பேசத் தெரியாது. ஆனால்.... நாம் பேசுவதைப் புரிந்து கொள்வார்.

பல வருஷங்களுக்கு முன்னே —

பதினேழு, பதினெட்டு வயது இளைஞனாயிருந்தபோது, இந்தமலைக்கு வந்தேன். நான் வருவதற்கு முன்னே, இந்த மலையில் தன்னந் தனியாயிருந்த இந்த ஆதி கால மனிதருடன் நட்புக் கொள்வதற்காக, நான் அரும்பாடு பட்டேன். அப்புறம், இருவரும் சகோதரராகப் பழகி, சுமார் எழுபத்தெட்டு, எழுபத்தொன்பது வருஷங்க.....''

கிழவரின் பேச்சில் குறுக்கிட்ட பீமன், வியப்புடன் கேட்டான். ''ஓ...! ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டாகத் தாங்களும், அந்த ஆதி காலத் தாத்தாவும் இந்த மலையில் இருந்து வருகிறீர்களா....?''

''ஆமாம்....'' தலையை அசைத்தார் கிழவர்.

''தாத்தா உங்களுடைய ஊர் எது...?'' என்றான் ஆதி.

''தமிழோங்கிபுரம்....'' என்றார் கிழவர்.

உடனே —

''தமிழோங்கிபுரமா....?'' என்று எல்லோரும் ஏக காலத்தில் உள்ளங் குலுங்கக் கூவினார்கள்.

''ஆமாம், நான் பிறந்து வளர்ந்த புனித பூமி, தமிழோங்கிபுரந்தான்...'' எனச் சொல்லிய கிழவர், எதையோ நினைவு கூர்ந்து நெஞ்சங் கலங்கிக் கண்ணீர் உகுத்தார்.

''தாத்தா....'' என்றாள் வீராயி.

''என்னம்மா....?''

''தமிழோங்கிபுரத்திலிருந்து, இந்தப் பயங்கர மலைக்கு ஏன் வந்தீர்கள்....?'' எனக் கேட்டாள், வீராயி.

சில விநாடி நேரம் மௌனமாயிருந்து, துயரம் கொப்புளிக்கிற மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, கிழவர் கூறினார்: ''என் பெயர், முனியாண்டி. என் தம்பியின் பெயர் பிச்சாண்டி. சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்த நான், என் தம்பியைச் செல்லமாகக் காப்பாற்றி வந்தேன்....

பிச்சாண்டிக்குப் பன்னிரெண்டு வயசானபோது, நான் உழவு வேலை பார்த்து வந்த என் எஜமானரின் வீட்டில், அவனை வேலைக்குச் சேர்த்து வைத்தேன்.

சில மாசங்களுக்குப் பிறகு —

எஜமானருடைய வீட்டில், கோழிப் பண்ணைக்குக் காவலாயிருந்த என் தம்பி..... ஒரே ஒரு கோழி முட்டையைக் குடித்துவிட்டானாம். அதற்காக, அந்தத் தவறுக்காக, என் தம்பி பிச்சாண்டியை...... அவனது இரு கைகளையும் கட்டி, விரல்களில் துணிக் கந்தலைச் சுற்றி, மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிட்டார், எஜமானர்.

அப்புறம், சில நாட்களில்....

எல்லா விரல்களும் நெருப்பால் தீய்ந்து கருகிய வேதனையைத் தாங்காமல் என் அருமைத் தம்பி இறந்து போனான்.....!

எனக்குச் சகிக்கவில்லை!

ஓர் இரவில் அந்த ஈவிரக்கமற்ற எஜமானரைத் தடியால் அடித்து, மண்டையைப் பிளந்துவிட்டு.... ஓடி வந்து.... இந்த மலையில் அடைக்கலமானேன்....!''

தமிழோங்கிபுரத் தாத்தாவின் துயரக் கதையைக் கேட்டதும், ''ஓ... அப்படியா.....!'' என்றான் வால்மீகி.

''ஆமாம், அப்படித்தான்.... அது சரி.... நீங்களெல்லாம் யார்....? இந்த மலைக்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று என்னவோ ஓர் அவசரத்துடன் வினவினார் முனியாண்டிக் கிழவர்.

''நாங்கள் எல்லோரும் தமிழோங்கிபுரத்.....''

''அட.....! நீங்களும் தமிழோங்கிபுரந்தானா.....?''

''ஆமாம், தாத்தா..... நாங்கள் தமிழோங்கிபுரத்துச் சிறுவர்கள்தாம்....!'' எனச் சொன்னான் பீமன்.

''பயங்கரக் காட்டைக் கடந்து, இந்த மலைக்கு ஏன், எதற்காக வந்திருக்கிறீர்கள்....?'' கலக்கமும், குழப்பமுமாக கேட்டார், முனியாண்டித் தாத்தா.

''இல்லை, தாத்தா.... வந்து..... தாத்தா....'' எனத் தொடங்கிய வீராயியைப் பார்த்து, "வீராயி, நீ சும்மா இரு... நான் சொல்லுகிறேன்....'' என்று வீராயியை அடக்கிவிட்டு, ஆதி சொல்லத் தொடங்கினான். ''தாத்தா... இந்த அக்கினி மலையிலிருந்து....''

தாத்தா குறுக்கிட்டார்: ''இந்த மலையின் பெயர், அக்கினி மலையா....?''

''ஆமாம், ஊர் ஜனங்கள் அப்படித்தான் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள்....'' என்ற ஆதி, மீண்டும் தொடர்ந்தான்: ''இந்த அக்கினி மலையிலிருந்து, ஒவ்வொரு அமாவாசை தினமும் நடுநிசி நேரத்தில், குப்பெனப் பொங்குகிற பேராக்கினி, வானளாவ ஓங்கிக் குமுறி எரிகிறது! இந்தப் பேராக்கினியைக் காணுகிற ஜனங்கள், திகிலடைந்து நடுங்குகிறார்கள். சிலர், அஞ்சி அதிர்ந்து, மூச்சுத் திணறி இறக்கிறார்கள். மேலும் சிலர், அக்கினியைக் கண்ட திகிலில், மூக்கிலும் வாயிலும் ரத்தங் கொட்டிச் சாகிறார்கள்....!''

இதைக் கேட்டதும் —

''அய்யோ, பாவமே....!'' எனத் தவித்தார் கிழவர்.

''அப்புறம் கேளுங்களேன்.... இந்த அக்கினி மலையிலிருக்கிற பயங்கரமான ஒரு கொடிய பூதந்தான், இவ்வாறு பேராக்கினியைக் கக்கி, ஜனங்களைப்பலிவாங்குகிறது!' என்று ஜனங்கள் நம்பி..... ஒவ்வொரு அமாவாசை மாலை நேரந்தோறும், அந்த அக்கினி பூதத்துக்குப் பொங்கலிட்டுப் பூசை போட்டுக் கும்பிடுகிறார்கள்....!

அதனாலே....

அக்கினியைக் கக்கி ஜனங்களைத் திகிலூட்டிக் கொல்லுகிற அந்தக் கொடிய பூதத்தைச் சந்தித்து, முடிந்தால், அதைத் தீயிலிட்டுப் பொசுக்குவதற்காகவே — நாங்களெல்லோரும் இந்த அக்கினி மலைக்கு வந்திருக்கிறோம்....!'' எனத் தீரங் கொப்புளிக்கத் தெளிவாக எடுத்துக் கூறினான் ஆதி.

அடுத்த நொடி —

''ஹம்ம்ம்.....!'' எனப் பெரிதாக நெட்டுயிர்த்தார். ஏதோ சிந்தனையும், குழப்பமுமாகச் சிரித்த முனியாண்டிக் கிழவர், தாழ்ந்த குரலில் சொன்னார்: ''குழந்தைகளே..... நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது— என்பார்களே, அந்த மாதிரி..... இந்த மலையிலும், இந்த மலையைச் சூழ்ந்திருக்கிற காடுகளிலும், வெறிபிடித்து

''டேய், வெண்ணெய் நிறையக் கிடைச்ருக்கு. நீ போய்க் கடையிலே நல்ல மாடர்ன் பிரெட்டாப் பார்த்து வாங்கி வாடா!''





அலைகிற கொடிய மிருகங்களை அச்சமூட்டித் துரத்துவதற்காகத்தான், இந்த மலையில் அக்கினியை மூட்டிக் கொண்டிருக்கிறேன்....''

''நீங்களா....?'' எனக் கூவினான் பீமன்.

''ஆமாம், நான்தான்'' என்றார் கிழவர்.

''ஆங்....! அப்படியா....!'' என்றலறிய நாகன், ஓரடி பின்வாங்கினான். உடனே, துணிச்சலுடன் ஓரடி முன்னே பாய்ந்து, கிழவருக்கு எதிரில் வந்து நின்ற வீராயி கேட்டாள்: ''அப்படியென்றால்..... நீங்கள்தான் அக்கினி பூதமா....?''

அவளது வினாவைக் கேட்டதும்—

''ஹூம்! பூதமாவது! புடலங்காயாவது...! கிட்டத்தட்ட எண்பது வருஷங்களாக இந்த மலையில் நானும், எனது சகோதரரான மனிதக் குரங்காரும் வாழ்ந்து வருகின்றோம். எங்களைத்தவிர, இந்தமலையில், இன்று வரையில் எந்தப்பூதமும் வந்தது கிடையாது! எத்தகைய பேய், பிசாசும் இங்கே எட்டிப் பார்த்தது இல்லை...! பூதம், பேய், பிசாசு என்பதெல்லாம் சுத்தப் புளுகு! மோசடித்தனமான பொய்...!'' என்று தீர்வும் தெளிவுமாக, அழுத்தமும் திருத்தமுமாகச் சொன்னார், முனியாண்டிக் கிழவர்.

வெயில் ஜகஜகத்தது.

வாடி வதங்கிச் சோர்ந்து துவளுகிற முகத்தைக் கவனித்தபடியே, என்னவோ யோசனையுடன் ஆதி வினவினான்: ''தாத்தா... வானளாவ ஓங்கிக் குமுறியெரிகிற மாபெருந்தீயை, இந்த மலையில் எங்கே, எப்படி மூட்டி விடுகிறீர்கள்...?''

அவன் வினா எழுப்பிய நொடியே—

''க்கீய்ய்...! க்கீய்ய்...!'' எனத் திடீரெனக் கிறீச்சிட்டபடியே பறந்து வந்த இரண்டு மலைக் கழுகுகள், சிக்கிமுக்கிக் கல் பாறையின் உச்சியில் அமர்ந்தன.

அவைகளைக் கண்டதும் —

எதையோ தெளிவாகப் புரிந்து கொண்ட மாதிரி, முனியாண்டிக்

கிழவர், தலையை மெல்ல அசைத்துக் கொண்டார். பிறகு, ஆதியைப் பார்த்துச் சொன்னார்: ''தம்பி...உன்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லுகிறேன்... இதோ... பக்கத்திலுள்ள களிமண் பாறைப் பள்ளத்தில் காணும் சேற்றுக் குட்டை, சாதாரண சேற்றுக் குட்டை அல்ல. கல்லெண்ணெய் என்று ஜனங்கள் சொல்லுகிறார்களே, அந்த எண்ணெயின் மூலப் பொருளான பெட்ரோலியம், இந்தக் குட்டையில் சதசதவெனச் சுரந்து, பொங்கிக் கொண்டிருக்கிறது! இந்தக் குட்டையில் தேங்கி நிற்கிற மழை நீருக்கு மேலே, அந்த பெட்ரோலியச் சேறு, மிதந்து கொண்டிருக்கிறது! அமாவாசை தின நெருக்கத்தில் இந்தச் சேறு மிதமிஞ்சிச் சுரந்து, இந்தக் குட்டை முழுவதும் நிரம்பி விடுகிறது...! அந்த நாட்களில், இந்தபெட்ரோலியச்சேற்றில்,தீமூட்டி எரிக்கிறேன்...!''

''எவ்வாறு தீ மூட்டுகிறீர்கள்...?'' என்றுநறுக்கெனக்கேட்டாள்,வீராயி.

''ஒரு சிக்கி முக்கிக் கல்லை எடுத்து, குட்டையைச்சூழ்ந்துள்ளசிக்கிமுக்கிக் கல் பாறைகளின் மீது வீசியெறிவேன். கல்லோடு கல் மோதியதும், தீப்பொறி தெறித்து விழும். அந்தப் பொறி பட்டதும், குட்டையிலுள்ள பெட்ரோலியச் சேறு தீப்பற்றிக் குமுறும்!'' என்ற கிழவரின் விழிகள், மெல்லச் சிலிர்த்து, மிரட்சியுடன் தவித்தன...!

''தா...த்...தா...'' என்றான், வால்மீகி.

கிழவர், மூச்சுத் திணறலுடன் விழிகளை வலுக்கட்டாயமாகத் திறந்தார். மங்கலாகத் தோன்றும் எல்லோரையும் ஒரு சுற்றுப் பார்த்துவிட்டு, ஈனக் குரலில் பேசினார்: ''குழந்தைகளே... பெட்ரோலியம்...தங்கம்,நவரத்தினங்கள்... இந்த மலை... மலையில்... ஏரா... ஏராளம்... இதைப் பற்றி, அரசாங்... அரசாங்கத்தாரிடம்... சொல்லுங்...



என்... என்னுடைய... உ... உடலை... அதோ... அந்... கழுகுகுகுகு...''

கிழவர் இருமினார்.

இருதயத்திற்குள் குட்டையாய்த் தேங்கிய இரத்தம், மூக்கிலும் வாயிலுமாய்க் குபீரிட்டுப் பாய்ந்தது!

இதைப் பார்த்ததும் —

''தாத்தா ...!'' — வீறிட்டு அலறினாள், வீராயி.

அதே நொடியில் —

''கிர்ர்...! ஊர்ர்ர்...! க்கீ... ஊய்...!'' என்று மலை மேலிருந்து குமுறிய கதறல் சப்தம், மலை முழுவதும் தழைத்துச் சிலிர்த்தது!

அந்தக் கதறலைக் கேட்டதும் —

''வீராயி! நாகா ...! நமக்குப் பழம் பறித்து வரச் சென்றாரே... அந்த ஆதி காலத் தாத்தாவுக்கு, என்னவோ ஆபத்து நேர்ந்திருக்கிறது...! நீங்கள் இருவரும் இந்தத் தாத்தாவின் உடலைக் காத்து நில்லுங்கள்...! நாங்கள்...'' என்றவாறே வால்மீகி, பீமனோடு வீச்சாகப் பறந்தோடினான், ஆதி.

மலைக்கு மேலே —

நேற்றிரவு தங்கிய சிறு குகைக்கு அருகிலே —

ஆ! பயங்கரம்...!

அங்கும் இங்குமாகச் சிந்திச் சிதறிக் கிடக்கும் செவ்வாழைப் பழங்களுக்கு அருகில், சுருண்டு நலிக்கும் ஆதி காலத்தாத்தாவை—மனிதக்குரங்கை— சுற்றி வளைத்து இறுக்கி முறுக்கிக் கொண்டிருந்தது, ஒரு பாம்பு...! பயங்கர மலைப்பாம்பு...!

கண்ட நொடியே —

கையிலிருக்கிற அரிவாளை ஆக்ரோஷமாக வீசி எறிந்தான் ஆதி.

'சதக்...!'

அரிவாளால் வெட்டப்பட்ட மலைப் பாம்பின் தலை, துண்டாகித் தெறித்து விழுந்தது...!

ஓடினார்கள்!

குரங்குத் தாத்தாவின் நொறுங்கிய உடலைச் சுற்றிப் பிணித்து நெளியும் மலைப் பாம்பின் உடலைப் பிரித்து எறிந்துவிட்டு...

''அய்யோ...! இந்தத் தாத்தாவும் இறந்...'' வால்மீகி அழுதான்.

அப்புறம் —

அப்புறம் என்ன...?

தமிழோங்கிபுரத் தாத்தா —


ஆதி காலத் தாத்தா —

இருவருடைய உடல்களையும் கொண்டு போய், குகைக்கு மேலேயுள்ள பாறாங்கல்லில் கிடத்திவிட்டுச் சுற்றி நின்று, கண்ணீர் வடித்தார்கள்...!

நாலைந்து நொடி நேரத்திற்குள் —

எங்கிருந்தோ மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து, குகைக்கு மேலே வளைய வளைய வட்டமிட்டன, நாலைந்து பிணந்தின்னிக் கழுகுகள்...!

(முற்றும்)




அடுத்த தொடர்கதை—?

என்ன பெயர்?

யார் எழுதுகிறார்?

அடுத்த இதழில் காணலாம்.



எது முக்கியம்?

ஆர். ஆனந்த்

உங்களுக்கு தீபக் சந்தரைத் தெரியுமா? அப்படியென்றால் அருணையும் தெரிந்திருக்கும்.

இருவரின் வீடுகளும் நகரின் வளர்ச்சி அடைந்துவரும் ஓர் ஒதுக்குப்புறமான காலனியில் எதிரெதிராய் அமைந்திருந்தன. இருவரும் வகுப்புத் தோழர்கள் வேறு. சொல்லவா வேண்டும் அவர்கள் நெருக்கத்தைப் பற்றி!

இருவருமே நன்றாகப் படிப்பவர்கள்தான். அவர்கள் வகுப்பிலேயே அருண்தான் எப்பொழுதுமே ஃபஸ்ட் ராங்க். தீபக் செகண்ட் ராங்க். இருந்தாலும் அவ்விருவரிடையே மிகப் பெரிய வேறுபாடு இருந்தது.

அருண் புத்தகப் பூச்சி. நாள் முழுவதும் படித்துக் கொண்டுதான் இருப்பான். அதுவும் பாடப் புத்தகங்களை மட்டுமே!

தீபக் மாறுபட்டவன். தினமும் ஹோம் ஒர்க்கை முடித்துவிட்டு, ஒரு மணிநேரமோ, இரண்டுமணி நேரமோ பாடங்களைப் படிப்பான். அதன் பிறகு, சில நல்ல பத்திரிகைகளைப் படிப்பான். காலையில் எழுந்தவுடன் பத்திரிகை படிக்காவிட்டால், அவனுக்குவிடிந்தது போலவே இருக்காது. பொது அறிவுப் புத்தகங்கள் நிறையப் படிப்பான். தீபக் டீ.வி.யில் ஒளிபரப்பாகும் சில முக்கியமான நிகழ்ச்சிகளையும் பார்ப்பான்.

ஆனால் அருண் — இவையெல்லாம் தேவையில்லை என்று கருதுபவன்.

காலாண்டுத் தேர்வுகள் முடிந்துவிட்டிருந்தன. வழக்கம்போல, அருண்தான் முதல் ராங்க் பெற்றிருந்தான். வகுப்பாசிரியர் அவனை நிறையப் புகழ்ந்துபேசினார். அருணுக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாய் இருந்தது. தீபக்கை ஒருமுறை பெருமையுடன் பார்த்தான். தீபக் அருணுக்கு வாழ்த்துக் கூறினான்.

அவர்கள் பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷனுக்காக மாவட்டக்கல்வி அலுவலர் வந்திருந்தார். எட்டாம் வகுப்பு 'ஏ' செக்ஷனுக்குச் சென்றபொழுது, பாடங்களிலிருந்து நிறையக் கேள்விகளைக் கேட்டார். அனைத்திற்குமே 'டக் டக்'கென்று பதில் சொன்னார்கள் அருணும், தீபக்கும்! (அருண்தான் தீபக்கைவிட நிறையக் கேள்விகளுக்

கொசுவினால் வரும் நோய் 'மலேரியா' என்பது தெரியும். அந்தப் பெயர் எப்படி வந்தது?

'மலா' என்றால் சதுப்பு நிலம் என்றும், 'ஏரியா' என்றால் கெட்ட காற்று என்றும் இத்தாலிய மொழியில் பொருள். இந்த காற்றினால்தான் மலேரியா வருவதாக இத்தாலியர்கள் நம்பினார்கள். R.S.S.

குப் பதில் சொன்னான்.) மாவட்டக் கல்வி அலுவலர் இருவரையுமே புகழ்ந்தார். பின்னர், சில பொது அறிவுக் கேள்விகளையும் கேட்டார்.

"நமது மத்திய கல்வி அமைச்சர் யார்?"

"புதிய 'நவோதயா' கல்வி நிலையங்கள், எந்த மாநிலங்களில் முதலில் துவங்கப்பட்டன?"

"பஞ்சாப் உடன்படிக்கையில் யார், யார் கையெழுத்திட்டார்கள்?"

"மெக்ஸிகோவில் அண்மையில் நடைபெற்றது என்ன போட்டி? அதில் எந்த நாடு வெற்றி பெற்றது?"

— அனைத்துக் கேள்விகளுக்கும் தீபக் சரியான விடைகளைக் கூறினான். அருண் விடை தெரியாமல் விழித்தான். மாவட்டக் கல்வி அலுவலரும், "என்ன அருண், உனக்குப் பதில் தெரியாதா? இத்தனை நேரம் நன்றாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாயே?" என்று கேட்டார்.

அருண், தலையைக் குனிந்தவாறே எழுந்து நின்றான். அவனுக்கு வெட்கமாய் இருந்தது.

கல்வி அலுவலர், "அருண், நீ நன்றாகப் பாடங்களைப் படிப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், பாடங்களை மட்டுமே படித்தால் போதாது. நிறையப் பொது விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அருணுக்கு மட்டுமல்ல, இதை எல்லோருக்கும்தான் சொல்கிறேன். பள்ளிப் படிப்பு முடியும்வரை, பாடங்களை மட்டுமே படிப்பது, உங்களுக்குப் போதுமானது போலத் தோன்றலாம். ஆனால், அது போதுமானதல்ல. கல்லூரி நுழைவுத் தேர்வுகளிலும் சரி, பின்னர் வேலைக்காக நடக்கும் நேர்முகப் போட்டிகளிலும் சரி, நிறையப் பொது அறிவுக் கேள்விகளையே கேட்பார்கள். அதற்காக மட்டும் நீங்கள் பொது விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டால் போதாது. தன்னைச் சுற்றி நடக்கும் முன்னேற்றங்களையும் வெவ்வேறு முக்கிய சம்பவங்களையும் தெரிந்து கொள்ள வேண்டியது, ஒரு பொறுப்புள்ள குடிமகனின் கடமையும் கூட. அம்மாதிரி பொது அறிவு பெற்றிருக்காதவர்கள், பொறுப்பான குடிமகனாய்க் கருதப்பட மாட்டார்கள். எல்லோரும் தீபக் போல இருக்க வேண்டும்" என்றார்.

தீபக்கிற்கு மிகவும் பெருமையாய் இருந்தது.

அன்று மாலை —

பள்ளி மாணவர்கள் அனைவரும், வகுப்புகள் முடிந்த சந்தோஷத்தில், அரட்டை அடித்துக் கொண்டே, சிட்டாய்ப் பறந்து கொண்டிருந்தார்கள், தங்கள் வீடுகளை நோக்கி! மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து, ஒரு சந்துக்குள் அருணும், தீபக்கும் சென்று கொண்டிருந்தபொழுது—ஒரு சிறுவன் அழுது கொண்டு நிற்பதைப் பார்த்தார்கள்.

அருண், எந்தப் பாதிப்புமில்லாமல் முன்னேற, தீபக் அவனைத் தடுத்தான். "இந்தப் பையனை எங்கோ பார்த்த மாதிரி இருக்குதே".

"எங்கேயாவது பார்த்திருப்பே. பேசாமல் வா. நேரமாயிடும். போய்ப் படிக்கணும்" — சொன்னது அருண்.

தீபக் நிறைய யோசித்துப் பார்த்தான். மூளைக்கு நிறைய வேலை கொடுத்தபின், கடைசியில், "அருண், நேற்று டீ.வி.யில் காணவில்லைன்னு, இவன் படத்தைக் காட்டினாங்க. இன்னிக்குக் காலையில பேப்பரிலேகூட விளம்பரம் பண்ணியிருந்தாங்க."

அருண் "சரி சரி" என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

தீபக் சற்று அருகில் இருந்த காவல் நிலையத்தை அடைந்து, விஷயத்தைக் கூறி, அன்றைய தினசரிப் பத்திரிகையைக் கேட்டான். காவலர்கள் பேப்பரைக் காட்டினார்கள். "இவனேதான் சார், நான் அங்கு பார்த்தேன்" என்று தீபக் நிச்சயமாய் சொன்னான். உடனே காவலர்கள் சென்று அந்தச் சிறுவனை அழைத்து வந்து அவனை

அவனது பெற்றோரிடம் ஒப்படைத்தனர். இன்ஸ்பெக்டர் வீரு(வீரராகவன்) தீபக்கை நிறையப் பாராட்டினார். அந்தப் பையனும் தீபக்குடன் அவன் வீட்டுக்கு வந்து, தீபக்கின் பெற்றோருக்கும் நன்றி கூறினான்.

இதையெல்லாம் எதிர் வீட்டிலிருந்த அருணும் கேள்விப்பட்டான். அன்றே அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.


அடுத்த நாள் காலை —

வீட்டு வாசலில் 'தொப்'பென்று வந்து விழுந்த பேப்பரை, அப்பா படிப்பதற்கு முன்னாலேயே எடுத்துப் படிக்க ஆரம்பித்தான் அருண்!

ஒரு நல்ல குடிமகனாய் ஆவதற்கு, சமுதாயத்தில் சிறந்தவனாய் மதிக்கப்படுவதற்கு, பாடங்களை நன்றாகப் படிப்பது போலவே, பொது விஷயங்களையும் நன்றாக அறிந்திருக்க வேண்டுமென உணர்ந்தான்.


தெரியாத போனால் தெரிந்து கொள்ளுங்கள்

* பண்டைய எகிப்தியர்கள் கல் தலையணைகளையே பயன்படுத்தினார்கள்.
* குதிரைகளிலேயே மிகச் சிறந்த குதிரை ஷெட் ரெண்ட் என்ற இனத்தைச் சேர்ந்த குதிரைகளாகும். இவற்றின் சராசரி உயரம் 75 செண்டி மீட்டர்.
* பாரசீகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத்திரிகைகள் ரப்பர் பேப்பர்களில் அச்சடிக்கப்பட்டன. குளிக்கும்போதும் வாட்டர் புரூப் பத்திரிகைகளைப் படித்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டார்கள்.
* இந்தியாவில் மிருகக் காட்சி சாலை முதன் முதலாக 1855 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. அடுத்து 1857 ஆம் ஆண்டு திருவனந்தபுரத்திலும் 1863 ஆம் ஆண்டு பம்பாயிலும் 1875 ஆம் ஆண்டு அலிபூரிலும் நிறுவப்பட்டன.



* காண்டா மிருகத்தின் மூக்கில் உள்ள கொம்பு எலும்பினால் ஆனதல்ல. கெட்டியான முடிகளால் ஆனது.
* இந்தியத் தபால் தலையில் முதன் முதலாக இடம் பெற்ற பெண்மணி விக்டோரியா மகாராணியாவார். வெளிவந்த ஆண்டு 1882.
* ஒட்டகம் $1\frac{1}{2}$ டன் எடையைத் தூக்கிக் கொண்டு மைல் கணக்கில் மிக எளிதாக நடந்து செல்லும் ஆற்றல் பெற்றது.
* தண்ணீர்ப் பாம்பு முட்டையிடாது. குட்டி போடும்.
* கடற்கரைப் பகுதி மிகுந்த நாடு கனடாதான். இங்கு 2,50,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதி இருக்கிறது.
* வெட்டுக்கிளிகள் சுமார் 13 விதமான சப்தங்களை ஏற்படுத்துகின்றன. இவை வெவ்வேறு செய்திகளை மற்ற வெட்டுக்கிளிகளுக்குத் தெரியப்படுத்துகின்றன.
* ஆப்பிரிக்காக் கண்டத்தில் ராட்சதத் தவளைகள் இருக்கின்றன. இது சாதாரண நாயின் அளவிற்கு வளரும். நன்கு வளர்ந்த இத்தவளை இரண்டரை அடி உயரமும், பதினான்கு பவுண்டு நிறையும் இருக்கும்.
* உலகிலேயே மிகப் பெரிய பனி ஆறு அண்டார்டிகாவிலுள்ள பிராட்மோ என்ற ஆறுதான். இதன் நீளம் 100 மைல்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.



துப்பறியும் டைகர்
ஓவியர் - ராஜு ÷ கதை - மு. சிவாஜி.
கோடை விடுமுறையை மாமா வீட்டில் கழிக்க ரமணி தன் நாயுடன் கோவா சென்றான்.
நாயை துணைக்கு அழைத்துக்கொண்டு வந்திருப்பதைப்பார்த்து அவன் மாமா ரமணியைப்பரிகாசம் செய்ய....
மாமா! என் டைகரை சாதாரணமாக நினைக்காதீர்கள். துப்பறிவதில் இது பெரிய நிபுணன்.
கடற்கரையில் தனது ஓய்வை நிம்மதியாகக்கழித்துக்கொண்டிருந்தான் தன் டைகருடன் ரமணி...
டைகருக்கு இன்று நல்ல மூடு. வழிப்போக்கர்களை கூர்ந்து கவனிக்கிறது. ஏதோ நடக்கப் போகிறது.
அப்போது ஒரு சாமியாரைப் பார்த்து டைகர் குலைத்தது.
சாமியாரைப்பார்த்து டைகர் சந்தேகப் படுகிறதே!
ரமணி தன் டைகரை அழைத்துக் கொண்டு சாமியாரைப்பின் தொடர்ந்தான்.
அதோ அந்த மனிதன் கையில் வைத்திருக்கும் மூட்டையில் ஏதோ இருக்கிறது. ஓசையின்றி உளவு பார்க்க வேண்டும்.
சாமியாரை எதிர் பார்த்து படகின் அருகே ஒருவன் நின்று கொண்டிருந்தான்.
படகு தயார்; ஓடிவா. நாம் தப்பிவிடலாம்.
நீ கூறியபடி சிலையை திருடிக்கொண்டு வந்து விட்டேன். இதோ பார் சிலையை.
படகின் மறைவில் நின்று கொண்டிருந்த சிறுவனை அவர்கள் பார்த்துவிட்டனர்.


ஆ! அதோ ஒரு சிறுவன்! அவனை உயிரோடு விட்டால் நம் உயிருக்கே ஆபத்து! அவனைப்பிடி...
சடாரென ரமணியை கடத்திக்கொண்டு அந்தக்கயவர்கள் படகில் புறப்பட்டனர்.
ஆபத்து! ஆபத்து!! காப்பாத்த வாங்க.
படகைப்பார்த்து நாய் குலைக்கிறது.
அப்போது அரசின் ரோந்துப்படகு கரை ஓரமாக வந்து கொண்டிருந்தது.
என்ன அந்த நாய் படகைப்பார்த்துக் குலைக்கிறதே! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. நம்மை அந்தப்படகைப்பின் பற்றச்சொல்லுகிறதோ!
ஆம், நெருங்கிப் பார்ப்போம்.
டைகர் ரோந்துப் படகில் தாவி ஏறுகிறது.
சாமியார் சென்ற படகை ரோந்துப் படகு நெருங்கியதும் திடீரென்று டைகர் பாய்ந்து சாமியாரின் தாடியைக்கவ்வ...
ஆ... நீயா! உன்னைத் தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். கான்ஸ்டபிள், இந்த திருடர்களைக் கைது செய்யுங்கள்.
இந்த சாமியார் ஒரு பழைய கேடி தம்பி. இவனைப் பிடிக்க நீயும், உன் நாயும் செய்த உதவிக்கு நன்றி.
டைகருக்குப் போலீஸ் பதக்கம் வழங்கப்பட்டது.

தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்த தம்பி தங்கைகள்

(தொடர்ச்சி)

99. என். மஞ்சுளா (1223),
த/பெ. சி.எஸ். நடராஜன்,
டி.என்.இ.பி. மேற்கு அக்ரஹாரம்,
கொமரலிங்கம் அஞ்சல்,
உடுமலை மாவட்டம்.

100. கே. ராஜ ரவிந்தர் (7965),
த/பெ. எம்.எஸ். கனகசபை,
முத்துசாமி மட்டையர் காலனி,
சாக்கோட்டை போஸ்ட்,
கும்பகோணம் வழி 612 401.

101. எம். ரசியா நசீம் (12997),
16, மேலரத வீதி
வடகரை, பெரியகுளம் 626 501.

102. எஸ். ஆர். ராஜ முருகன் (12912)
28, மல்லிப்பட்டணத் தெரு,
திண்டிவனம்—604 001.

103. எம். ஆர். சீனிவாசன் (12896),
13, கிழமாத்தூர் பள்ளிவாசல்,
2வது தெரு, மதுரை—9.

104. இரா. செல்வ குமார் (8818),
13, சந்தியப்ப தெரு,
ஓட்டேரி, சென்னை—12.

105. மு. சிவசண்முகம் (2810),
த/பெ. ஏ.எஸ். முருகன்,
ஸ்ரீபாலாஜி எலக்டிரிக்கல்ஸ்,
சிந்துபூந்துரை,
திருநெல்வேலி—627 001.

106. மா. மருதவாணன் (1917),
அன்பையா நிலையம்,
வசந்த நகர், 3 வது தெரு,
மதுரை—625 003.

107. கே. பாலாஜி (10466),
C/o. குப்புசாமி ஆசிரியர்,
கொல்லுமாங்குடி,
நன்னிலம் தாலுகா.

108. இரா. சௌரிராஜன் (12539),
த/பெ. டி. ராமன்.
நல்லறிக்கை அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

109. எஸ். ஜெயக்குமார் (5405),
C.E.C.R.I.
காரைக்குடி—623 006.

110. என். திருநாவுக்கரசு,
953, பஜனைக் கோயில் தெரு,
ஆம்பூர்பேட்டை,
வாணியம்பாடி—635 751.

111. என். ராஜ்குமார் (6130),
41, நடுத் தெரு,
பெருமாள் கோயில் எதிர்ப்புறம்
பழனி—624 601.

112. க. சிவசங்கரன் (12019),
13, கீழ்த் தெரு,
தர்மபுரி—636 702.

113. பொ. ராதை (12006),
18 ஏ, நெல்லை நாயஞர் தெரு,
பாளையங்கோட்டை—627 002.

114. பெ. காஞ்சனு (1132),
61, வடக்கு ஆண்டார் தெரு,
திருச்சி—2.

115. ஜி. ஸ்ரீப்ரியா (9188),
10 ஏ, 3வது குறுக்குத் தெரு,
மகாராஜபுரம், விழுப்புரம்.

116. பெ. வெங்கட லக்ஷ்மிகாந்தன் (13367)
4/1. பெருமாள்புரம், சிதம்பரம்,
கடம்பூர் 627 714.

117. கே. நரசிம்மன் (7378),
58, ஹிமாம்பாதா தெரு,
ஒசூர்—635 125. தர்மபுரி மாவட்டம்.

118. எம். டில்லி பாபு (12937),
த/பெ. முருகப்ப ஆசாரி,
ஆத்தூர்கிராமம், சோழவரம் போஸ்ட்
சென்னை—67.

119. ஆர். செல்லப்பன்,
21—டி கோனேரிப்பட்டி Ex. No. 2
இராசிபுரம் தாலுகா,
சேலம் மாவட்டம்.

120. கோ. ரமா (8758),
3/13. வெங்கடாபுரம் காலனி,
தாலுகா அலுவலக சாலை, சைதை,
சென்னை—15.

121. ப. ஞானவேல் (6482),
த/பெ. ப. டச்சமுத்து,
குப்பம்பட்டி அஞ்சல்,
ஜலகண்டபுரம் (வழி),
சேலம் மாவட்டம்.

122. கே.ஜி.எஸ். ரமணன்,
4/104, மாரியம்மன் கோவில் தெரு,
சாத்தூர்—626 203.

123. எஸ். லட்சுமி நாராயணன் (13428)
21 ஏ, வீராக்குட்டை தெரு,
திருவண்ணாமலை—606 603.

124. ப. கோவிந்த முத்து (6083),
காமராசாப் பேட்டை,
தின்னபெல்லூர் அஞ்சல்,
பொன்னகரம் தாலுகா.

125. உறுப்பினர்கள் மங்கலங்கிழார்
வானொலி சிறுவர் சங்கம்,
ஆறுமுகர் மலையடிவாரம்,
பொதட்டூர்ப்பேட்டை—631 208.
செங்கற்பட்டு மாவட்டம்.

126. கே. சந்தான கிருஷ்ணன்,
நன்னிலம்.

127. ந. முத்துக்குமரன் (11376),
த/பெ. க. நடராஜ சுந்தரம்,
வரதராஜம் பேட்டைத் தெரு,
வலங்கைமான் 612 804.

128. தா. இராஜ் குமார் (7002),
7/1, மைலம் ரோடு,
திண்டிவனம்,
ஐக்காம்பேட்டை—604 002.

129. பி. முகுந்த மாதவன் (8521),
த/பெ. எஸ். பிரசன்ன வெங்கடேசன்,
தலைமை ஆசிரியர்,
சாமல்பட்டி—635 306.
தர்மபுரி மாவட்டம்.

130. ச. செந்தில் நாதன் (13131),
த/பெ. மு. சண்முகம்,
அரசினர் சுகாதார நிலையம்,
அரவக்குறிச்சி அஞ்சல்,
திருச்சி மாவட்டம்—639 201.

131. டி. லலிதா,
மேட்டு மகாதானபுரம் போஸ்ட்,
லாலாப்பேட்டை வழி,
குளித்தலை தாலுகா,
திருச்சி மாவட்டம் 639 131.

132. ந. சரவணக்குமார் (5282),
த/பெ. ரா. அ. நடராஜன்,
ஆலப்பாக்கம், வல்லம் அஞ்சல்,
செங்கல்பட்டு 603 001.

133. ஆர். சுந்தரராஜன் (8900),
49, பெருமாள் சன்னதித் தெரு,
செங்கோட்டை 627 809.

134. எம். தேவராஜ்,
த/பெ. எம்.ஏ. சுப்பிரமணியன்,
முருகன்புதூர்,
பி. நஞ்சகவுண்டம்பாளையம் அஞ்சல்,
கோபிசெட்டிபாளையம் 638 476.

135. வி. பிரசன்னா (9210),
67, சின்னையா தெரு,
பட்டுக்கோட்டை — 614 602.
தஞ்சாவூர் மாவட்டம்.

136. ஆர். கே. ஸ்வர்ணா (453),
48, ஏரிக்கரைத் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை—600 033.

137. வி. தயாளன்,
பாக்கம் அஞ்சல்,
நீட்டபாக்கம் வழி,
விழுப்புரம் தாலுகா,
தெ.ஆ. மாவட்டம்.

138. சிறுவர் மன்றத்தினர்,
வள்ளலார் சிறுவர் சங்கம்,
67, புதுப் பிள்ளையார் கோவில் தெரு,
மேல்புவனகிரி— 608 601.

139. இ. ரா. செல்வராஜ் (6008),
கடம்பூர்—627 714.

140. ஏ. ரசித்,
த/பெ. அலவி,
விக்டோரியா காட்டேஜ்,
கால்வாய், கோத்தகிரி.

141. வ. லாவண்யா (12887),
சி—3, ப. ஆதி குடியிருப்பு,
மக்கிணம்பட்டி போஸ்ட்,
பொள்ளாச்சி—642 003.

142. எஸ். சுப்பிரமணியன் (2976),
த/பெ. சண்முகசுந்தரம்,
வணிகவியல் பேராசிரியர்,
வ.சே.இ. அரசினர் கலைக் கல்லூரி,
பூலாங்குறிச்சி—622 413.

143. C.L. சரவணன் (706),
50, தெற்கு பெருமாள் மேஸ்திரி வீதி,
மதுரை—625 001.

144. கே. சௌரி,
எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமம்,
சட்டநாத் ஹோம்ஸ்,
புரபஸர் காலனி,
கிழக்கும் தாம்பரம், சென்னை—59.

145. வி. லலிதா (3690),
1/40, அக்ரஹாரம் தெரு,
கனியூர், உடுமலைப்பேட்டை தாலுகா,
கோவை மாவட்டம் 638 203.

146. என். நாராயணன்,
த/பெ. என். நடராஜன்,
பஞ்சுபட்டு பெரிய தெரு,
பெரிய காஞ்சி 631 502.

147. கே. உஷா,
சிவகங்கை

148. ஏ. ஆர். ஆனந்த் (421),
5, அம்பாள்புரம் முதல் தெரு,
காரைக்குடி—623 002.

149. ஆர். ராஜா (1006),
32, வைத்தியராமய்யர் தெரு,
சென்னை—17.

150. பழ. சாந்தி (5939),
புதுமனை 2 ஆம் தெரு,
இராயவரம்—622 506

151. A.L. விஜி (397),
2, தாமஸ் ரோடு,
நரிமேடு, மதுரை.

152. எம். செல்வராஜ்,
S/o G. முத்துராமலிங்கம்,
ஆண்டிவயல்,
வா. புதூர் போஸ்ட்—622 416.



பெர்னாட்ஷா மணிமொழிகள்

1 பழமை என்னும் ஒரே காரணத்திற்காக எதற்கும் மதிப்பு தரும் வழக்கம் அடியோடு மறைய வேண்டும்.

2 செல்வத்தை உண்டாக்காதவனுக்கு அதை அனுபவிக்க உரிமை கிடையாது. அது போன்றே இன்பமும்.

3 விஞ்ஞான வளர்ச்சிக்காக, பட்சிகளையும், விலங்குகளையும் கொல்லுகின்ற கோரக் காட்சிகளைக் கண்டு உள்ளம் வருந்துகிறேன்.

4 குழந்தைகளையும் தேசச் சொத்துகளாக கருதி அவர்களைப் பேண வேண்டும்.

5 நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும்.

6 பயமே, மனிதனைப் போரிடச் செய்கிறது. போருக்கு மூல காரணம் பயம்தான்!

7 பிறரைச் சீர்திருத்தும் கடமையைவிட தன்னைச் சீர்திருத்துவதே முதற் கடமை.


8 உண்மையான அறிவின் வேலை, நகைச்சுவையுடன் இணைந்ததே.

9 கல்வி என்பது, ஒருவருடைய இளமையோடு மட்டும் தொடர்புடையது அன்று.

தொகுப்பு: கே. நரசிம்மன் (7378), ஒசூர்.

வாய்த்துடுக்கு

அரசு மணிமேகலை



"டேய் குணளா.... அங்கே பாருடா!"

நம்பி கையைக் காட்டிய திசையில், குணளன் பார்த்தான்.

"என்ன நம்பி? யாரைக் காட்டறே?" குணளன் குழப்பத்தோடு பார்த்தான்.

"சரியான இவன்டா நீ! கண்ணும் தெரியாது, ஒரு மண்ணும் தெரியாது. சரியாப் பாரு! சாக்கடை ஓரத்திலே....."

குணளன் கூர்ந்து பார்த்தான். சாக்கடையை ஒருவன் சுத்தப்படுத்திக் கொண்டிருக்க, மற்றவன் அவனுக்குத் துணையாக நின்று கொண்டிருந்தான். பக்கத்தில் ஒரு சின்னப் பையன் நின்றிருந்தான்.

கூர்ந்து பார்த்த குணளன் மகிழ்ச்சியாகக் கத்தினான்.

"அட நம்ம வேலு..... நம்ம கிளாஸ் வேலு....."

அவன் ஆரவாரத்தைப் பார்க்கப் பார்க்க, நம்பிக்கு வயிறு பற்றி எரிந்தது.

"ஆமாம்! நம்ம கிளாஸ் வேலுவே தான். என்ன? குணளா.... அவன் பெரிய இந்தத் தொழில் பண்ணிக்கிட்டிருக்கான். நீ போயி மாலையைப் போட்டு கைதட்டு!"

"என்ன நம்பி? இவ்வளவு கோபமாப் பேசறே?"

"பின்னே என்னடா? அவன் சாக்கடையைக் கிளறிக்கிட்டு இருக்கிறன். நீ என்னமோ பெரிய கலெக்டர் நிக்கற மாதிரி, வேலு, வேலு, வேலுன்னு துடிச்சுப் போறே. ரொம்ப அவசியம் — நீ இப்போ ஓடிப் போயி, அவனைத் தெரிஞ்சவனுக் காட்டிக்கிட்டுப் பேசிக் குலாவறது....."

"ஏன் நம்பி? கலெக்டரா இருந்தா ஒசத்தி. சாக்கடையைச் சுத்தம் பண்றவனா இருந்தா மட்டமா?"

"ஐயோ! அவன் மட்டமே இல்லப்பா! கலெக்டர்தான் மட்டம். சாக்கடைக்காரன் ரொம்.....ப..... ஒசத்தி."

கிண்டலாகப் பழித்துக் காட்டினான் நம்பி. குணளன் பெயருக்கு ஏற்பவே, குணம் நிறைந்தவன்.

அமைதியாகக் கூறினான். "கலெக்டரும் மனுஷன்தான். வேலுவும் மனு

ஷன்தான். அதை நீ புரிஞ்சுக்கோ நம்பி! அவன் அப்பாவைப் போல சிலர் இந்தத் தொழிலைச் செய்யற திலைதான், இந்த நகரம் நாற்றம் எடுக்காமே இருக்கு. அப்பாவுக்குத் தானே வேலு உதவுறான்? அவன் ஒண்ணும் திருடன் இல்லையே.... கொலைகாரன் இல்லையே! நம்ம கிளாஸ்மேட்டுதானே! நான் நிச்சயம் போய்ப் பேசுவேம்ப்பா.''

குணாளனை வெறுப்போடு நோக்கினான் நம்பி. ''ம்ம்! இந்தக் குணாளன் சரியான மடையன். நல்ல சாதியிலே பொறந்துட்டு இவன் புத்தி ஏன் இப்படிப் போவுது? இந்தக் கோட்டையூர்லேயே இவங்கப்பா பணக்காரரு. புள்ளை புத்தி எப்படிப் போகுது பாரு?''

நம்பி மனத்திற்குள் குணாளனைத் திட்டிக் கொண்டான்

'என்ன செய்யறான் பார்க்கலாம்!' என்று நினைத்தவனாக அந்த இடத்திலேயே நின்று கொண்டான்.

குணாளனைப்பார்த்தவேலுமகிழ்ச்சியடைவதையும், ஆசையுடன் பேசுவதையும், அவன் அப்பாவிடம் கூட குணாளன், ஏதோ பேசுவதையும், அவர் சாக்கடைக்குள் நின்றவாறே, குணாளனிடம் மரியாதையாக, ஏதோ சில வார்த்தைகள் பேசுவதையும் பார்க்கப் பார்க்க நம்பிக்குப் பச்சை மிளகாயை அரைத்து உடம்பெங்கும் பூசியதைப் போல இருந்தது.

''என்ன இந்தக் குணாளன்? தெருவிலே போறவங்க வருகிறவங்க எல்லாம் எப்படி வேடிக்கை பார்க்கிறுங்க? இவனுக்கு அவமானமாவே இருக்காதா? ச்சே'' — அலுத்துக் கொண்டான்.

குணாளன் மேலும் சில நிமிடங்கள் வேலுவோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, பிறகுதான் கிளம்பினான்.

அவன் போய்விட்டான் என்பதை நிச்சயம் செய்து கொண்ட பிறகே, நம்பி சாலையைக் கடந்து வேலு இருக்கும் பக்கம் வந்தான்.

வேலு தன் அப்பா தந்த கூடையை எடுத்துப் போய், சாலை ஓரத்தில் வைத்துவிட்டு, அவர் கேட்ட நீளக் கம்பை எடுத்து வந்தான்.

தன் மீது வேலுவோ, கொம்போ படாதபோதும், நம்பி வேண்டுமென்றே வம்புக்கு இழுத்தான்.

''என்னடா வேலு? கொம்பு எடுத்துட்டுப்போறவனுக்குஒருஜாக்கிரதை இருக்க வேண்டாம்? என் மேலே இடிச்சுட்டுப் போறியே.... கொழுப்பா?'' — நம்பி அதட்டினான்.

''அடடே! நம்பி.... நீ எங்கே நம்பி இந்தப் பக்கம்? கொம்பு உன் மேலே படலியே.....''

''நீ ரொம்ப கண்டவன்! கொம்பு என் மேலே பட்டதுன்னு நான் சொல்றேன். நீ இல்லைன்னு....''

முறைத்தான் நம்பி.

''ஐயையோ. நான் படலைன்னு நினைச்சுக்கிட்டேன். பட்டுட்டுதா? சாரிப்பா நம்பி. மன்னிச்சுக்கோ.''

''பெரிய இங்கிலீஷ் துரை.... சாரியாமே சாரி.... பண்றது சாக்கடை உத்தியோகம். பேசறது இங்கிலீசு...''

வேலுதுடிதுடித்துப்போனான். அவமானத்தில் தலை குனிந்தது. கூடப் படிக்கும் நண்பன் என்று கூட நினைக்காமல் என்ன பேச்சு பேசுகிறான் இந்த நம்பி?

அவமானத்தில் வேலு கண்களில் கண்ணீர் தளும்பியது.

''ஒனக்கெல்லாம் ஒரு படிப்பு எதுக்கு? பேசாமே நீயும் சாக்கடையிலேயே கிடக்கலாம்.''

''ஏன் நம்பி? நான் படிச்சா ஒனக்கு என்ன கஷ்டம்? நீ ஏன் என்னைப் படிக்க வேண்டாங்கறே?''

''ஆமாம். இவரு பெரிய துரை... இவரு படிச்சா எனக்குக் கஷ்டமாமே! திமிரைப் பாரு!''

''நானு சொன்னேன்? நீதானே சொன்னே படிப்பு எதுக்குன்னு?''


மென்மையாகத்தான் சொன்னான் வேலு....

''கொஞ்சம் இருநம்பி.... எங்கப்பா கிட்டே இந்தக் கொம்பைக் கொடுத்துட்டு வந்துடறேன்....''

சாதாரணமாகச் சொல்லிவிட்டு நடந்தான் வேலு.

திரும்பி வந்த வேலு கன்னத்தில் ஓங்கி அறைந்தான் நம்பி.

''நீ பெரிய இவன்! நீ போயி, கொம்பைக் கொடுத்துட்டு வர்ர



வரைக்கும் நான் நிக்கணுமா? நான் என்னடா உன் வீட்டு வேலைக்காரனா?"

பொரிந்து தள்ளினான் நம்பி. அவன் வேலுவைத் தன் கண் முன்னாலேயே அடித்ததைப்பார்த்துக்கொண்டிருந்த வேலுவின் தந்தை ஓடி வந்தார்.

"அப்பா! அப்பா! நில்லுங்கப்பா! இவன் யாரோ இல்லே. என் கிளாஸ் மேட்டு."

'நாங்கள் அடித்துக் கொள்வோம். அணைத்துக் கொள்வோம். எங்கள் விருப்பம். பெரியவர்கள் தலையிட வேண்டாமே' என்கிற ஆதங்கம் தெரிந்தது.

நம்பி திமிராக நடக்கத் தொடங்கினான். விஷயம் இப்படித்தான் இருக்கும் என்று ஓரளவிற்கு ஊகித்துவிட்ட வேலுவின் தந்தை, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

பாவம்.... வேறு என்னதான் செய்ய முடியும் அவரால்?

வேலு பொருட்படுத்தவே இல்லை. நம்பி அடித்ததைப் பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

"அடடே! நீங்க ஏம்ப்பா அழுறீங்க? அவன் என் கிளாஸ்மேட்டுப்பா! இன்னிக்கு அவன் அடிப்பான். நாளைக்கு நான் அடிப்பேன். இதெல்லாம் சகஜம்ப்பா!"

என்று சமாதானம் சொன்ன வேலுவைக் கலங்கிய கண்களால் வெறித்துப் பார்த்தார்.

"நாளைக்கு நீ அடிப்பியா? முடியாதுடா மகனே! முடியாது! அடி படறதுக்கே பொறந்தவங்க நாமதாண்டா! அவங்க அடிக்கவே பொறந்தவங்க."

விரக்தியோடு சிரித்துக் கொண்டார்.


* * * * *

மாணவர்கள் வேக வேகமாகத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தார்கள். வேலுகிடுகிடுவென்றுஎழுதிக்கொண்டிருந்தான். குணாளனும்தான்....

நம்பி 'திருதிரு'வென்று விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

படிக்கிற நாளில் ஏதாவது படித்திருந்தால்தானே? ஊரைச் சுற்றவும், மேல் சாதி, கீழ்ச் சாதி என்று கிண்டல்

ஒரே கோட்டில்



செய்யவும்தானே நாட்கள் சரியாக இருந்தன?

வேலு எழுதுவதைப் பார்க்கப் பார்க்க இன்னும் வெறுப்பாக இருந்தது.

''அப்பனோட சாக்கடை கிளறவும் முடியுது. கிளாஸ்லே விறுவிறுன்னு எழுதவும் முடியுதா? பெரிய்ய ஆளு தான். மூஞ்சியையும், மூக்ரையையும் பாரு.....''

அவன் படித்திருக்கிறான். அதனால் எழுதுகிறான் என்று நினைக்க மனம் வரவில்லை. பார்த்து எழுதுகிறானோ என்றுதான் சந்தேகமாக இருந்தது.

அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் நம்பி. ''அங்கே என்னடா வேடிக்கை? ஒழுங்காப் பரிட்சை எழுதேண்டா....''

ஓர் ஆசிரியர் அதட்டிவிட்டுப் போனார். என்ன எழுதுவது? எதை எழுதுவது? ஏதாவது படித்திருந்தால் தானே எழுதமுடியும்? ஏழாம்வகுப்புப் பரிட்சையாகவே இருந்தாலும் கூட...

நம்பி திருதிருவென்று விழித்தபடி மேலும் பத்து நிமிடங்கள் உட்கார்ந்திருந்தான். பிறகு தாளை மடித்து, பெயரை எழுதி ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு, தயங்கியபடியே வெளியில் வந்தான்.

வேலுவின் கண்கள் அனுதாபத்தோடு அவன் பின்னே நோக்கின.

* * * * *

''என்னடா இவ்வளவு சீக்கிரம் பள்ளிக்கூடத்துலேருந்து வந்துட்டே? நல்லா எழுதலையா பரிட்சை? படிச்சிருந்தாத்தானே?''

அப்பா வேறு அதட்டினார்.

''உடம்பு சரியில்லேப்பா'' முனகினான் நம்பி.

''அது சரி. பரிட்சைன்னா உடனே உடம்புக்கு வந்துடும். திருட்டுப் பயலே....''

அதட்டிவிட்டு வெளியில் போகக் கிளம்பியவர், திரும்பவும் கிட்டே வந்தார்.

''ஏண்டா தடிமாடு? காலையிலே கடைப் பையன்கிட்டே நூறு ரூபாய் கொடுத்துடுன்னு சொல்லிட்டுத் தானே வெளியிலே போனேன். கொடுத்தியா நீ? அந்தச் சின்ன வேலை கூட ஒனக்கு மறந்து போயிட்டுது.''

அப்பா பாட்டுக்குச் சரமாரியாகத் திட்டிக் கொண்டே இருந்தார்.

நம்பிக்குத்தன் பொறுப்பற்றகுணம் குறித்து, முதன்முறையாக ஓர் எரிச்சல் வந்தது.

ச்சே! எப்படி மறந்து போனேன்? அப்பா அத்தனை முறை சொன்னாரே!

அப்பாவுக்கு உதவியாக லீவு நாட்களில் சாக்கடை வேலைக்குப் போகிற வேலு......

அத்தனை வேலைகள் இருந்தும் படிப்பிலும் மணியாக இருக்கிற வேலு......

ம்ம்! நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன்? ஏன் படிப்பு வரவில்லை? ஏன் கெட்டவனாகத் திரிகிறேன்?

எரிச்சலோடும், குழப்பத்தோடும் அவன் மாலை ஐந்து மணி அளவில் கடைப் பையனைத் தேடிக் கொண்டு போனபோது அந்தப் பயங்கரம் நிகழ்ந்து விட்டது....



எதிரே வந்த கார் மீது, இவனாகவே குழப்பத்தில் போய் முட்டிக் கொண்டான்.

நம்பி 'ஹா....' என்கிற பெருங் கூச்சலோடு கீழே சாயவும், வேலு உரத்த குரலில் கத்திக் கொண்டு அவனை நோக்கி ஓடி வரவும் சரியாக இருந்தது.

* * * * *

மருத்துவ மனையில் படுத்திருந்தான் நம்பி. இரத்தம் இறங்கிக் கொண்டிருந்தது.

இலேசாகத்தான் கண்ணைத் திறக்க முடிந்தது. "நம்பி! நம்பி!" என்று ஆர்வத்துடன் அழைத்தார்கள் குணாளனும், வேலுவும்.

டாக்டர் ஓடி வந்தார். நம்பியின் தந்தையைப் பார்த்து, மகிழ்ச்சிக் குரலில் சொன்னார்.

"வெரி குட்! அபாய கட்டத்தைத் தாண்டிட்டான் உங்க மகன். இதோ பார்! இந்தப் பையன்தான் உனக்கு இரத்தம் கொடுத்தான். இல்லேன்னா நீ பொழைச்சிருக்கவே முடியாது..."

உடம்பெங்கும்கட்டுகளோடுகிடந்த நம்பி கஷ்டப்பட்டு, கண்ணைத் திறந்து பார்த்தான்.

வேலு.....!

வேலுவா இரத்தம் கொடுத்தது? பளீர் என்று அவன் கன்னத்தில் முன்பு அறைந்த சத்தம் இப்போதும் தெளிவாகக் கேட்டது.....

வேலு.... வேலு....'

"என் சாதி இரத்தமும், அவன் சாதி இரத்தமும் ஒண்ணுதானா? என்ன திமிர் படைச்சேன்? அவன் சாதியை மட்டம் தட்டிப் பேசினேன்...'

ஆனாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமே, வேலு சரியான நேரத்திலே ஒத்தாசை பண்ணியிருக்கானே....

நம்பி நெகிழ்ச்சியோடு வேலு கைகளைப் பற்றிக் கொண்டு அழத் தொடங்கினான்.

* * * * *

ஒரு மாதம் பொறுத்து, நம்பி மருத்துவமனையிலிருந்து வெளி வந்த போது, சாதித் திமிர் சுத்தமாக ஒழிந்து போயிருந்தது.



மேடையில் பாரதியார்

கிறிஸ்டியன் டேனியல் (6401)

(பாரதியார் மீண்டும் இந்தியாவை, தமிழகத்தைக் காண மண்ணுலகிற்கு வருகிறார். தமிழ்நாட்டில் ஒரு சாலை வழியாக நடந்து செல்கிறார். மாலை மயங்கும் நேரமாதலால் ஒருவரும் கவனிக்கவில்லை. சாலையில் மக்கள் வந்து கொண்டும், சென்று கொண்டும் இருக்கிறார்கள்.)

பாரதியார்: என்ன! எங்கு பார்த்தாலும் ஹிப்பிகள்! சூட்டு, கோட்டுகள்! பரங்கித் தலைகள் இன்னும் இந்தியாவை விட்டு வெளியேறவில்லையா?

(அவ்வழியே செல்லும் ஒருவரிடம் விசாரிக்கிறார்.)

பாரதியார்: ஐயா! இந்தியா இன்னும் விடுதலை அடையவில்லையா?

வழிப் போக்கர்: (அவரை ஏற இறங்கப் பார்த்து) யோவ்! உமக்கு அறிவிருக்கா? ஓந்தியா சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 38 வருஷம் ஆகுது....

பாரதியார்: (அவரை மகிழ்ச்சியுடன் பிடித்துக் கொண்டு)

ஆடுவோமேபள்ளுப்பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோம் என்று ஆடுவோமே.

நான் அன்று பாடியது வீணாகவில்லை. வீணாகவில்லை. என் தாய்த் திருநாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. சுதந்திரம் அடைந்துவிட்டது.

(வழிப் போக்கர் பாரதியாரைப் பார்த்துக்கொண்டே நிற்க, பாரதியார் அங்கிருந்து ஒரு தெருவின் வழியாகச் செல்கிறார். அங்கே சில பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைக் காண்கிறார். அவரிடம் ஒரு பிச்சைக்காரன் வருகிறான்.)

பிச்சைக்காரன்: ஐயா.... சாமீ.... தர்மதுரை..... சாப்பிட்டு மூன்று நாளாச்சுங்க. ஏதாவது கொடுங்க சாமீ.

பாரதியார்: ஐயகோ! என் செய்வேன்! என் இனிய பாரதத் தாயின் புதல்வர்களுக்கு உண்ண உணவில்லையே! ஓ, பாரத தேசமே! சுதந்திரம் பெற்றுமா உனக்கு இந்த அவல நிலை? எங்கு பார்த்தாலும் வறுமை. உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை;

வறுமைகள் இன்னும் ஒழியவில்லையே! நான் அன்று,

'தனியொருவனுக்கு உண
வில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'

என்று பாடினேனே. இங்கு உண்ண உணவில்லாது மக்கள் தவிக்கின்றனர். நான் பாடியது வீணாகி விட்டதே.

(அடுத்த தெருவிற்குச் செல்கிறார். அங்கே அடிபட்ட ஒருவனைத் தூக்கி வருகிறார்கள்.)

பாரதியார்: ஐயா! இவனுக்கு என்ன? ஏன் இரத்தம் வழிகிறது?

ஒருவர்: பக்கத்துத் தெருவில் சாதிச் சண்டைங்க. அடிதடியில இவனையும் அடிச்சிட்டாங்க. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறோம்.

பாரதியார்: சாதி..... சாதி.... சாதி.... சாதிகள் இன்னும் ஒழியவில்லையா? சுதந்திரம் பெற்றுமா சாதிச் சண்டைகள்? இன்னுமா ஏற்றத் தாழ்வுகள்? ஐயகோ! என் பாரதத்தின் புத்திரர்கள் சாதியின் பெயரால் அடித்துக் கொள்கிறார்களே! ஓ, பாரத தேசமே! என் தாய்த் திருநாடே! உனக்கேன் இந்த நிலை? அன்று நான்,

'சாதிகள் இல்லையடி பாப்பா'

என்று பாடினேனே. மக்கள், அதை மறந்துவிட்டார்களே. நான் பாடியது வீணாயிற்றே!

(பாரதியார் வேறொரு தெருவிற்குச் செல்கிறார். அங்கே ஓர் இடத்தில் வண்ண விளக்குகள், ஒலி பெருக்கிகள், வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு மேடையில் பாரதியார் பிறந்த நாள் விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேடையில் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார்.)

மேடையில் தலைவர்: ..... இந்த பாரதியார் ஒரு புரட்சிக் கவிஞர். மக்கள் கவிஞர். ஏழைகள் உணவில்லாமல் தவிப்பதைக் கண்டு அவர் மனம் துடிக்கிறது. தன் பாட்டிலே,

'தனியொருவனுக்கு உணவில்லை
யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'

என்று முழங்குகிறார்.

சாதிகளை, சாதிச் சண்டைகளைக் கண்டு அவர் மனம் வருந்தி,

'சாதிகள் இல்லையடி பாப்பா'

என்று வீறு கொண்டு பாடுகிறார். பாட்டால் முரசு கொட்டிய பாரதியின் கனவுகளை நனவாக்குவோம்.

(பாரதியார் வந்து பேச்சாளரைத் தள்ளிவிட்டுப் பேசுகிறார்.)

பாரதியார்: பாரதியின் கனவுகளை நனவாக்குவோம், நனவாக்குவோம் என்று முழங்குகிறீர்கள். இப்படி வெட்டிப் பேச்சுப் பேசுவதைவிட சாதிகளை ஒழிக்க முயலுங்கள். இப்படி ஏராளமான பணத்தைச் செலவழித்து விழா நடத்துவதைவிட இந்தப் பணத்தை உண்ண உணவில்லாமல் தவிக்கும் ஏழைகளுக்குக் கொடுங்கள். நான் பாடியது எல்லாம் வீணாகி விட்டதே! மக்கள் அவற்றை மறந்து விட்டனரே!

'நெஞ்சு பொறுக்குதில்லையே-இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து
விட்டால்'

இந்த மக்கள் திருந்தவே மாட்டார்களா! ஓ, பாரதமே! என்று நீ உண்மையான சுதந்திரத்தைப் பெறப் போகிறாய்?

(பாரதியார் மேடையிலிருந்து கீழே குதித்து வேகமாக ஓடி மறைகிறார்.)

தலைவர்: பாரதியார் வேஷம் போட்டுக் கொண்டு மேடையிலே வந்து உளறுகிறது இந்தப் பைத்தியம்! நல்ல பைத்தியம்!


1. தன்மானம் காக்காதவன் பிறர் மானம் காப்பான்.
2. பல் உள்ளவன் பலகாரம் தின்ன மாட்டான்.
3. பூட்டிய சிறைக்குள் மாட்டிய கைதிகள் விடுதலைக்குப் பின் வெந்து மடிவர்.
4. ஆடு கத்தும் மாதம், ஆண்டுக்கு ஒருமுறை வரும்.
5. கவ்விப் பிடிக்கும்; நாய் அல்ல. பிடித்தால் விடாது; உடும்பு அல்ல.

விடை: 1. பருத்தி; 2. சீப்பு; 3. தீக்குச்சிகள்; 4. மே; 5. கிளிப்

— காந்திகுமார் (10802), திருச்சி—2

கெட்டிக்காரன்

—வி.ர.வசந்தன்



சுந்தரத்தின் மீது கோபாலுக்கு ஓர் இனந்தெரியாத வெறுப்பு ஏற்பட்டிருந்தது. வகுப்பில் எல்லோரிடமும் அன்புடனும் ஆதரவுடனும் பழகும் சுந்தரத்தை கோபால் ஒரு விரோதியைப் போல் பாவிப்பது குறித்து மற்ற மாணவர்கள் எல்லோரும் பெரிதும் வியப்படைந்தனர்.

கோபாலின் உற்ற நண்பனை அஸ்வினிடம் சுந்தரத்திற்குப் புதிதாக ஏற்பட்டிருந்த நட்புத்தான் அந்த வெறுப்புக்கு காரணமாயிருக்க வேண்டும். கோபாலும் அஸ்வினும் பாடங்களில் ஒருவருக்கொருவர் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதும், சேர்ந்து படிப்பதும் வழக்கமாயிருந்தது. ஆனால், இப்போதெல்லாம் சுந்தரம் அஸ்வினோடு அதிக நேரத்தைப் பகிர்ந்து கொள்கிறான். அஸ்வினும் முன்பு போல கோபாலோடு சேர்ந்து படிக்க வருவதில்லை.

அதோடு, ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்கு வராத சுந்தரம் ஒவ்வொருவரிடமும் போய் வகுப்பில் நடத்திய பாடங்களைத் தெரிந்து கொண்டு திறமையான மாணவனாக விளங்குகிறானே என்ற பொறாமையும் சேர்ந்து கொண்டது.

அன்று அஸ்வின் கோபாலோடு சேர்ந்து படிக்க வருவதாகக் கூறியிருந்தான். ஐந்து மணிக்கு வருவதாகச் சொன்னவன் மணி ஆறாகியும் வரவில்லை. காத்திருந்து, பொறுமை இழந்தான் கோபால்.

ஒருவழியாக அஸ்வின் வந்ததும், ''என்ன அஸ்வின், உனக்காக எவ்வளவு நேரந்தான் காத்திருக்க முடியும்....? நானாவது தனியா படித்திருப்பேனே'' என்று கோபத்தோடு அவன் மீது பாய்ந்தான்.

''தேர்வு வருதில்லே அதுதான். சுந்தரம் கணக்கிலே ஏதோ சந்தேகம்னு சொன்னான். எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிக் கொடுத்துட்டு வர்றேன். நாளையிலே இருந்து சரியா வந்துடறேன்'' என்றான் அஸ்வின்.

இதைக் கேட்டதும் கோபாலின் கோபம் இன்னும் அதிகமாயிற்று. ''சுந்தரத்துக்கும் மந்திரத்துக்கும் கணக்கு சொல்லிக் கொடுக்க இதுவா நேரம்...? தேர்வுக்கு இன்னும் ஒரு மாசம்கூட இல்லே, ஒழுங்காப் படிக்காட்டி நாமதான் மார்க் குறைவா வாங்கணும்.... அது சரி, ஒழுங்கா ஸ்கூலுக்கு வராத அவனுக்கு நீ ஏன் உதவி பண்ணணும்?'' என்று எரிந்து விழுந்தான்.

''அவன் ரொம்ப ஏழைடா கோபால். அவனோட அப்பா கூலி வேலைக்குப் போறாராம். அவருக்கு அடிக்கடி உடம்புக்கு வந்துடுது. அவர் வேலைக்குப் போகாத நாளிலே சுந்தரம்



உலகில் உயர்ந்த நீர்!

ஒரு ஞானியிடம் ஐந்து இளைஞர்கள் சென்று, 'எங்களை உங்கள் சீடர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டினர்.

'நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்குச் சரியான விடை சொல்பவரையே சீடனாக ஏற்றுக் கொள்வேன்' என்றார் ஞானி.

"உலகில் எல்லாவற்றையும் விட உயர்ந்த நீர் எது?" என்று ஞானி கேட்டார்.

"கங்கை நீர்" என்றான் ஒருவன்.

"முதல் முதலாக விழும் மழைத் துளி" என்றான் அடுத்தவன்.

"அதிகாலையில் இலைகளில் பளபளக்கும் பனித்துளி" என்றான் மூன்றாமவன்.

"வெகுநாள் வரை பிரிந்திருந்த மகனைக் கண்ட தாயின் ஆனந்தக் கண்ணீர்" என்றான் நாலாவது இளைஞன்.

ஐந்தாவது இளைஞன் பேசாமல் நின்றான். "நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார், ஞானி.

"நான் முழுதும் சுயநலம் பாராமல் உழைக்கிறானே, அவனுடைய வியர்வை நீர்தான் எல்லாவற்றையும் விட உயர்ந்தது என்று நினைக்கிறேன்."

இந்தப் பதிலைக் கேட்டதும் ஞானி மகிழ்ச்சி அடைந்து அவனையே சீடனாக ஏற்றுக் கொண்டார்.

— எஸ். மோகனா (13,262),
சிவகங்கை.

தான் வேலைக்குப் போகணுமாம். அது தான் அவன் சில நேரம் ஸ்கூலுக்கு வர முடியறதில்லே..... பாவம், அவன் படிக்கணும்னு எப்படி ஆசைப்படறான்னு தெரியுமா?" என்ற அஸ்வினின் குரல் நெகிழ்ந்து போய் இருந்தது.

"சரி, சரி. நாம படிக்கலாம் வா" என்று அவனை அழைத்துப் போனான் கோபால்.

படித்து முடித்துவிட்டு அஸ்வின் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போது, கோபால் அவனிடம், "நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. அந்த சுந்தரத்தைப் போன்ற பசங்களோட எந்தப் பழக்கமும் வச்சுக்காதே. அது நல்லதில்லே" என்றான்.

"ஏன்?" என்று வியப்புடன் கோபாலைப் பார்த்தான் அஸ்வின்.

"ஏன்னு நீயே யோசிச்சுப் பாரு. உன்னோட அப்பா எவ்வளவு பெரிய பணக்காரர். நீ போய் அந்தக் கூலி வேலை செய்கிற பையனோட பழக்கம் வச்சுகிட்டு இருக்கியே. அதைத்தான் சொன்னேன்" என்றான் கோபால்.

அவன் சொல்லியதைக் கேட்டு வருத்தமடைந்தான் அஸ்வின்.

"ஏழைன்னா என்ன கோபால், படிக்கணும்கற ஆர்வம் அவங்கிட்ட எப்படி இருக்குத் தெரியுமா? நம்மைப் போல் வாய்ப்பும் வசதியும் இருந்திருந்தா, இப்படிப் பாடம் கேட்க, எங்கிட்டே வந்திருக்க மாட்டான். நீயும் இப்படிப் பேசமாட்டே..... வசதியில்லாததாலே ஒருத்தரை வெறுக்கறது தப்புன்னு எனக்குத் தோணுது" என்றான்.

"சரி, பாடம் தெரியல்லேன்னா அதைப் பள்ளிக்கூடத்திலேயே கேட்டுக்கலாமே! வீடு வரைக்கும் புஸ்தகத்தைத்தூக்கிகிட்டுவரணுமா? இந்த மாதிரிப் பசங்களுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தாப் போதும். அப்புறம் நம்மளை விட மாட்டாங்க....." என்று வெறுப்புடன் சொன்னான் கோபால்.

"நான்தான் பொறுமையா சொல்லித் தரலாமேன்னு வீட்டுக்கு வரச் சொன்னேன். இது நான் அவனுக்குச் செய்கிற ஒரு சிறு உதவி. அதுவே அவனுக்குப் பெருசா இருக்க..

அதோட எப்போதும் நம்முடைய திறமையாலே இந்த உலகத்திலே வாழ்ந்திடலாம்னு நினைக்காதே கோபால்... நமக்குப் பிறருடைய உதவி சில நேரம் தேவைப்படத்தான் செய்யும்'' என்றான் அஸ்வின்.

அதைக் கேட்டுக் கோபமடைந்தான் கோபால். அவன் அஸ்வினைப் பார்த்து, ''சரி, உன்னோட பிரசங்கத்தையெல்லாம் அந்தச் சுந்தரத்தோடேயே வெச்சிக்கோ'' என்று இரைந்தான்.

அஸ்வின் மௌனமாகத் தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் மனம் கோபாலிடம் இருந்த அகம் பாவத்தையும் பிறரை அலட்சியமாக நினைக்கும் குணத்தையும் எண்ணி வருந்தியது.

ஒரு வாரமாகி இருக்கும். ஒரு நாள் காலையில் கோபால் எழுந்தபோது உடம்பெல்லாம் ஒரே களைப்பும் அசதியுமாயிருந்தது. காய்ச்சல் அடித்தது. சாதாரணக் காய்ச்சல்தான் என்று நினைத்தனர் அவனது பெற்றோர். ஒரு வாரமாகியும் காய்ச்சல் இறங்கவில்லை. டாக்டர் பரிசோதித்துவிட்டு அது 'டைபாயிட்' என்றும் குறைந்தது ஒரு மாதமாவது படுக்கையில் ஓய்வெடுத்தால்தான் குணமாகும் என்றும் கூறிவிட்டார்.

கோபாலுக்கு, என்ன செய்வது என்று தெரியவில்லை. வருட இறுதித் தேர்வுக்கு இன்னும் ஒரு மாதமே இருந்தது. இந்தக் கடைசி நேரத்தில்தான் முக்கியமான பாடங்களை நடத்துவார்கள். பரீட்சை நேரத்தில் இப்படி ஆகிவிட்டதே என்று குழம்பினான் அவன்.

யாராவது வகுப்பில் நடத்தும் பாடங்களை விளக்கிக் கூறிக் குறிப்பெடுத்துக் கொடுத்தால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான். ஆனால், யார் வருவார்? டைபாயிட் தொற்றிக் கொள்ளுமே! அத்துடன் எல்லோரும் பரீட்சைக்குத் தங்களைத் தயார் செய்வதிலேயே மும்முரமாக மூழ்கி போயிருப்பார்களே?

காய்ச்சலின் கடுமையினாலும் குழப்பமான சிந்தனைகளாலும் சோர்ந்து கண் மூடிக்கிடந்த கோபாலை சுந்தரத்தின் குரல் திடுக்கிட்டு விழிக்கச் செய்தது.

''கோபால்'' என்று அழைத்துக் கொண்டு வந்தான் சுந்தரம்.

''என்ன சுந்தரம் திடீர்னு....'' என்று கேட்டவாறு எழ முயன்ற கோபாலை, தோளைப் பிடித்துப் படுக்க வைத்த சுந்தரம், 'உனக்கு டைபாயிடுன்னு கேள்விப்பட்டேன். அதுதான் வகுப்பில் நடந்த பாடங்களைச் சொல்லித் தந்துட்டு, நோட்ஸும் எழுதித் தரலாம்னு வந்தேன்'' என்றான்.

''அஸ்வின்.....'' என்று ஏதோ கேட்க வாயெடுத்தான் அவன்.


''அஸ்வின் நான் போறேன்னுதான் சொன்னான். நான்தான் வேண்டாம்னுட்டு வந்தேன். உனக்கு நான் விளக்கிச் சொல்லித் தந்தா நான் படிச்ச பாடங்கள் இன்னும் எனக்கு நல்லா மனசிலே பதிஞ்சுடும். அதுக்காகத்தான்'' என்று புன்னகைத்தான் சுந்தரம்.

பின் கோபாலுக்கு அன்று பள்ளிக் கூடத்தில் நடத்திய பாடங்களை விளக்கிக் கூறினான். நோட்டுப் புத்தகத்தில் குறிப்புகள் எழுதிக் கொடுத்தான். பிறகு, மறுநாள் வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றான். அது போலவே ஒவ்வொரு நாளும் மாலையிலும் சுந்தரம் வந்தான்.

* * * * *

இப்போது கோபாலின் மனத்தில் புதிய சந்தேகம் உதயமாயிற்று. எத்தனையோ முறை நான் இவனுக்குப் பாடம் சொல்லித் தர மறுத்திருந்தும், ஏன் இவனாக வந்து நமக்கு உதவி செய்கிறான்? ஒருவேளை தானும் கெட்டிக்காரன்தான் என்று காட்டிக் கொள்வதற்காகத்தானோ? ஆனாலும் சுந்தரத்தின் உதவி அப்போது தேவையாக இருந்ததால், அதை அவன் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

காய்ச்சலில் இருந்து சுகமடைந்து கோபால் பள்ளிக்கு வர ஆரம்பித்த போது பரீட்சைக்குச் சில நாட்களே இருந்தன. அன்று அஸ்வினும் நண்பர்களும் அவனிடம் வந்து, ''கோபால், சுந்தரத்தை இப்பவாவது புரிஞ்சுக்க. நீ காய்ச்சலா இருந்தப்போ உனக்கு எப்படி உதவி செய்தான், பார்த்தியா?''



என்று கேட்டனர்.

அதைக் கேட்ட கோபால் கடகட வென்று சிரித்தான். பின், "அவன் எனக்குப் பாடம் சொல்லித் தரவா வந்தான்?" என்று திருப்பிக் கேட்டான்.

அதிர்ச்சியடைந்த அஸ்வினும் நண்பர்களும் "பிறகு எதற்கு வந்தானும்?" என்று கேட்க,

"நானும் கெட்டிக்காரன்தான்னு எங்கிட்டக் காட்ட நினைச்சிருப்பான். பிறகு ஏன் உன்னை வரவேண்டாம்னு சொல்லிட்டு இவனு வந்தான்?" என்று அஸ்வினைப் பார்த்தான் கோபால்.

நண்பர்கள் எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சற்று அமைதிக்குப் பின் அஸ்வின் "இந்த வருடம் சுந்தரம் பரீட்சை எழுத மாட்டான்.... அது உனக்குத் தெரியுமா?" என்றான்.

"ஏன்?" என்று திடுக்கிட்டான் கோபால்.

"இப்ப அவனுக்கு டைபாயிட்.... பரீட்சை நேரமா இருக்கே, கோபாலுக்கு நான் போய் உதவி செய்யறேன்னு வலிய வந்து உனக்கு உதவி செய்துட்டு பரீட்சை எழுத முடியாமெப் படுத்திருக்கிற சுந்தரம் கெட்டிக்காரனா? இல்லை, கொஞ்சம்கூட நன்றியில்லாமெ எடுத்தெறிஞ்சு பேசறியே, நீ கெட்டிக்காரனுன்னுதான் எங்களுக்குப் புரியல்லே" என்ற அஸ்வினின் குரலில் கோபமும் வருத்தமும் கலந்திருந்தன.

கோபாலுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. 'என் பொருட்டுத் தானே அவனுக்கு இந்த நிலை வந்தது? இவனையா நான் வெறுத்தேன்?' என்று நினைத்தபோது தன்னையும் அறியாமல் அவனுக்கு அழுகை வந்தது.

தன் நண்பர்களை எறிட்டுப் பார்க்க முடியாமல், உள்ளம் கூசி, குனிந்த தலை நிமிராமல் நின்றான் அவன்!

பிருந்தாவனக் கவியரங்கம்

பூஞ்சோலை

காற்றினில் கொடிகள் ஆடிடும்
களிப்பை நமக்கு ஊட்டிடும்!
ஊற்று நீரில் தாமரை
உல்லா சமாய் மிதந்திடும்!

சிட்டு அங்கே பறந்திடும்
சிங்காரப் பாட்டு பாடிடும்!
மொட்டு முல்லை விரித்திடும்
மணத்தை மெல்லப் பரப்பிடும்!

வண்டு அங்கே மொய்த்திடும்
வகை வகையாய்ப் பாடிடும்!
கொண்டு நன்கு சேர்த்திடும்
கொம்புத் தேனை கூட்டினில்!

கனிந்த பழங்கள் தொங்கிடும்
கிளிகள் அதனைக் கொத்திடும்!
இனிய இயற்கைக் காட்சிகள்
இதய மெல்லாம் இருந்திடும்!

குயிலும் அங்கே இருந்திடும்
'குக்கூக்' என்றே பாடிடும்!
மயிலும் அங்கே ஆடிடும்
மகிழ்ச்சி நமக்கு ஊட்டிடும்!

— பி. மைத்ரேயி கவிதா (11521),
தருமபுரி.



மின்னும் சின்ன நட்சத்திரம்

மின்னும் சின்ன நட்சத்திரம்
விண்ணனில் கண்ணைச் சிமிட்டுதே!
என்ன என்ன விந்தையோ!
எனக்கு ஒன்றும் புரியல்லே.

பூக்கள் கோடி வானிலே
பூத்துக் குலுங்கும் காட்சியோ?
பொன்னும் மணியும் வைரமும்
சிதறிக் கிடக்கும் காட்சியோ?



வானம் என்னும் பந்தலில்
வண்ணத் தீபக் காட்சியோ?
நானும் நீயும் பார்க்கிறோம்
நமக்கு ஒன்றும் தெரியல்லே!

— ஆர். செழியன் (11248), வேடசந்தூர்

சிரிக்கும் பாப்பா

சின்னப் பாப்பா சிரிக்கையிலே
சித்திரச் சோலை சிரிக்குதம்மா
சிட்டுக் குருவியும் அணிலும்கூட
வட்டம் போட்டுப் பாடுதம்மா

பொன்னுப் பாப்பா சிரிக்கையிலே
பூங்குயில் கூடச் சிரிக்குதம்மா



வண்ண மலர்கள் இதழ்விரித்து
வாய் கொள்ளாமல் நகைக்குதம்மா

கண்ணுப் பாப்பா சிரிக்கையிலே
கடலின் அலையும் சிரிக்குதம்மா
கண்ணைச் சிமிட்டி நட்சத்திரங்கள்
களிப்பைக் காட்டி நகைக்குதம்மா

அழகுப் பாப்பா சிரிக்கையிலே,
அன்னை மனமும் சிரிக்குதம்மா
உலக மெல்லாம் மறந்தோமம்மா
உள்ள மெல்லாம் குளிர்ந்ததம்மா.

— கஜிக் இக்பால், (13257),
சென்னை — 56.

குலம் ஒன்றே

மஜிதாவும் கிறிஸ்டியும் ஊஞ்சல் ஆடினர்
மாலாவும் பார்வதியும் பாட்டுப் பாடினர்
முருகனும் பீட்டரும் பந்து ஆடினர்
முத்தலிப்பும் அவர்களோடு சேர்ந்து ஆடினன்

எல்லோரும் தோட்டத்திலே பூப்பறித்தனர்
யாவும் சேர்த்து மாலையாகக் கட்டிவைத்தனர்
தூயவர்கள் புத்தர், ஏசு, காந்தி புகழினைத்
துதித்தே அவர்கள் மாலைபோட்டு
வணக்கம் செலுத்தினர்



கண்ணன் சொன்ன கீதைப்படி கடமை ஆற்றினர்
காந்தி சொன்ன நட்புறவைக் காத்து வந்தனர்
மண்ணில் பூத்த மலர்கள் சேர்ந்து மாலை ஆகுமே
மனித 'குலம் ஒன்றே' என்று சேர்ந்து வாழ்வோமே!

— எம். சார்லஸ் டேனி (12478),
டிப்டேல்.

இருந்தால்



கையிலே குடையிருந்தால்
கனமழையில் செல்லலாம்
காலிலே செருப்பிருந்தால்
கடும் வெயிலில் நடக்கலாம்
பையிலே பணம் இருந்தால்
நினைத்ததெல்லாம் வாங்கலாம்
பாட்டிலே பொருள் இருந்தால்
தாளம் போட்டுப் பாடலாம்.

— க. தேவசேனா, (4647), சூரியநல்லூர்.

ஓர் உதவி

முள்ளம்பன்றி: முதுகை அரிக்கிறது. கொஞ்சம் சொறிஞ்சு விடறியா?


குரங்கு: ......?

— ஜெ. ரங்கநாதன் (9378),
தூத்துக்குடி — 2.



கடவுளின் தூதன்

எஸ். நளினி (6719)



மணி 12.00. ரவி அலறினான். யாரோ அவனருகே நிற்பது போலிருந்தது. கண் விழித்துப் பார்க்கப் பயமாயிருந்தது. திடீரென்று ஒரு குரல் 'ஹா....! ஹா....!' என்று பயங்கரமாகச் சிரித்தது. ரவி கண்களை இறுக மூடிக் கொண்டான். அந்தக் குரல் திரும்பவும் பேசியது. ''டேய் பையா! உன்னை நான் விழுங்கப் போகிறேன். நீ என் கேள்விகளுக்குப் பதில் சொன்னாயானால் விட்டு விடுவேன். உம்.... கண்ணைத் திற!'' என்று உறுமியது. ரவி அச்சத்துடன் கண்ணைத் திறந்தான். திடுக்கிட்டு எழுந்தான்.

அவன் எதிரே.......

ஒரு பயங்கரமான உருவம் நின்று கொண்டிருந்தது. அவன் கண்கள் தாமாகவே பயத்துடன் மூடிக் கொண்டன. திரும்பவும் அந்தக் குரல் பேசியது.

''நீ இப்போது என் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறாயா? இல்லை.... நான் உன்னை விழுங்கட்டுமா?''

ரவி சட்டெனக் கண்களைத் திறந்தான். அவனுக்கு உயிர் மேல் நிரம்ப ஆசை. அந்த உருவம் தன்னை விழுங்கி விட்டால் உயிர் போய்விடுமே! பேச பயமாயிருந்தது. ''நீ..... நீ யார்?'' என்று குழறினான்.

கடகடவென்று சிரித்த அந்த உருவம், ''நான் தீயவர்களைத் திருத்துபவன். திருந்தாதவர்களை அப்படியே எடுத்து விழுங்குபவன்! நான் 'கடவுளின் தூதன்' என்றது.

ரவி, ''நீ.... நீ.... இப்போது இங்கே எதற்காக வந்தாய்? இங்கு யாரும் தீயவர்கள் இல்லையே!'' என்றான்.

''உன்னைத் தவிர வேறு யாரும் இங்கில்லை. அதனால்தான் உன்னிடம் வந்திருக்கிறேன். உன்னை விழுங்கவா? இல்லை, திருந்துவாயா?''

''நான்.... நான் என்ன தவறு செய்தேன்? அப்படி எதுவும் செய்ததாக எனக்குத் தெரியவில்லையே!'' பயத்தினால் அவன் உடலுடன் குரலும் நடுங்கியது.

''ஹா.... ஹா.... நீயா! நீ.... நீ தப்பு செய்யவில்லையா? ஒன்றா? இரண்டா? எத்தனை தப்பிதங்கள் செய்திருக்கிறாய்? உனக்கே தெரியவில்லையா?

சொல்லட்டுமா உன் தவறுகளை!''

''சொ..... சொ..... சொல்.''

''பெரியவர்களை மதியாமை, அம்மாவை எதிர்த்துப் பேசுதல், பொய் பேசுதல், பிறர் பொருளைக் கவர்தல், உன்னை விட முதியவர்களை அடித்துத் துன்புறுத்துதல், தந்தைக்குத் தெரியாமல் காசு எடுத்தல்.... இவையெல்லாம் தவறுகள் இல்லையா?''

''என்ன.... இவையும் குற்றங்களா? சரி.... இவையெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?''

''நான் எப்போதும் உன் நிழல் போல் உன்னைத் தொடர்பவன். சரி, அது போகட்டும். என் கேள்விகட்குப் பதில் சொல்கிறாயா?''

''ம்.... சொல்கிறேன்.''

''நீ ஏன் பெரியவர்களை மதிப்பதில்லை?''

''அவர்கள் என்னை அடிக்கிறார்கள். அதனால்தான்.''

''ஏன் அடிக்கிறார்கள்?''

''அது.... அது.... தெரியவில்லை.''

''நீ தவறு செய்வதால்தானே அடிக்கிறார்கள்? உன் நன்மைக்குத்தானே? அது தவறா?''

''இல்லை....''

''சரி, போகட்டும், விடு. ஏன் பொய் பேசுகிறாய்?''

''நான் மட்டும்தான் பொய் பேசுகிறேனா? எல்லோரும்தான் பேசுகிறார்கள்.''

''எல்லாரும் விழுகிறார்கள் என்று பாழுங் கிணற்றில் விழுவாயா?''

''மாட்டேன்.''

''சரி, ஏன் காசு எடுக்கிறாய்?''

''என்னை விடச் சிறியவளான என் தங்கைக்கு மட்டும் கொடுக்கும்போது எனக்கு மட்டும் கொடுக்க மறுக்கிறார்கள். அதனால்தான் எடுக்கிறேன்.''

''உன்னை விடச் சிறியவள்தானே உன் தங்கை?''

''ஆமாம்.''

''நீ பெரியவன்தானே?''

''ஆமாம்.''

''பெரியவர்கள் சிறியவர்களுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாதா? பெருந்தன்மையல்லவா அது?''

''ஆமாம்.''

''பின்னாய், நான் நானே இரவு



மீண்டும் வருவேன். அப்போதுதான், உனக்குரிய தண்டனையை அளிப்பேன். அது நீ நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்தது. வருகிறேன்.

○ ○ ○ ○ ○

"ஏன் ரவி? சாப்பிடாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாய்?"

"ஒன்றுமில்லையம்மா. அம்மா..."

"ம்...."

"என்னை மன்னித்து விடுங்கள்!"

"எதற்கு?"

"அப்பா! என்னை நீங்களும் மன்னியுங்கள்."

"எதற்கு ரவி?"

"சுந்தரி! எனக்கு ஒரு முத்தம் தா! பார்க்கலாம்!"

"போ... மாத்தேன். நீதான் என்னை அடிப்பியே!"

"இல்லம்மா! அண்ணா உன்னை இனிமே அடிக்கவே மாட்டேன்."

"சரி. அப்படின்னா இந்தா முத்தம்."

"நான் ஸ்கூலுக்குப் போறேம்மா. அப்பா போயிட்டு வரேன். சுந்தரி டாடா!"

"டாடா!"

அப்பாவும் அம்மாவும் ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துச் சிரிக்கின்றனர்.

☆ ☆ ☆ ☆ ☆

டாண்.... டாண்.... டாண்!

கடிகாரம் 12 முறை அடித்து ஓய்ந்தது. ரவி கொட்டக் கொட்ட விழித்தபடி படுக்கையில் அமர்ந்திருக்கிறான்.

அந்தப் பயங்கர உருவம் வந்தது. ரவியைப் பார்த்தது. "உன் கடைசி ஆசை ஏதுவாவது இருந்தால் நிறைவேற்றிக் கொள். உன்னை விழுங்குவது என்று முடிவு செய்துவிட்டேன்."

ரவி கண்கலங்க நாத் தழுதழுக்க, "என் பெற்றோரை வணங்கி விடை பெறவும் என் தங்கைக்குக் கடைசி முத்தம் தரவும் விரும்புகிறேன்."

"சரி.... சீக்கிரம்...."

ரவி கண்களில் கண்ணீருடன் தன் தங்கைக்கு முத்தங்கள் தந்தான். தூங்கிக் கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு அழலாயிற்று. "என்ன சுந்தரி, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே அம்மா எழுந்தாள். கூடவே அப்பாவும் எழுந்தார். குழந்தையின் பக்கத்தில் கண்ணீருடன் ரவி நிற்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

ரவி அவர்களை நோக்கி, "அம்மா! அப்பா! நான் திருந்திவிட்டேன். ஆனால் உங்களுடன் திருந்திய பிறகு வாழ இயலவில்லை. அந்தப் பாக்கியம் எனக்கு இல்லை. என்னை மன்னித்து விடை கொடுங்கள்" என்று அழுது கொண்டே கூறி அவர்களின் கால்களில் விழுந்தான். அவர்கள் இருவரும் ஆனந்தக் கண்ணீருடன் அவனை ஆசீர்வதித்தனர்.

அப்போது அங்கே வந்த அந்த உருவம் "ரவி! நீ திருந்திவிட்டாய் அல்லவா? இனிமேல் நீ நல்ல பையனாக நடப்பாயா?" என்றது.

"நிச்சயம் நடப்பேன். என்னை விழுங்கிவிடாதே!"

"சரி, இனி உன்னை நான் விழுங்க மாட்டேன். விழுங்கவும் என்னால் முடியாது. ஏனெனில் நான் உன்..."

"மாமா, நீங்களா?"

"ஆமாம் ரவி. நானேதான்! நீ திருந்துவதற்காகவே நாங்கள் இப்படியொரு நாடகம் ஆடினோம்."

"மாமா, அம்மா, அப்பா, உங்கள் அனைவருக்கும் என் நன்றி. நாடகம் என்றாலும் நான் திருந்திவிட்டேன். இனி நல்லவனாக நடப்பேன்."

மாமா ரவியை முதுகில் தட்டிவிட்டுச் சிரித்தார். அப்பா, அம்மா இருவரும் சிரித்தனர். ரவியும் சிரித்தான். அண்ணன் சிரிப்பதைப்பார்த்துசுந்தரியும் சிரித்தாள்.

அங்கே மகிழ்ச்சி பொங்கியது. ரவி நல்ல பையன் என்ற பெயர் எடுத்து விட்டான் இப்போது.



Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Gundy, Madras—600032. (Phone 431543) Editor: K. Rajendran.



வி.வி.கிரி

தோற்றம் : 10-8-1894 மறைவு : 24-6-1980

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka



மான்டிசோரி அம்மையார்

தோற்றம்: 31-8-1870 மறைவு: 6-5-1952